# பொருளியல்

## தரம் 13

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

(2010 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)

வணிகக் கல்வித்துறை
விஞ்ஞான தொழினுட்ப பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

பொருளியல்
தரம் 13 - ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி
முதல் பதிப்பு - 2010

© தேசிய கல்வி நிறுவகம்

ISBN

வணிகக் கல்வித்துறை
விஞ்ஞான தொழினுட்ப பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

இணையத்தளம் : www.nie.lk

பதிப்பு:

# முகவுரை

தேர்ச்சிகளை அடித்தளமாகக் கொண்ட கலைத்திட்டத்தைப் பாடசாலை முறைமையில் அறிமுகம் செய்யும் பணி 13ஆந் தரத்துக்குரிய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை அறிமுகம் செய்வதுடன் பூர்த்தியடைகின்றது. 12ஆம் 13ஆந் தர மாணவ மாணவியர்கள் பல்கலைக்கழகப் பிரவேசத்துக்காக நிலவும் கடுமையான போட்டிக்கு உள்ளாவதால் நிதமும் கணிசமான அழுத்தத்துக்கு ஆளாகின்றனர். க.பொ.த. உயர் தரத்துக்காக புதிய கலைத்திட்டத்தை முதல் தடவையாகப் பயன்படுத்தும் நிலையில் அவ்வழுத்தம் மேலும் அதிகரிக்கும். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் உங்களது கைகளை அடையும் இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது பாடத்திட்டத்தைப் போன்றே முக்கியமானதாகும். இங்கு ஆசிரியர் முதன்மையாகக் கவனத்திலெடுக்க வேண்டிய மூன்று அம்சங்கள் உள்ளன. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் பாடத்திட்டத்துடன் முழுமையாகப் பொருந்தியமைந்திருத்தல், கலைத்திட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடிப்படையாகக்கொண்டு, கலைத்திட்டத் தத்துவத்தையும் தூரநோக்கையும் முதன்மையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டிருத்தல், 12ஆம் 13ஆந் தர மாணவர்களிடத்தே எதிர்பார்க்கப்படும் அடைவு மட்டத்தை மனதிற்கொண்டு தயாரிக்கப்பட்டிருத்தல் ஆகியனவே அவையாகும். எனவே இதனை நன்கு உசாவுதல் ஆசிரியரின் இன்றியமையாத பணியும் பொறுப்புமாகும்.

மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்களையும் உங்களது கவனத்துக்குக் கொண்டு வருதவற்காகத் தேசிய கல்வி நிறுவகம் 13ஆந் தரத்தில் கற்பிக்கும் சகல ஆசிரிய ஆசிரியைகளுக்கும் உரிய பயிற்சியை வழங்கும் பணிகளையும் செய்து வருகின்றது. தொடர்ச்சியாக நடத்தப்படும் இப்பயிற்சி அமர்வுகளில் ஆசிரியர்கள் பங்குபற்றுவது இன்றியமையாததாகும். இங்கு தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் கோட்பாடுகள், செயன்முறைகளை விளங்கிக்கொள்வதற்கு அப்பயிற்சி பெரிதும் துணையாக அமையுமென்பதே அதற்கான காரணமாகும். குறிப்பாகப் பாடசாலை மட்ட மதிப்பீட்டுச் செயற்பாடுகளைத் தேர்ச்சி விருத்திக்குத் துணையாகக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. கற்பித்தலைப் பாட விடங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்திவிடாது மாணவ மாணவியரது திறன்களுக்கு மெருகூட்டுதல் எனும் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு இவ்வெல்லாத் தலையீடுகளும் இன்றியமையாதவையாகும் என்பதை கல்வி மற்றும் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடும் நாம் அனைவரும் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரிக்கும் சிரமமிக்க பணியை நிறைவு செய்வதில் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகக் கல்விசார் பணியணியினர் உட்பட ஏனைய சகல பணியணியினருக்கும் வெளிவாரியாகப் பங்களிப்புச் செய்த கல்விமான்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி உரித்தாகும்.

**கலாநிதி உபாலி எம். சேதர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

# முன்னுரை

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி 2009ஆம் ஆண்டு தொடக்கம் 13ஆம் தரத்திற்குரிய கற்றல்-கற்பித்தல் செயன்முறையை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு உங்களுக்குத் துணையாக அமையும். இந்த வழிகாட்டி நூலைத் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட பாடத்திட்டம் இதுவரையில் நடைமுறையிலிருந்த பாடத்திட்டங்களிலிருந்து வேறுபட்டது. இது தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட பாடத்திட்டமாக அமைந்திருப்பதே அவ்வேறுபாடாகும். இங்கு தரப்பட்டுள்ள தேர்ச்சிகளை இத்தரத்திலேயே அடைய முடியாமற் போக இடமுண்டு. சிலவேளை, அதற்காக நீண்டகாலம் எடுக்கலாம். எனினும், தேர்ச்சி மட்டங்களையும் அந்தத் தேர்ச்சி மட்டத்தின் கீழ்த் தரப்பட்டுள்ள கற்றற் பேறுகளையும் இத்தரம் முடிவடைவதற்குள் அடைதல் அவசியமாகும். எனவே, இத்தரத்திற்குரிய பாடங்களைத் திட்டமிட்டுக் கொள்வதற்கு அத்தேர்ச்சி மட்டங்களும் கற்றற்பேறுகளும் துணையாகும்.

இக்கற்றற்பேறுகளைக் கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் குறிக்கோள்களை வகுத்துக் கொள்வதற்கும் வகுப்பறை மதிப்பீட்டுக் கருவிகளைத் தயாரித்துக் கொள்வதற்குமான நியதிகளாகப் பயன்படுத்துவது குறித்துக் கவனம் செலுத்துவீர்கள் என எதிர்பார்க்கிறோம். மேலும் இப்பாடத்தைப் பயிலும்போது உசாவுவதற்குரிய மேலதிக நூல்கள், இணைய வலைக் கடப்பிடங்கள் (Web Site) முதலானவை குறித்து மாணவர்களுக்கு அறிவூட்டம் செய்வதற்கு இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி துணையாக அமையும்.

நீங்கள் ஆக்கபூர்வமான ஆசிரியராகச் செயற்படுவீர்கள் எனும் எதிர்பார்ப்புடனேயே உத்தேச செயற்பாடுகள் இங்கு மாதிரிச் செயற்பாடுகளாகத் தரப்பட்டுள்ளன என்பதைக் கருத்திற் கொள்ளுங்கள். குறிப்பாக ஆசிரியர் - மைய வகுப்பறைச் செயன்முறையை மாற்றி மாணவர் - மையச் செயன்முறையாக அமைத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, மாணவரை நூல் உசாவுகை, இணையப் பயன்பாடு முதலான தேடல்களில் கவனம் செல்லத்தக்கவாறு கற்றல் வாய்ப்புக்களை உருவாக்குவது குறித்து மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

கற்பித்தலின்போது மரபு ரீதியான முறையில் குறிப்பு வழங்குவதற்குப் பதிலான கவர்ச்சிகரமான வகையில் புத்தறிவு, கோட்பாடுகள் முதலானவற்றை முன்வைத்தல் வேண்டும். அதற்காக இப்புதிய வகுப்பறையில் தொழில்நுட்பத்தை உச்சளவில் உபயோகப்படுத்தும் தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்துவது குறித்துக் கவனம் செலுத்த வேண்டும். எனவே, புதிய தொழில்நுட்பச் சாதனங்களை இன்றளவுக்கு ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவது அவசியமாகும்.

13ஆம் தரத்தில் இப்பாடத்தைக் கற்கத் தொடங்கும் உங்கள் மாணவர்களுக்கு இப்பாடத்திட்டம் குறித்துத் தெளிவுபடுத்துவது பயனுடையதாகும். வருடத்துள் நடைமுறைப் படுத்த எதிர்பார்க்கும் உங்களது கற்றல்-கற்பித்தல் திட்டத்தை அறிமுகஞ் செய்வதால் கற்றலின்பால் அம்மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டலாம். மேலும் முழுப் பாடத்தையும் கற்பதற்காக மாணவர்களைப் பாடசாலையின்பால் ஈர்ப்பதற்கும் அது துணையாகும். புதிய கலைத்திட்ட மறுசீரமைப்பினூடாக வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயன்முறையில் தெள்ளத் தெளிவாக மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக இப்பாடத் திட்டத்தையும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியையும் பயன்படுத்தி உங்களது ஆக்கத் திறனை விருத்தி செய்துகொள்ளுமாறு வேண்டுகிறேன்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரிப்பதில் பங்களிப்புச் செய்த கல்விமான்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தேசிய கல்வி நிறுவக அதிகாரிகளுக்கும் எனது விசேட நன்றியைத் தெரிவிக்கின்றேன். இப்பணியில் வழிகாட்டல் வழங்கிய பணிப்பாளர் நாயகம் கலாநிதி உபாலி எம். சேதர அவர்களுக்கும் அச்சிட்டுப் பாடசாலைகளுக்கு விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள கல்வி வெளியீட்டு ஆணையாளர் உட்பட ஏனைய பணியாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். இதில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை எனக்கு அனுப்பி வைப்பீர்களாயின் நன்றியுடையவனாவேன்.

**விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர் நாயகம்
கலைத்திட்ட அபிவிருத்திப் பீடம்.
தேசிய கல்வி நிறுவகம்

# கல்வி வெளியீட்டு ஆணையாளரின் செய்தி

## எழுத்தாளர் குழு

**வழிகாட்டல் : கலாநிதி உபாலி சேதர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

**ஆலோசனை : தேசமான்ய கலாநிதி ஐ. எல். கினிகே**
உதவிப் பணிப்பாளர் நாயகம் (ஓய்வு பெற்ற)
விஞ்ஞான தொழில் நுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்.

**நெறிப்படுத்தல் : திரு. விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், சமூகவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்.

**இணைப்பாக்கம்: திரு. டீ.எல்.சீ. ருவன் அஜித் குமார**
உதவிச் செயற்றிட்ட அதிகாரி, வணிகக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்

**பாடத்திட்டக் குழு:**

**பேராசிரியர். திரு. டெனீ அதபத்து**
- துறைத் தலைவர், பொருளியல் துறை, றுகுணு பல்கலைக்கழகம்

**கலாநிதி திரு. அத்துல ரணசிங்க**
- துறைத் தலைவர், பொருளியல் துறை, கொழும்பு பல்கலைக்கழகம்

**கலாநிதி திரு. எம். கணேஷமூர்த்தி**
- சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியல் துறை, கொழும்பு பல்கலைக்கழகம்

**திரு. ஈ. தயாரத்ன**
- துறைத் தலைவர், வணிகத் துறை, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

**கலாநிதி திரு. எஸ். டப்ளியு. ஹிரன்த**
- சிரேஷ்ட விரிவுரையாளர், வணிகக் கற்கை துறை, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

**கலாநிதி திருமதி. அனோமா அபேரத்ன**
- துறைத் தலைவர், பொருளியல் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

**கலாநிதி. திரு. டீ.ஏ.சீ.டி. சில்வா**
- சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியல் துறை, கொழும்பு பல்கலைக்கழகம்

**திருமதி. எஸ்.என்.கே. மல்லிகாரச்சி**
- சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியல் துறை, கொழும்பு பல்கலைக்கழகம்

**திரு. டீ.எஸ்.லியன ஆரச்சி**
- சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியல் துறை, கொழும்பு பல்கலைக்கழகம்

**கலாநிதி. திரு. ஏ.சிவனேசராஜா**
- பிரதம செயற்றிட்ட அதிகாரி, வணிகக் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்

**திரு. ஏ.பீ. விஜேசூரிய**
- பிரதம செயற்றிட்ட அதிகாரி, வணிகக் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்

**திரு. எஸ்.கே. பிரபாகரன்**
- செயற்றிட்ட அதிகாரி, வணிகக் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்

**திருமதி. எம்.ஏ.ஐ. பத்மினி**
- செயற்றிட்ட அதிகாரி, வணிகக் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்
**திரு. டீ.எல்.சீ. ருவன் அஜித் குமார**
- உதவி செயற்றிட்ட அதிகாரி, வணிகக் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்
**திரு. எஸ்.ஆர்.ரத்னஜீவ**
- உதவி செயற்றிட்ட அதிகாரி, வணிகக் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்

**பதிப்பாளர் குழு:**
**பேராசிரியர். திரு. டெனீ அதபத்து**
- பிரிவுத் தலைவர், பொருளியல் துறை, றுகுணு பல்கலைக்கழகம்
**கலாநிதி திரு. எம். கணேஷமூர்த்தி**
- சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியல் துறை, கொழும்பு பல்கலைக்கழகம்
**கலாநிதி. திரு. ஏ.சிவனேசராஜா**
- பிரதம செயற்றிட்ட அதிகாரி, வணிகக் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்
**திரு. ஏ.பீ. விஜேசூரிய**
- பிரதம செயற்றிட்ட அதிகாரி, வணிகக் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்
**திருமதி. எம்.ஏ.ஐ. பத்மினி**
- செயற்றிட்ட அதிகாரி, வணிகக் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்
**திரு. எஸ்.கே. பிரபாகரன்**
- செயற்றிட்ட அதிகாரி, வணிகக் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்
**திரு. டீ.எல்.சீ. ருவன் அஜித் குமார**
- உதவி செயற்றிட்ட அதிகாரி, வணிகக் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்
**திரு. எஸ்.ஆர்.ரத்னஜீவ**
- உதவி செயற்றிட்ட அதிகாரி, வணிகக் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்

**எழுத்தாளர் குழு:**
**திரு. ஏ.எச.எம்.ஆர்.பீ. அபயரத்ன**
- ஓய்வு பெற்ற பணிப்பாளர், வணிகக் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்
**திரு. எஸ்.என.எச்.எம். விஜேரத்ன பண்டா**
- பதில் பணிப்பாளர் (கல்வி), மனிதவள முகாமைத்துவ நிறுவகம்
**திருமதி. அஜன்தா விதாரண**
- பதில் அதிபர், கோதமி பெண்கள் கல்லூரி, கொழும்பு
**திரு. டப்ளியு. லயனல்**
- இலங்கை ஆசிரியர் சேவை, தர்மபால மகா வித்தியாலயம், கொட்டாவ
**திருமதி. ஏ.எம்.எப். மதனியா**
- பதில் கல்விப் பணிப்பாளர், தென் மாகாண கல்வித் திணைக்களம்
**திரு. கே.பீ. கருணாரத்ன**
- இலங்கை ஆசிரியர் சேவை, விஜயபா தேசிய பாடசாலை, ஹுன்கம
**திருமதி. எம்டீ. பத்மினி**
- இலங்கை ஆசிரியர் சேவை, புனித தோமஸ் உயர் பெண்கள் கல்லூரி, மாத்தறை
**திருமதி. கே.பீ. சந்திரலதா**
- இலங்கை ஆசிரியர் சேவை, ஆனந்த கல்லூரி, கொட்டாவ
**திருமதி. தமாரா டீ. காரியவசம்**
- இலங்கை ஆசிரியர் சேவை, சங்கமித்தா பெண்கள் கல்லூரி, காலி

**திருமதி. ஐ.பீ.என். பத்மினி**
- இலங்கை ஆசிரியர் சேவை, புனித தோமஸ் பெண்கள் பாடசாலை, கேகாலை
**திருமதி. ஹசீனா முசாதிக்**
- இலங்கை ஆசிரியர் சேவை, திருக்குடும்ப கன்னியர் மடம், பம்பலப்பிட்டிய, கொழும்பு
**திரு. கே.டீ. ஸமரசிங்க**
- இலங்கை ஆசிரியர் சேவை, வலிசிங்க ஹரிஸ்சந்திர கல்லூரி, அநுராதபுரம்
**திரு. எச்.எம். விக்ரமரத்ன**
- இலங்கை ஆசிரியர் சேவை, சித்தார்த மகா வித்தியாலயம், அம்பிட்டிய
**திரு. பீ.என். திலகரத்ன**
- இலங்கை ஆசிரியர் சேவை, சரசவி உயன மகா வித்தியாலயம், பேராதனை
**திரு. ஏ.எம்.சி.எம். அதிகாரி**
- இலங்கை ஆசிரியர் சேவை, வேதர மகா வித்தியாலயம், வேதர
**திரு. சாலியபால பொல**
- இலங்கை ஆசிரியர் சேவை, மகானாம மகா வித்தியாலயம், கண்டி
**திரு. கே.என். நிஷாந்த சாலிந்த**
- இலங்கை ஆசிரியர் சேவை, எம்பலிபிட்டிய மத்திய மகா வித்தியாலயம், எம்பிலிபிட்டிய
**திரு. எச்.கே.ஏ. பத்மசிரி**
- இலங்கை ஆசிரியர் சேவை, துட்டுகெமுனு மத்திய மகா வித்தியாலயம், புத்தலை

**கணினி பதிப்பும் வடிவமைப்பும் : எப்.ஏ.எப். நிஸ்மியா**
தொழிநுட்ப உதவியாளர்
தேசிய கல்வி நிறுவகம்

**காரியாலய உதவி : திருமதி. யமுனா பீ. ஹேவாவிதாரனை**
**திருமதி. புஷ்பா அமரசிங்க**
வணிகக் கல்வித் துறை

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி (முகவுரை) | iii |
| உதவிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி (முன்னுரை) | iv-v |
| கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி | vi |
| எழுத்தாளர் குழு | vii-ix |
| ஆசிரியர் வழிகாட்டல் தொகுப்பை பரிசீலிப்பதற்கான அறிவுறுத்தல்கள் | xi |
| கற்றல் பேறும் மாதிரிச் செயற்பாடுகளும் | 1-146 |
| பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு முறைகள் | 147 |
| அறிமுகம் | 148-149 |
| கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டு உபகரணங்கள் | 150-157 |
| உசாத்துணைகள் | 158 |

# ஆசிரியர் வழிகாட்டல் தொகுப்பினை பரிசீலனை செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

2009ஆம் ஆண்டிலிருந்து கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு செயல்படுத்துவதற்கு பொருளியில் பாடத்திட்டமானது தேர்ச்சி மட்டங்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டத்தில் ஆண்டு 13 இற்கு 7 முதல் 12 வரையான தேர்ச்சி மட்டங்கள் உள்ளடக்கப்படும் வகையில் இவ்வாசியர் வழிகாட்டல் தொகுப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டத்தின் மூலம் பொருளியல் பாடத்துடன் தொடர்புடைய அறிவு மட்டுமின்றி, அதனடிப்படையில் மனப்பான்மை, திறமை, பழக்க வழக்கம் என்பவற்றை விருத்தி செய்து ஒழுகுவதும் எதிர்பார்க்கப்படும்.

இந்நோக்கங்களை மனதில் கொண்டு மாணவர்களின் தேர்ச்சி மட்டங்களை விருத்தியாக்கும் வகையில் உங்கள் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை திட்டமிடல் வேண்டுமென எதிர்பார்க்கப்படும். இந்த வகையில் உங்களுக்கு வழிகாட்டல் என்ற வகையில் இங்கு பல்வேறு வகையான மாதிரிச் செயற்பாடகள் உள்ளடக்கப்பட்டள்ளன.

இவ்வாசிரியர் வழிகாட்டல் தொகுப்பானது வகுப்பறையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறவேண்டிய ஒழுங்குமுறையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள எல்லா தேர்ச்சி மட்டங்களுக்கும் கற்றல் பேறு முன்வைக்கப்பட்டுள்ளது. அக்கற்றல் விளைவுகளுக்கும் அவற்றுடன் தொடர்புடைய தேர்ச்சி மட்டங்களுக்கும் எல்லா மாணவர்களும் அண்மிக்கும் வகையில் மாணவர்களை மையமாகக் கொண்ட கற்றல் - கற்பித்தல் செயற்பாடானது உங்களால் வழிகாட்டல் வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட பல்வேறான தேர்ச்சி மட்டங்களுக்கு **பிரவேசமும் கற்பித்தலுக்குான அறிவுறுத்தல்களும்** முன்வைக்கப்பட்டுள்ளன. இவ் அறிவுறுத்தல்களை அவ்வாறே பின்பற்றுவது அவசியமானது என எதிர்பார்க்கப்படுவதில்லை. அத்துடன் மாணவர்களின் தேர்ச்சிகளை விருத்தி செய்யும் முறையில் மாணவர்களை மையமாகக் கொண்ட வேறு பொருத்தமான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஆக்கபூர்வமான முறையில் முன்வைக்க உமக்கு பூரண சுதந்திரம் உண்டு.

இவ்வாறே ஒவ்வொரு தேர்ச்சி மட்ட இறுதியிலும் ''பாட விடயங்களை தெளிவுபடுத்துவதற் கான வழிகாட்டல் இவ்வாசிரியர் வழிகாட்டல் தொகுப்பில் முன்வைக்கப்பட்டுள்ளது. அவை நீங்கள் வகுப்பறையில் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்த வேண்டியதற்கும், மாணவர்களுக்கு குறிப்புகளை வழங்குவதற்கும் பாட விடயங்களுக்கு ஒரு வழிகாட்டலாக அமைகின்றன.

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிற்கு **பிரவேசம்** அல்லது கற்றலுக்கான அறிவுறுத்தல்கள் முன்வைக்கப்படாத தேர்ச்சி மட்டங்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. அத்தேர்ச்சி மட்ங்களுக்காகவும் பொருத்தமான பிரவேசமும், பொருத்தமான கற்றலுக்கு அறிவுறுத்தல்

பத்திரத்தையும் தயாரித்து, மாணவர்களை செயற்பாடு ரீதியாக கற்றலில் ஈடுபடுத்தும் முறையில் மாணவர்களை மையமாகக் கொண்ட கற்றல் - கற்பித்தல் செயற்பாடொன்று வகுப்பறையில் மேற்கொள்ள வேண்டுமென நீங்கள் அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

பாடத்திட்டத்தில் ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள பாட வேளைகளின் எண்ணிக்கையை விட கூடுதலான பாடவேளைகள் காணப்படுவதுடன் அவை மாணவர்களின் தேர்ச்சி மட்டங்களை விருத்தியாக்குவதற்கு பொருத்தமான நிகழ்ச்சிகளுக்காக மீள வலியூட்டல் நிகழ்ச்சி மதிப்பீட்டு முறைகளை பயன்படுத்த முடியும்.

பொருளியலானது மனிதனுக்கு மிகவும் சமீபமானதும் அன்றாட வாழ்வுடன் தொடர்புடைய பாடமாக இருப்பதனால் உங்கள் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை திட்டமிட்டு செயற்படுத்தும் போது அது தொடர்பாக கவனத்தை செலுத்துவதன் மூலம் உள்நாட்டு, வெளிநாட்டு பொருளாதார செயற்பாடுகள், மாற்றங்கள் தொடர்பாக கவனிப்பதன் மூலமும் இப்பாடத்தை மாணவர்களிடம் மிகவும் பிரபல்லியமான பாடமாக மாற்ற முடியும்.

**தேர்ச்சி 7** : பேரினப் பொருளாதார செயற்பாட்டை பாதிக்கும் விலைமட்ட மாற்றங்களை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : பொது விலை மட்டத்துடன் தொடர்புடைய அளவீடுகளை விளக்குவர்.

**பாடவேளை** : 05

**கற்றற் பேறுகள்** :
- பொது விலை மட்டத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.
- விலை சுட்டெண்ணை வரைவிலக்கணப்படுத்துவார்.
- வழங்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு விலை சுட்டெண்ணை தயாரிப்பார்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

**பிரவேசம்** :
- கடந்த தவணைப் பரீட்சைகளில் மாணவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு சராசரியை கணிப்பீடு செய்ய அறிவுறுத்தல் வழங்குக.
- புள்ளிகளின் சராசரி பெறப்பட்ட முறை தொடர்பாக மாணவர் களிடம் கருத்துக்களைக் கேட்டறிக.
- பின்வரும் விடயங்களை வெளிப்படுத்தும் வகையில் கலந்துரை யாடல் ஒன்றை மேற்கொள்க.
    - ஒவ்வொரு பாடத்திற்குமான புள்ளிகளின் மொத்தத்தை பாடங்களின் எண்ணிக்கையால் பிரிப்பதன் மூலம் புள்ளிகளின் சராசரி பெறுமதியை பெற முடியும்.
    - இந்த அடிப்படையில் பொருட்களினதும் சேவைகளினதும் விலை மட்டங்களிலும் சராசரிப் பெறுமதியைக் கண்டுகொள்ள முடியும்.
    - நாடொன்றின் சகல பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை மட்டங்களின் சராசரிப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட விலை மட்டம், சராசரி விலை மட்டம், அல்லது பொதுவிலை மட்டம் என அழைக்கப்படும்.

**கற்றலுக்கான உத்தேச அறிவுறுத்தல்கள்:**

- பின்வரும் விலைகளை உள்ளடக்கிய அட்டவணைகளுள் உமது குழுவிற்கு கிடைத்த அட்டவணையின் மீது கவனத்தைச் செலுத்துக.

(1)

| **பொருள் வகை (Kg ஒன்றின் விலை ரூபா)** | **ஆண்டு** | | | | |
|---|---|---|---|---|---|
| | **2005** | **2006** | **2007** | **2008** | **2009** |
| அரசி | 35 | 40 | 42 | 45 | 48 |
| சீனி | 40 | 42 | 45 | 48 | 50 |
| கோதுமை மா | 25 | 30 | 32 | 35 | 38 |
| மொத்தம் | | | | | |

(2)

| **பொருள் வகை (Kg ஒன்றின் விலை ரூபா)** | **ஆண்டு** | | | | |
|---|---|---|---|---|---|
| | **2005** | **2006** | **2007** | **2008** | **2009** |
| கரட் | 40 | 43 | 45 | 47 | 49 |
| போஞ்சி | 35 | 37 | 39 | 40 | 42 |
| லீக்ஸ் | 25 | 27 | 28 | 30 | 32 |
| மொத்தம் | | | | | |

(3)

| **பொருள் வகை (Kg ஒன்றின் விலை ரூபா)** | **ஆண்டு** | | | | |
|---|---|---|---|---|---|
| | **2005** | **2006** | **2007** | **2008** | **2009** |
| அன்னாசி | 30 | 32 | 35 | 37 | 40 |
| தோடம்பழம் | 20 | 23 | 25 | 28 | 30 |
| மாதுளம்பழம் | 35 | 37 | 40 | 42 | 45 |
| மொத்தம் | | | | | |

- உமக்குக் கிடைத்த மூன்று பண்டங்களுக்குமான விலைகளின் கூட்டுத்தொகைகளை ஒவ்வொரு வருடத்திற்கும் கணிப்பிடுக.
- 2006, 2007, 2008, 2009 ஆகிய வருடங்களில் மூன்று பண்டங்களிலும் விலைகளின் கூட்டுத்தொகை 2005 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்த அல்லது குறைவடைந்த பெறுமதியை கணிப்பிடுக.
- இவ்வதிகரிப்பு அல்லது குறைவை மூன்று பண்டங்களின் 2005ஆம் ஆண்டு விலைகளின் கூட்டுத்தொகையின் ஒரு சதவீதமாகக் காட்டுக.
- ஒவ்வொரு வருடத்திலும் விலை மாற்றங்களின் சதவீதத்தை அதற்கு முன்னைய ஆண்டின் சதவீதத்துடன் ஒப்பிடுக.
- இத்தகவல்களின் உதவியுடன் நீர் பெறக்கூடிய முடிவுகளைக் குழுக்கலந்துரையாடல் மூலம் தீர்மானிக்க.
- நீர் திரட்டிக்கொண்ட தகவல்களை முழு வகுப்பிற்கும் ஆக்கபூர்வ மாக முன்வைப்பதற்கு தயாராகுக.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- பொது விலை மட்டம் என்பது எல்லாப் பொருட்களினதும் சேவைகளினதும் விலைகளை வெளிப்படுத்தும் ஒரு சுட்டி என்பது.
- இங்கு ஒவ்வொரு பண்டத்தினதும் ரூபா சதத்தினால் கூறப்பட்ட விலைகளை சாதாரணமாக கூட்டுவதன் மூலம் மட்டும் பொதுவிலை மட்டம் தொடர்பாக ஒரு அர்த்தமுள்ள பெறுமதியைப் பெற முடியாது.
- இதனால் ரூபா, சத பெறுமதிக்குப் பதிலாக சுட்டெண் மூலம் வெளிப்படுத்தப்படும் ஒரு பெறுமதியைப் பெற வேண்டும் என்பது.
- காலத்துடன் இணைந்ததாக மாற்றமடையக்கூடிய எந்த வகையான மாறியின் பெறுமதியையும் சுட்டெண் மூலம் வெளிப்படுத்த முடியும்.
- அடியாண்டுடன் ஒப்பிடுகையில் ஒவ்வொரு வருடத்திலும் பெறுமதிகள் மாற்றமடையும் முறையை சதவீத அடிப்படையில் வெளிக்காட்டுவதற்கு சுட்டெண் பயன்படுத்தப்படும்.
- அடியாண்டின் விலைச்சுட்டெண்ணை 100 எனக் கருதி ஏனைய வருடங்களில் பெறுமதிகள் எத்தகைய சதவீதத்தில் மாற்றமடைந்துள்ளது என்பதை அதன் மூலம் கணிப்பீடு செய்ய முடியும்.
- விலை ஒப்பீடுகளை பின்வரும் அட்டவணையின் துணையுடன் முன்வைக்க முடியும்.

| **பண்டம்** | **விலை ஒப்பீடு** | | |
|---|---|---|---|
| | **1ஆம் வருடம்** | **2ஆம் வருடம்** | **3ஆம் வருடம்** |
| I. அரிசி | 100 | 160 | 240 |
| II. கோதுமை மா | 100 | 150 | 200 |
| III. சீனி | 100 | 120 | 160 |
| மொத்தம் | 300 | 430 | 600 |
| சராசரி விலை (I+II+III)/3 | 100 | 143.3 | 200 |

- அடியாண்டுடன் ஒப்பிடுகையில் II ஆவது வருடத்தின் பொதுவிலை மட்டமானது 43% இனாலும் III ஆவது வருடத்தில் 100% இனாலும் அதிகரித்துள்ளது.

**தேர்ச்சி 7** : பேரினப் பொருளாதார செயற்பாட்டை பாதிக்கும் விலைமட்ட வேறுபாட்டை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 7.2** : இலங்கையின் சராசரி விலைமட்ட மாற்றத்தை அளவிடும் விலைச் சுட்டெண்களை ஆராய்வார்.

**பாடவேளை** : 08

**கற்றற் பேறுகள்** :
- பொது விலைமட்டத்தை அளவிட இலங்கையில் பயன்படுத்தப்படும் விலைச்சுட்டெண்களை பெயரிட்டு விளக்குவார்.
- ஒவ்வொரு விலைச்சுட்டெண்ணினதும் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவார்.
- இலங்கையில் சராசரி விலை மட்டத்தை அளவிடுவதற்குப் பயன் படுத்தப்படும் விலைச்சுட்டெண்களின் குறைபாடுகளை கலந்துரை யாடுவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- இலங்கையில் பொது விலை மட்டத்தைக் கணிப்பீடு செய்ய பல வகையான சுட்டெண்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- இச்சுட்டெண்களில் சில நுகர்வோர் விலைச் சுட்டெண்களாகவும் இன்னும் சில மொத்த விலை மட்டங்களை அளவிடப் பயன்படுத்தப்படும் சுண்டெண்களாகவும் உள்ளன.
- தற்பொழுது இலங்கையில் பொதுவிலை மட்டத்தைக் கணிப்பீடு செய்ய புதிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், மொத்த விற்பனை விலைச் சுட்டெண், மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி என்பன பயன்படுத்தப்படுகின்றன.
- 2008 மே மாதத்திலிருந்து இலங்கையின் விலைச் சுட்டெண்ணாக அமைவது புதிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் ஆகும்.
- 1952 இலிருந்து இலங்கையின் உத்தியோகபூர்வ வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணாக கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டி காணப்பட்ட போதிலும் இதில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக புதிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அறிமுகப்படுத்தப்பட்டது.
- புதிய கொழும்பு நுகர்வோர் விலை சுட்டியின் அடியாண்டு 2002 ஆகும்.
- இச்சுட்டெண்ணானது குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபர திணைக்களத்தினால் மாதாந்தம் கணிப்பீடு செய்து அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்றது.

- புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டி கொழும்பு மாவட்டத்தில் உள்ள 1300 இற்கும் மேற்பட்ட வீட்டுத்துறையினரைப் பிரதிநிதித் துவப்படுத்துகின்றது.
- 2002 இல் வீட்டுத்துறையினரின் வருமான செலவின மதிப்பீட்டின் அடிப்படையில் புதிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் பண்ட வகைகள் தெரிவு செய்யப்பட்டு நிறையிடல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- புதிய விலை சுட்டெண்ணில் விலைகளை திரட்டும் நிலையங்கள் பின்வருமாறு அமைந்துள்ளன.

  புறக்கோட்டை, மருதானை, வெள்ளவத்தை, தெமட்டகொடை, கிறான்ட்பாஸ், பொறல்லை, கிருலபனை, தெஹிவளை, கோட்டை, நுகேகொடை, கொலன்னாவ, இரத்மலானை
- மேற்படி சந்தைகளிலிருந்து மாதாந்தம் திரட்டப்படுகின்ற விலை களின் பெயரளவு பெறுமதிகளை கணிப்பீடு செய்வதன் மூலம் சுட்டெண் தயாரிக்கப்படுகின்றது.
- அடிப்படையாண்டில் விலை செலுத்தி கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள், சேவைகளின் அளவு அதனுடன் தொடர்புடைய வேறொரு காலத்தில் கொள்வனவு செய்யப்படுமாயின் எவ்வளவு செலவை ஏற்கவேண்டியிருக்கும் என்பதை விலை சுட்டெண் தெளிவுபடுத்துகின்றது.
- இவ்விலை சுட்டெண்ணை தயாரிப்பதற்கு பின்வரும் சமன்பாடு பயன்படுத்தப்படுகின்றது.

$$\text{நுகர்வோரின் விலை சுட்டெண்} = \frac{\sum p_1 Q_0}{\sum p_0 Q_0} \times 100$$

$p_1$ = குறித்த வருடத்தில் சநதையில் நிலவிய விலை

$p_0$ = அடியாண்டில் சந்தையில் நிலவிய விலை

$Q_0$ = அடியாண்டில் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் அளவு

$\sum$ = மொத்தம்

- முழு இலங்கையினதும் செலவு நடத்தைகளை பிரதிநிதித்துவப் படுத்தாமை இச்சுட்டெண்ணின் ஒரு குறைபாடு ஆகும்.
- முதனிலை சந்தையில் விலைமட்ட மாற்றங்களை அளவீடு செய்ய இது பயன்படுத்தப்படுகின்றது.
- மத்திய வங்கி 1977 இல் மொத்த விலைச் சுட்டெண்ணை அறிமுகப் படுத்தியது.
- 1974 ஐ அடியாண்டாகக் கொண்டு பண்டத் தொகுதிகளை 13ஆகப் பிரித்து நிறையிடப்பட்டு சுட்டெண் தயாரிக்கப்பட்டுள்ளது.
- முதனிலை சந்தையில் விலைமட்ட மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு சில்லறை வியாபாரச் சந்தையில் விலை மட்டங்களை ஊகிக்க முடியும்.

- சேவைகள் உள்ளடக்கப்படாமை இதில் காணப்படும் ஒரு குறைபாடு ஆகும்.
- நிலையான விலையிலும் நடைமுறை விலையிலும் கணிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு உள்ளார்ந்த உற்பத்தி சுருக்கி தயாரிக்கப் படுகின்றது என்பது.
- ஒரே வருடத்தில் நிலையான விலைகளிலும் நடைமுறை விலையிலும் கணிப்பீடு செய்த மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதிக்கு இடையிலான விகிதத்தின் மூலம் விலை மாற்றமடைந்த அளவு வெளிப்படுத்தப்படுகின்றது.
- இவ்விகிதமானது சுருக்கி என்று அழைக்கப்படும.
- இவ்விகிதத்தை 100 ஆல் பெருக்கும்போது விலை சுட்டெண்ணாக பயன்படுத்த முடியும்.
- இதனை கணிப்பீடு செய்ய பின்வரும் சூத்திரம் பயன்படுத்தப் படுகின்றது.

$$\text{தேசிய உற்பத்தி சுருக்கி} = \frac{\text{குறித்த வருடத்தில் நடைமுறை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி}}{\text{குறித்த வருடத்தில் நிலையான விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி}}$$

- மொத்த உற்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்குப் பயன்படும் சகல பொருட்கள் சேவைகளினதும் விலைகளும் இங்கு உள்ளடக்கப்படுவதானது விசேட பண்பாகும்.

**தேர்ச்சி 7** : பேரினப் பொருளாதார செயற்பாட்டை பாதிக்கும் விலைமட்ட வேறுபாட்டை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 7.3** : பணவீக்கம் தொடர்பான எண்ணக்கருக்களை விளக்கி பணவீக்க வகைகளை ஆய்வு செய்வர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- பணவீக்கத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.
- பணவீக்கத்தை கணிப்பீடு செய்யப் பயன்படுத்தும் அளவீடுகளை முன்வைப்பார்.
- பணவீக்க வகைகளை பெயரிட்டு விளக்குவார்.
- பணவீக்கத்துடன் தொடர்புடையதாக முன்வைக்கப்படுகின்ற பல்வேறு எண்ணக்கருக்களை கலந்துரையாடுவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- பொருளாதாரத்தில் பொது விலை மட்டத்தில் தோன்றும் தொடர்ச்சியான அதிகரிப்பு பணவீக்கம் என அறியப்படும்.
- பொருளாதாரத்தில் பணவீக்கத்தின் அளவானது. ஒவ்வொரு பண்டத்தின் விலையில் ஏற்படும் மாற்றத்தினால் அல்லாமல், எல்லா பொருட்கள், சேவைகளினதும் விலைகளின் சராசரி பெறுமதியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.
- பொதுவிலை மட்டத்தில் உண்மையாக ஏற்படும் உயர்வு வெளிப் படையான பணவீக்கமாகும்.
- அடிப்படைப் பணவீக்கம் என்பது தற்காலிக விலை மாற்றங்களைக் குறித்துக் காட்டும் பொருட்டு செம்மையாக்கப்பட் பணவீக்க விதமாகும்.
- பணக் கொள்கை போன்ற கேள்வி முகாமைத்துவக் கொள்கை தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளும்போது அடிப்படைப் பணவீக்கம் தொடர்பாக கவனத்திற்கொள்ள வேண்டும் என்பது.
- சர்வதேச நியமங்களின் அடிப்படையில் இலங்கையும் அடிப்படை பணவீக்கத்தை கணிப்பீடு செய்வதற்கு உணவு, எரிபொருள் ஆகிய விடயங்கள் இரண்டையும் நீக்கியுள்ளது.
- பணவீக்க வேகத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்து செல்லும் பணவீக்கம், ஓடும் பணவீக்கம், பாயும் பணவீக்கம், அமுக்கிய பணவீக்கம், சுழல் பணவீக்கம் என பணவீக்கத்தை வகைப்படுத்தலாம்.
- பணவீக்க வேகமானது படிப்படியாக குறைவது பணவீக்கமின்மை யாகும்.
- பொருளாதாரத்தில் பொதுவிலை மட்டத்தில் தோன்றும் தொடர்ந் தேர்ச்சியான வீழ்ச்சி பணச்சுருக்கம் என்று குறிப்பிடப்படும்.

**தேர்ச்சி 7** : பேரினப் பொருளாதார செயற்பாட்டை பாதிக்கும் விலைமட்ட வேறுபாட்டை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 7.4** : பணவீக்கத்தை விளக்கும் பல்வேறான அணுகுமுறையின் அடிப்படையில் பணவீக்கத்தைப் பாதிக்கும் காரணிகளையும் அதன் விளைவுகளையும் ஆய்வு செய்வார்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- பல்வேறு அணுகுமுறைகளின் அடிப்படையில் பணவீக்கத்தைப் பாதிக்கும் கரணிகளை விளக்குவார்.
- பணவீக்கத்தின் விளைவுகளை விளக்குவார்.
- பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த பயன்படுத்தக்கூடிய நடவடிக்கை களை விளக்குவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- பணவீக்கத்தை பின்வரும் அணுகுமுறையின் கீழ் ஆய்வு செய்ய முடியும்.
  - கேள்வி தூண்டல் பணவீக்கம்
  - செலவுத் தூண்டல் பணவீக்கம்
  - அமைப்பு ரீதியான பணவீக்கம்
- வரையறுக்கப்பட்டளவு பண்டங்களின் பின்னே துரத்தும் அதிகள வான பணத்தின் காரணமாகக் கேள்வித் தூண்டல் பணவீக்கம் ஏற்படுகின்றது.
- கேள்வி அதிகரிப்பதற்கு நாணய விரிவாக்கம், அரச கடன்களின் அதிகரிப்பு, அரச செலவு உயர்வு என்பன காரணமாகும்.
- கேள்வித் தூண்டல் பணவீக்கக் கோட்பாட்டு அணுகுமுறைகள் பணக் கணியக் கோட்பாடு, கெயின்சின் கோட்பாடு என இரு வகைப்படும்.
- உள்ளீட்டு விலை உயர்வின் காரணமாக உற்பத்தி செலவு அதிகரித்து, பொருட்கள், சேவைகளின் விலை உயர்வதானது செலவுத் தூண்டல் பணவீக்கம் எனப்படும்.
- தேசிய வருமானப் பகிர்வை மேற்கொள்கையில் பல்வேறு பிரிவினரிடையே தோன்றும் பிரச்சினைகளின் விளைவாக செலவு அதிகரிப்பதால் விலைமட்டம் உயர்ந்து செல்லும்.
- உதாரணமாக தொழிற்சங்க செயற்பாடுகள் காரணமாக சம்பளம் உயர்வதைக் குறிப்பிடலாம்.
- கேள்வித் தூண்டல், செலவத் தூண்டல் பணவீக்கத்தை வரைபு களின் அடிப்படையில் விளக்க முடியும்.

- பொருளாதார அமைப்பில் தோன்றும் குறைபாடுகள், வரையறைகள் மற்றும் நெகிழ்வற்ற தன்மைகளால் அமைப்பு ரீதியான பணவீக்கம் ஏற்படும்.
- பணவீக்கத்தின் காரணமாக பல்வேறு பொருளாதார விளைவுகள் ஏற்படுகின்றது என்பது.
- பணத்தின் மெய்ப் பெறுமதி குறைதலால் நிலையான வருமானம் பெறுவோர், சேமிப்பாளர், கடன் கொடுனர் மீது பணவீக்கமானது தீய விளைவுகளை ஏற்படுத்தும்.
- மாறும் வருமானம் பெறுவோர், கடன்பட்டோர் பண வீக்கத்தினால் நன்மையடைகின்றனர்.
- பணவீக்கம் காரணமாக பொருளாதார நடவடிக்கைகளின் வினைத்திறன் குறைவடைவது பண வீக்கத்தின் பொருளியற் செலவாகும் என்பது.
- பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக பணக்கொள்கை மற்றும் இறைக் கொள்கை முகாமைத்துவத்தைப் பயன்படுத்த முடியும் என்பது.
- மெய் வருமானத்தைக் கணிப்பிட பின்வரும் சம்பாட்டைப் பயன்படுத்தலாம்.

$$\text{மெய் வருமானம்} = \frac{\text{பெயரளவு வருமானம்}}{\text{விலைச்சுட்டெண்}}$$

**தேர்ச்சி 8** : பொருளாதார செயற்பாட்டுக்கு பணம் மற்றும் வங்கியமைப்பு பங்களிக்கும் விதத்தினை ஆராய்வார்.

**தேர்ச்சி மட்டம் 8.1** : பணம், பணத்தின் வகைகள் மற்றும் பணத்தின் செயற்பாடுகள் பற்றி ஆராய்ந்தறிவர்.

**பாடவேளை** : 05

**கற்றற் பேறுகள்** :
- பணத்தினை வரைவிலக்கணப்படுத்தி சிறந்த பணம் ஒன்றின் பண்புகளை விளக்குவார்.
- பணத்தை வகைப்படுத்தி அவற்றுக்கு உதாரணங்களை முன்வைப்பார்.
- பணத்தின் பணிகளை உதாரணங்களுடன் விளக்குவார்.
- பணத்தின் பெறுமதியை வரைவிலக்கணப்படுத்தி அதன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பெறுமதிகள் தீர்மானிக்கப்படும் விதத்தை எடுத்துக் காட்டுவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- நேரடிப் பரிமாற்று (பண்டமாற்று) முறையின் கீழ் பண்டங்களைப் பரிமாற்றும்போது பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.
- பண்டங்களைப் பரிமாற்றும்போது தேவைகளுக்கிடையே இருமுகத் தேவைப் பொருத்தம் காணப்பட வேண்டும்.
- அதனைத் தவிர பண்டப் பரிமாற்று முறைகளின் கீழ் வேறு பல பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது.
- பணத்தின் பயன்பாட்டுடன் அப்பிரச்சினைகள் பலவற்றுக்குத் தீர்வு கிட்டியது.
- பொதுவான ஏற்றுக்கொள்ளப்படும் தன்மையுள்ள பரிமாற்றூடக மாகப் பயன்படுத்தக்கூடிய எதுவும் பணமாகக் கருதப்பட முடியும்.
- ஏனைய சொத்துக்களுடன் ஒப்பிடும்போது பணம் எனப்படும் சொத்து சிறப்பான பண்புகளைக் கொண்டிருக்கின்றது.
- நல்ல பணம் ஒன்றில் பின்வரும் பண்புகள் காணப்படும்.
    - எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல்.
    - நெடுவாழ்வுடையதாக உடையதாக இருத்தல்.
    - ஓரினத் தன்மையுடையதாக இருத்தல்.
    - சிறு அலகுகளாகப் பிரிக்கக்கூடியதாக இருத்தல்.
    - இலகுவாகக் கொண்டு செல்லக்கூடியதாக இருத்தல்.
    - பெறுமதி மாறாததாக இருத்தல்.
    - போலியாக உருவாக்க முடியாததாக இருத்தல்.

- நிகழ்காலத்தில் பல்வேறு பண வகைகள் பயன்பாட்டில் உள்ளன.
  - நாட்டினுள் எந்தவொரு கொடுக்கல் வாங்கலுக்காகவும் சட்ட ரீதியான அங்கீகரிக்கப்பட்ட பணம் சட்டப் பணமாகும்.
  - வர்த்தக வங்கிகளில் காணப்படும் நடைமுறை வைப்புக்கள் வங்கிப் பணமாகும்.
  - சட்டப்பணம் மற்றும் காசோலைகள் நவீன பணம் என அழைக்கப்படுகின்றது.
  - இலகுவாகப் பரிமாற்றூடகமாக மாற்றிக் கொள்ளக்கூடிய சொத்துக்கள் கிட்டிய பணமாகும்.
  - பெறுமானத் திரட்டாகச் செயற்படாத எனினும் தற்காலிகமாக பரிமாற்றூடகமாகப் பயன்படுத்தப்படுபவை பணப்பதிலீடுகளாகும் என்பது. உதாரணம்: கடன் அட்டை
  - பௌதிக ரீதியான பணத்தை மின்னியல் முறையைப் பயன்படுத் துவதன் மூலம் களஞ்சியப்படுத்தி மென்பொருள்கள் மூலமாக கொடுக்கல் வாங்கல்களுக்குப் பயன்படுத்தும் முறை மின் பணம் ஆகும். உதாரணம்: கடனட்டை
- பணத்தின் மூலம் பின்வரும் தொழிற்பாடுகள் நிறைவேற்றப்படும்.
  - பரிமாற்றூடகமாகச் செயற்படுதல்.
  - பெறுமானத் திரட்டாக செயற்படுதல்.
  - கணக்கீட்டு அலகாகத் தொழிற்படல்.
  - பிற்போடப்பட்ட கொடுப்பணவு ஊடகமாகத் தொழிற்படல்.
- கொடுக்கல் வாங்கல் ஒன்று நடைபெறும்போது இடையீட்டுக் கருவியாகத் தொழிற்படுவது பரிமாற்றூடகத் தொழிற்பாடாகும்.
- எதிர்கால முதலீட்டுக்காக செல்வத்தைத் திரட்டி வைக்கின்ற சொத்தாகப் பேணப்படுவது பெறுமானத் திரட்டுத் தொழிற்பாடாகும்.
- பொருளொன்றின் அல்லது சேவையொன்றின் பெறுமதியை பொது அலகொன்றினால் வெளிப்படுத்தும் ஆற்றல் கணக்கீட்டு அலகாகத் தொழிற்படல் என அழைக்கப்படும்.
- காலங்கடந்த கொடுப்பனவுகளை மிகவும் வினைத்திறனுடன் மேற்கொள்வதற்குப் பணத்துக்குக் காணப்படும் ஆற்றல் பிற்போடப் பட்ட கொடுப்பனவுக் கருவித் தொழிற்பாடாகும்.
- ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பண அலகு ஒன்றினால் கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள் சேவைகளின் அளவு பணத்தின் பெறுமதியாகும்.
- பணத்தின் பெறுமதியானது உள்ளகப் பெறுமதி மற்றும் வெளியகப் பெறுமதி என இரண்டாகப் பிரிக்கப்படலாம்.
- குறிப்பிட்ட ஒரு நாட்டின் பண அலகு ஒன்றினால் அந்நாட்டினுள் கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள் சேவைகளின் அளவு பணத்தின் உள்ளகப் பெறுமதியாகும்.

- குறிப்பிட்ட ஒரு நாட்டின் பண அலகொன்றினால் வெளிநாடொன்றில் கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள் சேவைகளின் அளவு பணத்தின் வெளியகப் பெறுமதியாகும்.
- பணத்தின் உள்ளகப் பெறுமதி உள்நாட்டு விலைமட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்படும் அதேவேளை பணத்தின் வெளியகப் பெறுமதி நாணயமாற்று வீதத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.
- பணத்தின் உள்ளகப் பெறுமதிக்கும் - வெளியகப் பெறுமதிக்கும் இடையே தொடர்பு காணப்படுகின்றது.

**தேர்ச்சி 8** : பொருளாதார செயற்பாட்டுக்கு பணம் மற்றும் வங்கியமைப்பு பங்களிக்கும் விதத்தினை ஆராய்வார்.

**தேர்ச்சி மட்டம் 8.2** : பணத்தின் கேள்வியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை முன்வைப்பர்.

**பாடவேளை** : 05

**கற்றற் பேறுகள்** :
- பணத்தின் கேள்வியை வரைவிலக்கணப்படுத்துவார்.
- பணத்தின் கேள்வியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விளக்குவார்.
- பணத்தின் கேள்விக்கும் அதனைத் தீர்மானிக்கும் காரணிகளுக்கும் இடையில் காணப்படும் தொடர்பினை வரிப்படம் மூலமாக விளக்குவார்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

**பிரவேசம்** :
- மாணவர்களுக்குப் பணம் தேவைப்படுவதற்கான காரணங்களை வினவுக.
- பின்வரும் விடயங்களை வெளிப்படுத்தி கலந்துரையாடலை மேற்கொள்க.
- உணவு, குடிபானக் கொள்வனவு, மருந்துகளைக் கொள்வனவு செய்தல், அவசரத் தேவைகளுக்காகப் பயன்படுத்துதல், மற்றும் போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக் கொள்ளல் போன்ற நடவடிக்கைகளுக்காக தனி நபர்கள் பணத்தைத் தம்மிடம் வைத்திருக்கின்றனர்.
- இவ்வாறு பொதுமக்கள் பணத்தைத் தம்மிடம் வைத்தீருப்பத்தில் காணப்படும் விருப்பம் பணத்தின் கேள்வியாகும்.
- பணத்தின் கேள்வியில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்தும்.

**குழுக் கண்டாய்வுக்கான அறிவுறுத்தல் பத்திரம்:**

- பின்வருவன தனிநபர் ஒருவருக்கு பணம் தேவைப்படும் சந்தர்ப்பங்கள் சிலவாகும். அவற்றுள் உங்களின் குழுவுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தின் மீது கவனம் செலுத்தவும்.
    - அரசியைக் கொள்வனவு செய்வதற்காக
    - வீட்டில் ஏற்படும் அவசர நிலைமையொன்றுக்காக
    - பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்காக
- உங்களின் குழுவுக்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பம் தொடர்பாகக் கவனம் செலுத்தவும்.

- அவ்வாறு பணம் தேவைப்படும் வேறு சந்தரப்ப்ங்களுக்கு உதாரணங்களை இயன்றளவு பட்டியல்படுத்திக் கொள்ளவும்.
- உங்களுக்குக் குறிப்பிட்டளவான மாத வருமானமொன்று இருப்பதாக எடுகோள் கொண்டு,
  அதில் எந்தளவான பணத்தை அந்த நடவடிக்கைகளுக்காக ஒதுக்குவீர்கள் என்பதைத் தீர்மானிக்கவும்.
- மேலே தரப்பட்ட மாதாந்த வருமானம் இருமடங்காக அமையு மாயின் அக்குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படும் பணத்தின் அளவைத் தீர்மானிக்கவும்.
- மேலேயுள்ள தகவல்களின் அடிப்படையில் வருமான மாற்றத்துக்கும் அக்குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படும் பண அளவுக் குமிடையிலான தொடர்பினைக் காட்டும் வரிப்படம் ஒன்றை அமைக்க. (குத்தச்சில் வருமானத்தையும் கிடையச்சில் குறித்த நடவடிக்கையையும் குறிப்பிடுக.)
- மேலேயுள்ள வரிப்படத்தில் அடிப்படையில் வருமானத்துக்கும் உங்களுக்குத் தரப்பட்டுள்ள நடவடிக்கைக்குப் பணத்தை ஒதுக்குதலுக்கும் கிடையிலான தொடர்பினை விளக்குக.
- உங்களது கண்டறிதலை முழு வகுப்புக்கு ஆக்கபூர்வமாக முன் வைக்கவும்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- குறிப்பிட்ட ஒரு நேரத்தில் பணத்தைப் பணமாக தம்மிடம் வைத்திருப்பதற்குப் பொதுமக்களிடம் உள்ள விருப்பம் பணத்தின் கேள்வி என வரைவிலக்கணப்படுத்தப்படும்.
- பணத்துக்குக் காணப்படும் கேள்வி பின்வரும் மூன்று காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அமையும்.
  - கொடுக்கல் வாங்கல் நோக்கம்
  - பாதுகாப்பு நோக்கம்
  - உத்தேச நோக்கம்
- தனிநபர் ஒருவர் வருமானம் பெறுதலும் செலவிடுதலும் ஒன்றுக் கொன்று பொருந்தி அமையாத காரணத்தால் கொடுக்கல் வாங்கல் நோக்கத்துக்காக பணத்தைத் தம்மிடம் வைத்திருப்பது கொடுக்கல் வாங்கல் நோக்கத்துக்கான பணத்தின் கேள்வியாகும்.
- பிரதானமான தனி நபரின் வருமான மட்டத்துக்கேற்ப கொடுக்கல் வாங்கலுக்கான பணத்தின் கேள்வி மாற்றமடையும்.
- வருமான மட்டம் மற்றும் கொடுக்கல் வாங்கலுக்கான பணத்தின் கேள்விக்கிடையே நேரான தொடர்பு காணப்படுகின்றது.

- அதனைப் பின்வருமாறு சமன்பாடாகவும் வரைபடமாகவும் காட்டலாம்.




Mt = f(y)

Mt - கொடுக்கல் வாங்கல் நோக்கத்துக்கான பணத்தின் கேள்வி

y - வருமான மட்டம்

- வருமானம் தவிர வேறு காரணிகளும் கொடுக்கல் வாங்கல் நோக்கத்துக்கான பணத்தின் கேள்வியைப் பாதிக்கும்.
- எதிர்பாராத நிலைமைகளில் ஏற்படக்கூடிய செலவுகளைச் செய்வதற்காகப் பொதுமக்கள் பணத்தைத் தம்மிடம் வைத்திருப்பது பாதுகாப்பு நோக்கத்துக்கான பணத்தின் கேள்வியாகும்.
- பாதுகாப்பு நோக்கத்தின் அடிப்படையில் பணத்துக்குக் காணப்படும் கேள்வி வருமானத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.
- வருமானத்துக்கும் பாதுகாப்பு நோக்கத்துக்கான பணத்தின் கேள்விக்குமிடையே நேரான தொடர்பு காணப்படுகின்றது. அத்தொடர்பினைத் தொழிற்பாட்டு அடிப்படையிலும் மற்றும் வரிப்படமாகவும் காட்டலாம்.




Mtp - பாதுகாப்பு நோக்கத்துக்கான பணத்தின் கேள்வி

y - வருமானம்

- எதிர்காலத்தில் வருமானம் உழைக்கும் நோக்குடன் வேறு சொத்துக்களின் முதலீடு செய்வதற்காகப் பணத்துக்குக் காணப்படும் கேள்வி உத்தேச நோக்கத்துக்கான பணத்தின் கேள்வியாகும்.
- உத்தேச நோக்க அடிப்படையில் பணத்துக்குக் காணப்படும் கேள்விக்கும் வட்டி வீதத்துக்கும் இடையில் எதிரான தொடர்பு காணப்படுகின்றது.
- அதனைத் தொழிற்பாட்டு அடிப்படையிலும் வரிப்படமாகவும் காட்டலாம்.




Ms - உத்தேச நோக்கத்துக்காக பணத்தின் கேள்வி

r = சந்தை வட்டி வீதம்

**தேர்ச்சி 8** : பொருளாதார செயற்பாட்டுக்கு பணம் மற்றும் வங்கியமைப்பு பங்களிக்கும் விதத்தினை ஆராய்வார்.

**தேர்ச்சி மட்டம் 8.3** : இலங்கையின் பண நிரம்பலை பகுப்பாய்வு செய்வர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- பண நிரம்பலை வரைவிலக்கணப்படுத்துவார்.
- பண நிரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகளை விளக்குவார்.
- நிதிக் கூட்டுக்களை (மொத்தம்) வரிசைப்படுத்தி அவற்றைத் தனித்தனியாக விபரிப்பார்.
- மத்திய வங்கியின் பொறுப்புக்களையும் சொத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு அடிப்படைப் பணத்துடனான தொடர்பை விளக்குவார்.
- பணப் பெருக்கியை வரைவிலக்கணப்படுத்தி அது தீரமானிக்கப்படும் விதத்தை சமன்பாட்டு வடிவில் முன்வைப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- பொது மக்களிடையே பல்வேறு வகைகளில் பணக் கொடுக்கல் வாங்கல் நடைபெறக்கூடும்.
- அவ்வாறு நடைபெறும் கொடுக்கல் வாங்கல்களின் போது பொதுமக்களிடையே பணம் புழக்கத்துக்குட்படும்.
- இவ்வாறு ஏதாவது குறிப்பிட்ட நிலைமையொன்றின் போது பொது மக்களிடையே புழக்கத்தில் உள்ள மொத்தப் பண அளவு பண நிரம்பல் என வரைவிலக்கணப்படுத்தப்படும்.
- பண நிரம்பல் என்பது ஓர் இருப்பு எண்ணக்கருவாகும்.
- வங்கிப் பொறுப்புக்களாகும் பணக் கூட்டுக்குள் அடங்குவன வற்றை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.
  - பண அடிப்படை/உயர்வலுப்பணம்/ஒதுக்குப் பண நிரம்பல்
  - ஒடுங்கிய பண நிரம்பல்
  - விரிந்த பண நிரம்பல்
- விரிந்த நிரம்பலை மீண்டும் பின்வருமாறு உப பிரிவுகளாகப் பிரிக்கலாம்.
  - $M_2$ விரிந்த பண நிரம்பல்
  - $M_2b$ ஒன்றிணைக்கப்பட்ட விரிந்த பண நிரம்பல்
  - $M_4$ மிகவும் விரிந்த பண நிரம்பல்
  - $M_5$ விரிந்த பண நிரம்பல்

- மேலே தரப்பட்ட எண்ணக்கருக்களை கீழ்வருமாறு வேறு வேறாக விளக்கலாம்.
  - ஒடுங்கிய பண நிரம்பல் = பொது மக்களிடமுள்ள தாள், சில்லறை நாணயங்கள் + வர்த்தக வங்கிகளில் பொதுமக்கள் பேரில் வைக்கப்பட்டுள்ள கேள்வி வைப்புக்கள்.

    $M_1$ = CP + DDP
  - விரிந்த பண நிரம்பல் = ஒடுங்கிய பண நிரம்பல் + வர்த்தக வங்கிகளில் பொதுமக்கள் பேரில் வைக்கப்பட்டுள்ள தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள்.

    $M_2 = M_1$ + TSD
  - ஒன்றிணைக்கப்பட்ட விரிந்த பண நிரம்பல் = விரிந்த பண நிரம்பல் + நாட்டில் வதிவற்றோரின் வெளிநாட்டு புழக்கப் பண வைப்புகள் + வெளிநாட்டு நாணய்வங்கி அலகுகளில் உள்ள வதிவோரின் வைப்புகள்

    $M_2b = M_2 + TSD_{NRFC} + RD_{FCBU}$
  - மிகவும் விரிந்த பண நிரம்பல் = ஒன்றிணைக்கப்பட்ட விரிந்த பண நிரம்பல் + உரிமம் பெற்ற விசேட வங்கிகளில் பொது மக்கள் பேரில் உள்ள தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் + பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளில் உள்ள வதிவோர் வைப்புக்கள்

    $M_4 = M_2b + RD_{LSB} + RD_{FC}$

    $M_4 = M_1$+ கிட்டிய பணம்
  - $M_5$ - விரிந்த பண நிரம்பல் = $M_4$ + நாணய உண்டியல், வர்த்தக உண்டியல் ஆகிய திரவச் சொத்துக்கள்.
  - இலங்கையில் விரிந்த பண நிரம்பலைத் தீர்மானிப்பதில் மத்திய வங்கியின் ஐந்தொகை, வர்த்த வங்கிகளின் ஐந்தொகை என்பன அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றன.
  - விரிந்த பண நிரம்பலைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை சமன்பாடொன்றின் மூலம் பின்வருமாறு காட்டலாம்.

    $M_2$ அல்லது (CP+DDP+TSD) = $NFA_B + NCG_B + GPS_{KB} + NOA_B$

    மேலே தரப்பட்ட சமன்பாட்டில் வலப்பக்கமாகவுள்ள சொற்களால் காட்டப்படுவது வரிந்த பணத்தைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாகும் என்பது. அக்காரணிகளைப் பின்வருமாறு காட்டலாம் என்பது.

    $NFA_B$ = வங்கி முறைமையில் உள்ள தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்.

    $NCG_B$ = வங்கி முறைமை மூலம் அரசுக்கு வழங்கப்பட்ட தேறிய கடன்.

$GPS_{KB}$ = வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்.

$NOA_{B}$ = வங்கி முறைமையில் உள்ள ஏனைய தேறிய சொத்துக்கள்.

- $M_2b$ பண நிரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைப் பின்வருமாறு காட்டலாம்.

$$M_2b = NFA + NDA + NOA$$

NFA = ஒன்றிணைக்கப்பட்ட வங்கி முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்.

NDA = ஒன்றிணைக்கப்பட்ட வங்கி முறைமையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள்.

NOA = ஒன்றிணைக்கப்பட்ட வங்கி முறைமையின் ஏனைய தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்

- மேலே காட்டப்பட்ட வகையில் பண கூட்டுக்களைத் தீர்மானிக்கும் காரணிகளை இருமுறைகளில் பரீட்சிக்க முடியும்.
  - சொத்து மற்றும் பொறுப்புப் பிரவேசம்
  - உயர்வலுப் பணப் பிரவேசம்
- உயர்வலுப் பணம் (அடிப்படைப் பணம் / ஒதுக்குப் பணம்) என்பன மத்திய வங்கியின் நேரடி நிதிப் பொறுப்புக்களாகும்.
- இலங்கையின் பணக்கொள்கையின் செயற்பாட்டு இலக்கு அடிப்படைப் பணமாகும்.
- உயர் வலுப்பணத்தை இரண்டு விதமாக விளக்க முடியும் என்பது.
  - சொத்துக்ககள் அடிப்படையில்
  - பொறுப்புக்கள் அடிப்படையில்
- உயர்வலுப் பணத்தைத் தீர்மானிக்கும் காரணிகளைப் பின்வருமாறு காட்டலாம்.
  - மத்திய வங்கி அரசுக்குக் கொடுத்த தேறிய கடன்
  - மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்து
  - மத்திய வங்கியின் தேறிய ஏனைய சொத்துக்கள்
  - மத்திய வங்கியினால் வணிக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள்.
- பயன்பாட்டின் அடிப்படையில் உயர்வலுப் பணத்தின் கட்டமைப்பு பின்வருமாறு அமையும்.
  - சுற்றோட்டத்தில் உள்ள நாணயங்களும் தாள்களும்
  - வர்த்தக வங்கிகளால் மத்திய வங்கியில் பேணப்படும் வைப்புகள்.
  - அரசைப் பிரதிநிதிப்படுத்தும் நிறுவனங்களுக்குரிய மத்திய வங்கியில் உள்ள வைப்புக்கள்.
- பண நிரம்பலுக்கும் உயர்வலுப் பணத்துக்கும் இடையிலான விகிதம் பணப் பெருக்கியாகும்.

- இதன்படி உயர்வலுப் பணத்தொகை மற்றும் பணப்பெருக்கியின் பெருக்கம் பண நிரம்பலாகும் என்பது.
- பண நிரம்பல், உயர்வலுப்பணம், பணப் பெருக்கி என்பவற்றுக் கிடையேயான தொடர்பாகக் சமன்பாடுகள் மூலம் காட்டலாம்.

M - பணக்கூட்டு

MH/K - பணப்பெருக்கி

H - உயர்வலுப் பணம்

$M = K \times H$

பண நிரம்பல் = பணப் பெருக்கி x அடிப்படைப் பணம்

$H = M/K$ அடிப்படைப் பணம் = $\frac{\text{பணநிரம்பல்}}{\text{பணப்பெருக்கி}}$

$K = M/H$ பணப்பெருக்கி = $\frac{\text{பணநிரம்பல்}}{\text{அடிப்படைப்பணம்}}$

- பணப் பெருக்கியின் வகைகளைப் பின்வருமாறு காட்டலாம்.

குறுகிய பணப் பெருக்கி ———— $\frac{M_1}{H}$

விரிந்த பணப்பெருக்கி ———— $\frac{M_2}{H}$

ஒன்றிணைக்கப்பட்ட பணப் பெருக்கி —— $\frac{M_2 b}{H}$

மிக விரிந்த பணப் பெருக்கி ———— $\frac{M_4}{H}$

- பணப்பெருக்கி எப்போதும் ஒன்றைவிடக்கூடிய பெறுமதியைக் கொண்டிருக்கும்.
- கீழ்த்தரப்படும் சூத்திரத்தின் மூலம் பணப் பெருக்கியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை இனங்காணலாம.

$$K = \frac{1 + C}{C + E + R}$$

பணப்பெருக்கி = { 1 + சட்டமுறைப்பணத்துக்கும் வங்கி வைப்புக்கும் இடையிலான விகிதம் (C) / (c) + மிகை ஒதுக்கு மற்றும் வங்கி வைப்புக்களுக்கிடையிலான விகிதம் (E) + சட்ட ரீதியான ஒதுக்கு மற்றும் வங்கி வைப்புக்கிடையிலான விகிதம். (R) }

- மேலுள்ள சூத்திரத்தின்படி பணப்பெருக்கியின் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை கீழ்த்தரப்படும் வகையில் காட்டலாம்.
  - சட்டமுறபை் பண இருப்பு (C)
  - மிகை ஒதுக்கு விகிதம் (E)
  - சட்டமுறையான ஒதுக்கு விகிதம் (R)

**தேர்ச்சி 8** : பொருளாதார செயற்பாட்டுக்கு பணம் மற்றும் வங்கியமைப்பு பங்களிக்கும் விதத்தினை ஆராய்வார்.

**தேர்ச்சி மட்டம் 8.4 :** இலங்கையின் நிதிக் கட்டமைப்பினை வகைப்படுத்துவார்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- இலங்கையின் நிதி நிறுவன அமைப்பை மத்திய வங்கி அறிக்கைக் கேற்ப வகைப்படுத்துவார்.
- ஒவ்வொரு நிதி நிறுவனங்களையும் சுருக்கமாக விளக்குவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- இலங்கையின் நிதி நிறுவன அமைப்பினைப் பின்வருமாறு வகைப் படுத்த முடியும் என்பது.
  - வங்கித்துறை
    - இலங்கை மத்திய வங்கி
    - அனுமதிப்பத்திரம் பெற்ற வர்த்தக வங்கிகள்
    - அனுமதிப்பத்திரம் பெற்ற் விசேட வங்கிகள்
  - வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள்
    - பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்
    - கூட்டுறவுக் கிராமிய வங்கிகள்
    - சிக்கன மற்றும் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள்
  - ஏனைய விசேட நிதி நிறுவனங்கள்
    - விசேட குத்தகைக் கம்பனிகள்
    - முதனிலை வியாபாரிகள்
    - வனிக் வங்கி
    - பங்குத் தரகர் கம்பனிகள்
    - அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்கள்
    - முயற்சியாண்மை மூலதனக் கம்பனிகள்
    - கடன் தரப்படுத்தல் நிறுவனங்கள்
  - ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்கள்.
    - காப்புறுதிக் கம்பனிகள்
    - ஊழியர் சேமலாப நிதியம்
    - ஊழியர் நம்பிக்கை நிதியம்
    - ஏனைய சேமலாப நிதியங்கள்
    - அரச சேவை சேமலாப நிதியம்
- இலங்கையின் பணக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக நிறுவப்பட்ட சுயாதீனமான நிறுவனம் இலங்கை மத்திய வங்கி யாகும்.

- இலங்கை மத்திய வங்கியின் பிரதான தொழிற்பாடு வட்டி வீதத்தையும் பண நிரம்பலையும் நெறிப்படுத்துவதற்காக நிதிக் கருவிகளை முகாமை செய்தலாகும்.
- அனுமதிப்பத்திரம் பெற்ற வர்த்தக வங்கிகளாகக் கருதப்படுபவை நடைமுறைக் கணக்கை (கேள்விவைப்பு) நடைமுறைப்படுத்துகின்ற மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல் செய்கின்ற நிதி இடைத்தரகர் நிறுவனங்களாகும்.
- இலங்கையினுள் அனுமதிப் பத்திரம் பெற்ற 23 வர்த்தக வங்கிகள் காணப்படுவதுடன் அவற்றுள் 11 உள்நாட்டு வர்த்தக வங்கிகளாகவும் 12 வெளிநாட்டு வங்கிகளாகவும் உள்ளன.
- சேமிப்பு மற்றும் தவணை வைப்புக்களை ஏற்றல் மற்றும் கடன் வழங்குதலை முதன்மையாகக் கொண்டு இயங்கும் நிதி இடைத் தரகர் நிறுவனங்கள் அனுமதிப்பத்திரம் பெற்ற விசேட வங்கிகளாகக் கருதப்படும்.
- இலங்கையினுள் அனுமதிப்பத்திரம் பெற்ற பின்வரும் விசேட வங்கிகள் கணாப்படுகின்றன.
    - பிரதேச அபிவிருத்தி வங்கிகள்
    - தேசிய சேமிப்பு வங்கிகள்
    - நீண்டகாலக் கடன் கொடுக்கும் நிறுவனங்கள்
    - வீடமைப்புக்கடன் வழங்கும் நிறுவனங்கள்
    - தனியார் சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகள்
- அனுமதிப்பத்திரம் பெற்ற விசேட வங்கிகளின் தொழிற்பாடுகளைப் பின்வருமாறு காட்டலாம்.
    - சேமிப்பு மற்றும் தவணை வைப்புக்களைப் பேணுதல்.
    - குறுங்கால, நீண்டகாலக் கடன் வழங்கல்
    - அடகுச் சேவை செய்தல்
    - நீண்டகால முதலீடு
- தவணை வைப்புக்களை ஏற்றல், குத்கை முறையில் கடன் வழங்கல் ஆகிய நடவடிக்கைகளை முதன்மையாகக் கொண்டு செயற்படும் நிதி நிறுவனங்கள் பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகளாகக் கருதப்படும்.
- கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் கூட்டுறவுச் சங்கங்களின் வங்கிப் பிரிவு ஆகும்.
- கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் அங்கத்தவர் மற்றும் அங்கத்தவரல்லாத மக்களிடம் இருந்து சேமிப்புக்களையும் தவணை வைப்புக்களையும் பெற்று அங்கத்தவர்களுக்குக் கடன் வழங்குகிறது.
- கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட வேண்டும்.

- சங்கத்தின் அங்கத்தவர்களது வைப்புக்கள் மற்றும் அங்கத்தவர்ப் பங்குப் பணத்தைப் பெற்று அங்கத்தவர்களுக்கு மாத்திரம் கடன் கொடுப்பதற்காக கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு அமைக்கப்பட்ட நிதி நிறுவனம் சிக்கன மற்றும் கடன் கூட்டுறவுச் சங்கம் ஆகும்.
- வாகனங்கள், இயந்திரங்கள், பொறிகள் ஆகிய மூலுதனச் சொத்துக்கள் குத்தகை உரிமையாளர் மூலம் (நிதி நிறுவனம்) பணங்கொடுத்துப் பெற்று அவற்றைப் பயன்படுத்தும் உரிமையை குத்தகையாளருக்கு வழங்குதல் மற்றும் அதற்காக குத்தகையாள ரிடம் இருந்து மாதாந்த கட்டணமொன்றை அறவிடுதலில் ஈடுபடும் நிதி நிறுவனங்கள் குத்தகைக் கம்பனிகள்.
- செலுத்த வேண்டிய காலத்தினுள் குறிப்பிட்ட சொத்தின் பெறுமதியை குத்தகையாளர் செலுத்தி முடிந்த பின்னர் அதன் நிரந்தர உரிமையை குத்தகையாளருக்கு குத்தகைக் கம்பனி மூலம் பெற்றுக் கொடுக்கப்படும்.
- இலங்கையில் சுமார் 20 குத்தகைக் கம்பனிகள் வரை காணப்படுவதுடன் அவை வணிக வங்கிகள், அனுமதிப் பத்திரமுடைய விசேட வங்கிகள் அல்லது நிதிக் கம்பனிகளுக் குரியன.
- மத்திய வங்கியால் வெளியிடப்படும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் முழுவதையும் கொள்வனவு செய்து மீண்டும் பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்காக இலங்கை மத்திய வங்கியால் அமைக்கப்பட்டுள்ள நிறுவனம் அரசாங்கத்தின் திறைசேரி உண்டியல் சம்பந்தமான முதலாந்தரச் சந்தையாகும்.
- இலங்கை மத்திய வங்கி மூலம் முதலாந்தர வியாபாரிகள் 11 நியமிக்கப்பட்டுள்ளனர்.
- வனிக் வங்கி சேவைகளை வழங்குவதில் நிதி நிறுவனங்களில் நிதி கிடைத்தரகு சேவையில் ஈடுபடும் வர்த்தக வங்கிகள் முக்கியம் பெறுகின்றன.
- வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகளின் வியாபாரப் பங்குகள் மற்றும் கடன் பரிமாற்றத்தின்போது விற்பனையாளர் மற்றும் கொள்வனவாளரைத் தொடர்புபடுத்தும் இடைத்தரகர் கடமையை நிறைவேற்றும் நிறுவனங்கள் பங்குத் தரகர் கம்பனிகளாகும்.
- இலங்கையின் பங்குச் ந்தையில் இத்தகைய தரகர் கம்பனிகள் 15 வரை காணப்படுகின்றன.
- பங்குச் சந்தையில் பங்குப் பரிமாற்றத்துக்காக தரகர்களின் இடைதரகர் சேவையைக் கட்டாயமாகப் பயன்படுத்த வேண்டும்.

- மிகப் பெருமளவான மூலதனவாக்கத்தின் பங்குகளை முதலீட்டாளர்களுக்கு விற்பனை செய்து சேர்த்துக் கொள்ளப்படு கின்ற முதலீட்டு நிதியம் அலகுப் பொறுப்பாட்சி நிதியம் ஆகும்.
- அலகுப் பொறுப்பாட்சி நிதிய முதலீட்டாளர்களால் கிடைக்கின்ற நன்மைகள் அதன் பங்குகளை கொள்வனவு செய்த அலகுப் பொறுப்பாட்சி உரிமையாளரிடையே ஒப்பந்தம் செய்யப்பட்ட முறைமையின் அடிப்படையில் பங்கீடு செய்யப்படும்.
- இலங்கையில் சுமார் 12 அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்கள் வரை காணப்படுகின்றன.
- வியாபாரச் சேவைகளை வழங்குதல், புதிய வியாபாரிகளின் கைத்தொழிலுக்கான மூலதனத் தேவைகளை நிறைவேற்றுதல் புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு, இருக்கின்ற கைத் தொழில்களை விரிவுபடுத்துவதற்கு, கைத்தொழில்களைப் பொறுப்பேற்பதற்கு மற்றும் கொள்வனவு செய்வதற்கு நிதி வழங்குதலில் ஈடுபடும் நிறுவனங்கள் முயற்சியாண்மை மூலதனக் கம்பனிகளாகும்.
- கடன் தரப்படுத்தல் என்பது கடன் முறிகள் அல்லது நிதிக் கருவிகள் அல்லது வெளியிடுபவரின் நிதிச் சக்தி தொடர்பான மதிப்பீடொன்றை முன்வைத்தலாகும்.
- கடன் தொகையொன்றை வழங்கிய பின்னர் கடனை மீள அறிவடும் சக்தி தொடர்பாக கணிப்பீடொன்றைப் பெற்றுக் கொள்ளல் கடன் தரப்படுத்தலின்போது நடைபெறும்.
- நிதிக் கருவிகளில் முதலீடு செய்கின்ற முதலீட்டாளர்களுக்கு அக்கருவிகளின் தரத்தையும் நம்பிக்கையையும் சரியாக அறிந்து முதலீடு செய்தவற்கு முறையாக வழிகாட்டல் கடன் தரப்படுத்தல் மூலம் நடைபெறும்.
- கடன் தரப்படுத்தலில் புகழ்பெற்ற சர்வதேச நிறுவனங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
  - மூடீஸ் கம்பனி
  - ஸ்டான்டர்ட் மற்றும் புவர்ஸ் கம்பனி
  - பிச் ரேடிங்ஸ் கம்பனி
- குறிப்பிட்டவொரு நாடொன்றின் அரசுக்கு கடனை மீளச் செலுத்தும் ஆற்றலை சுயாதீன கடன் தரப்படுத்தல் நிறுவனமொன்றின் ஊடாகக் கணிப்பிட்டுக் கொள்ளல். இறைமைக்கடன் தரப்படுத்தல் என அழைக்கப்படும்.
- தனிநபரும் ஏதாவது ஒரு நிறுவனமும் முகங்கொடுக்கின்ற ஆபத்தைப் பொறுப்பேற்று பாதிப்பொன்று ஏற்படும் நிலைமையில் அதனை தீர்ப்பதற்கு முன்வருகின்ற நிறுவனம் காப்புறுதி நிறுவனமாகும்.

- காப்புறுதி நிறுவனம் மூலம் பல்வேறு வகையான காப்புறுதிப் பத்திரங்கள் வெளியிடப்பட்டு அதற்காகக் கட்டணம் அறவிடப்படு கின்றது.
- இந்நாட்டினுள் செயற்படுகின்ற காப்புறுதி நிறுவனங்கள் காப்புறுதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது.
- இலங்கையில் சுமார் 15 வரையான காப்புறுதி நிறுவனங்கள் செயற்படுகின்றன.
- தொழில் தருநர் - ஊழியர் ஆகிய இரு தரப்பினரதும் பங்களிப்புடன் ஊழியருக்கு உரித்தாகும் வகையில் தொழில் திணைக்களத்தின் மேற்பார்வையுடன் இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப் படுத்துகின்ற நிதியம் ஊழியர் நிதியமாகும்.
- ஊழியர் ஓய்வுபெற்றுச் செல்லும் சந்தர்ப்பத்தில் அவரின் பெயரில் ஊழியர் சேமலாப நிதியத்தில் உள்ள பங்களிப்புத் தொகையும் அதற்குரிய வட்டியும் அவ்வூழியருக்கு செலுத்தப்படும்.
- ஊழியர் சேமலாப நிதியத்தில் ஊழியர் பெயரில் நிதியத்தை வைப்புச் செய்தல் சட்டரீதியான ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பொன்றாகும்.

**தேர்ச்சி 8** : பொருளாதார செயற்பாட்டுக்கு பணம் மற்றும் வங்கியமைப்பு பங்களிக்கும் விதத்தினை ஆராய்வார்.

**தேர்ச்சி மட்டம் 8.5** : வங்கியமைப்பினுள் வணிக வங்கிகளின் செயற்பாட்டை ஆராய்வர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :

- வணிக வங்கிகளை வரைவிலக்கணப்படுத்துவார்.
- வணிக வங்கிகளின் தொழிற்பாடுகளை விபரிப்பார்.
- வணிக வங்கிகளின் சொத்தமைப்பினை பகுப்பாய்வு செய்து விபரிப்பார்.
- வணிக வங்கிகளின் விசேட தொழிற்பாடாகிய பணவாக்கம் செய்யப்படும் விதத்தினை புள்ளிவிபரத் தரவுகள் அடிப்படையில் விளக்குவார்.
- வணிக வங்கிகளின் பண ஆக்கத்தைத் தீர்மானிக்கும் காரணிகளை முன்வைப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- முக்கியமாக இலாபமீட்டும் நோக்கம் கொண்ட நிதி இடைத்தரகு நடவடிக்கையில் ஈடுபடுகின்ற நிதி அமைப்பினுள் செயற்படும் மிகவும் பிரபல்யமான முன்னணி நிதி நிறுவன அமைப்பு வணிக வங்கிகளாகும்.
- வணிக வங்கிகளால் வழங்கப்படும் சேவைகளை கீழ்த்தரப்பட்டுள்ள படி காட்டலாம்.
    - வைப்புக்களை ஏற்றல்
    - கடன் வழங்கல்
        - குறுங்காலக் கடன்
        - நீண்டகாலக் கடன்
    - முகவர் சேவை
    - பொதுப் பயன்பாட்டுச் சேவைகள்
        - வெளிநாட்டு வங்கி நடவடிக்கைகளின்போது உதவி செய்தல்
        - அடகுச் சேவை வழங்கல்
        - உண்டியல் சேவைகளை நடைமுறைப்படுத்தல்.
        - வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களுக்கு தேவையான வசதிகளைச் செய்தல்.
- வணிக வங்கியொன்றின் ஐந்தொகையில் உள்ளடங்கி யுள்ள விடயங்களை விளக்குவதன் மூலம் வங்கியின் வியாபார நடவடிக்கை தொடர்பான போதிய விளக்கத்தைப் பெற முடியும்.

- ஐநதொகையின் இடப்பக்கப் பகுதியால் காட்டப்படுவது வணிக வங்கிகளின் பொறுப்புக்களாகும். வலப்பக்கத்தில் காட்டப்படுவது சொத்துக்களாகும்.
- பொறுப்புக்களின் மொத்தம் சொத்துக்களின் மொத்தத்துக்குச் சமனாக வேண்டும் என்பது.
  (இலங்கை மத்திய வங்கி அறிக்கைப்படி வணிக வங்கிகளின் ஐந்தொகை தொடர்பாக விளக்கத்தை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும்.)
- வணிக வங்கியொன்று வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவது கீழ்த்தரப்படும் இரண்டு பிரதான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டேயாகும்.
  - திரவத்தன்மையைப் பேணுதல்
  - இலாபத்தன்மையை உயர்வாக வைத்திருத்தல்.
- சட்ட ரீதியான ஒதுக்கு வீதம்
  வணிக வங்கிகள் மூலம் மத்திய வங்கியின் உத்தரவுக்கேற்ப தமது வைப்புத் தொகையில் குறிப்பிட்ட ஒரு சதவீதத்தை பண ஒதுக்காக பேணிச் செல்ல வேண்டுமென்பதுடன் அவ்விகிதம் சட்டரீதியான ஒதுக்கு வீதம் என அழைக்கப்படும்.
- மத்திய வங்கி இவ்விகிதத்தைக் காலத்துக்குக் காலம் மாற்றியமைக்கும்.
- வணிக வங்கிகளில் சட்டரீதியான ஒதுக்கு வீதத்தை விடக் கூடுதலாக காணப்படுகின்ற ஒதுக்குகளின் அளவு மிகை ஒதுக்கு என அழைக்கப்படுவதுடன் அதனைப் பின்வருமாறு காணலாம்.

  மிகை ஒதுக்கு = காணப்படும் பண ஒதுக்கு - சட்ட ரீதியான பண ஒதுக்கு

- மிகை ஒதுக்கு பின்வரும் காரணிகளால் தீர்மானிக்கப்படும் என்பது.
  - கடனுக்காகக் காணப்படும் கேள்வி
  - மத்திய வங்கியின் பணக்கொள்கை
- வைப்புப் பெருக்கி என்பது கேள்வி வைப்புக்களின் கடனாக்கத் (வைப்பாக்க) தடவைகளாகும் என்பதோடு அதிகரித்த ஒதுக்குக ளைப் போல எத்தனை மடங்கினால் கேள்வி வைப்புக்கள் அதிகரிக்கும் என்பது. வங்கி வைப்பாக்கம் பெருக்கியினால் காட்டப் படும்.

- வைப்புப் பெருக்கி சட்டரீதியான ஒதுக்கு விகிதத்தின் தலைகீழ் வடிவத்துக்கு சமனாகம் என்பது.

$$\text{வங்கி வைப்பாக்கப் பெருக்கி} = \frac{1}{\text{சட்டரீதியான ஒதுக்கு வீதம்}} = \frac{1}{r}$$

உதாரணம்: வங்கி வைப்பாக்கப் பெருக்கி ( K) = 1/r
r = 10% எனில் வைப்பாக்கப் பெருக்கி 1/10% = 10

திரவ த்தன்மையைப் பேணும்போது இலாபமீட்டுதல் குறைகின்ற அதேவேளை இலாபத்தன்மையைப் பேணும்போது திரவத்தன்மை குறையும்.

மேலுள்ள இரண்டு நோக்கங்களிடையேயும் முரண்பாடு காணப்படு வதனால் இரு நோக்கங்களையும் சமநிலையில் பேணும் வகையில் சொத்துக்களைப் பேணிச் செல்ல வேண்டும்.

- வணிக வங்கிகள் தமது மிகை ஒதுக்கினைக் கடனாக வழங்குவதன் மூலம் தம்மிடம் காணப்பட்ட தொகையைப் போல் பல மடங்கு வைப்புக்களை உருவாக்குவது பண ஆக்கமாகம்.
- தனியுரிமை வங்கி முறையொன்று காணப்படும்போது ஒரு வங்கி மட்டுமே தொழிற்படுகின்ற காரணத்தினால் பண ஆக்கம் செய்ய முடியுமாக இருப்பினும் வங்கியமைப்பொன்று காணப்படும் போது தனியொரு வங்கியினால் பண ஆக்கம் செய்ய முடியாது.
- வங்கியமைப்பொன்றின் கடனாக்கம் செயன்முறையின்போது பின்வருவன எடுகோள்களாக கொள்ளப்படும்.
  - ஆரம்ப வைப்புச் செய்யப்பட்ட பின்னர் வங்கி முறைமையினுள் புதிதாக பணம் உள்வருதலோ வங்கி முறைக்கு வெளியே பண வெளியேற்றமோ நடைபெறுவதில்லை.
  - சகல கடன் பெறுவோர்களும் தாம் பெற்ற கடன் பணம் முழுவதையும் வேறு வங்கியொன்றில் வைப்பாக இடுகின்றனர்.
  - சகல வங்கிகளும் மிகை ஒதுக்கினைப் பேணவில்லை என்பது.
- பண ஆக்கத்தைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் பல காரணிகள் உள்ளன.
  - r - (சட்டரீதியான ஒதுக்கு வீதம்) அதிகரிக்கும்போது வைப்புப் பெருக்கியின் பெறுமதி குறைவடைவதுடன் r குறையும்போது வைப்புப் பெருக்கி அதிகரிக்கும் என்பது.
- வைப்பாக்கம் தொடர்பாக பின்வரும் வரையறைகள் காணப்படு கின்றன.
  - பொதுமக்கள் சட்ட முறைப் பணத்தை தம்மிடம் வைத்துக் கொள்வதற்கு கூடுதலாக விருப்பம் தெரிவிக்கும் போது வணிக வங்கிகளின் மிகை ஒதுக்குகள் குறைவடையும்.

- வங்கிகள் மிகை ஒதுக்கினை வைத்திருப்பதற்கு விரும்பும் போது வைப்பாக்கம் குறைவடையும்.
- கடனுக்கான கேள்வி குறைவடைதல்.
- மத்திய வங்கியின் பணக்கொள்கையின் கீழ் கடன் விரிவாக்கம் தொடர்பாக விதிக்கப்படும் எல்லைகள்.

- நிதியமைப்பின் நிலைபேறானதன்மை முக்கியம் பெறுவது பின்வரும் காரணங்களாலாகும்.
    - நிதி நிறுவனங்கள் மற்றும் நிதிச் சந்தைகள் வினைத்திறனுடன் செயலாற்றுவதற்காக
    - சென்மதி நிலுவைப் பிரச்சினையைத் தவிர்த்துக் கொள்வதற் காக
    - சொத்துக்களின் விலைகளை உறுதிப்படுத்துவதற்காக
    - சந்தையின் திரவத் தன்மையைப் பேணுவதற்காக
- பொருளாதார, விலை உறுதிப்பாடு மற்றும் நிதிக் கொள்கையின் நிலைபேறு ஆகிய நோக்கங்களை அடைவதற்காக வட்டி விகிதம் மற்றும் பண நிரம்பல் மீது செல்வாக்குச் செலுத்துவதற்காக பணக் கருவிகளைச் செயற்படுத்தும் செயற்பாடு பணக் கொள்கை என அழைக்கப்படலாம்.
- பணக் கொள்கையைச் செயற்படுத்தவதற்கான நோக்கத்தைப் பின்வருமாறு காட்டலாம்.
    - செயற்பாட்டு நோக்கம் - உயர்வலுப் பண அளவு
    - இடையீட்டு நோக்கம் - வட்டி மற்றும் பண நிரம்பல்
    - இறுதி நோக்கம் - விலை மற்றும் நிதியமைப்பின் உறுதி

**தேர்ச்சி 8** : பொருளாதார செயற்பாட்டுக்கு பணம் மற்றும் வங்கியமைப்பு பங்களிக்கும் விதத்தினை ஆராய்வார்.

**தேர்ச்சி மட்டம் 8.7** : இலங்கையின் நாணயக் கொள்கைக் கருவிகளின் பயன்பாட்டை ஆராய்வர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- நாணயக் கொள்கையை வரைவிலக்கணப்படுத்துவார்.
- நாணயக் கொள்கைக் கருவிகளை வரைவிலக்கணப்படுத்துவார்.
- தொகை ரீதியான பணக்கொள்கைக் கருவிகளைப் பெயரிட்டு அவற்றை விளக்குவார்.
- பண்புரீதியான கடன் கட்டுப்பாட்டுக் கருவிகளைப் பெயரிட்டு அவற்றை விளக்குவார்.
- நாணயக் கொள்கையின் ஊடுகடத்தற் பொறிமுறையை விளக்குவார்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

**பிரவேசம்** :
- குளம் ஒன்றின் சுருங்கை ஒன்றினால் நிறைவேற்றப்படும் பணிகள் தொடர்பாக மாணவரிடம் கருத்துக்களைப் பெறவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரந்து கலந்துரையாடலை நடாத்தவும்.
- குளம் ஒன்றில் நீர் முகாமையின்போது சுருங்கை உபயோகிக்கப் படும் தேவையான அளவு நீரை தேவையான இடங்களுக்கு விநியோகம் செய்து கட்டுப்படுத்துவது அதன் மூலம் நடைபெற்றது.
- அதே போன்று தான் இலங்கை மத்திய வங்கியும் நாட்டின் பண நிரம்பலைக் கட்டுப்படுத்துவற்காக பல்வேறு கருவிகளையும் பயன்படுத்துகின்றது.
- இவ்வாறு பண நிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்காக பயன்படுத்தப் படும் பல்வேறு கருவிகள் பணக் கொள்கைக் கருவிகள் என அழைக்கப்படும்.

**கற்றலுக்கான உத்தேச அறிவுறுத்தல்கள்:**
- பின்வருவன மத்திய வங்கியினால் கடந்த வருடத்தில் பணக் கொள்கைக் கருவிகளாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சிலவாகும். அவற்றுள் உமது குழுவுக்குக் கிடைக்கப் பெற்றுள்ள நடவடிக்கைகளின் மீது அவதானத்தைச் செலுத்தவும்.
  - வங்கி வட்டி வீதத்தை 10% இலிருந்து 14% ஆக உயர்த்துதல்.
  - றப்பர் பயிர்ச் செய்கைக்கான கடனுக்காக வட்டி வீதம் 12% இலிருந்து 10% ஆகக் குறைதல்.

- மத்திய வங்கி திறந்த சந்தையில் 5 மில்லியன் ரூபா பெறுமதி யுடைய உண்டியல்களை விற்பனை செய்தல்.
- வணிக வங்கி மூலமாக பேணப்பட வேண்டிய ஒதுக்கு விகிதம் 20% இலிருந்து 25% ஆக அதிகரித்தல்.

- உங்களுக்குக் கிடைத்துள்ள நடவடிக்கையை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளவும்.
- அந்த நடவடிக்கையின் காரணமாகப் பொருளாதாரத்தின் பண நிரம்பலுக்கு மற்றும் கடன் நிரம்பலுக்கு ஏற்படும் பாதிப்பைப் பற்றிக் கலந்துரையாடவும்.
- உங்களுக்குரிய விடயத்துக்கும் கடன் கட்டுப்பாட்டுக்கும் இடையில் காணப்படும் தொடர்பினை விளக்கவும்.
- உமது கண்டறிதலை முழு வகுப்புக்கும் ஆக்கபூர்வமாக முன்வைக்கவும்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- வட்டி வீதத்தையும் பண நிரம்பலையும் மாற்றமடையச் செய்வதன் மூலம் கடனுக்கான செலவு, திரவத்தன்மை என்பவற்றில் செல்வாக்குச் செலுத்தல், நாணயக் கொள்கை என அழைக்கப் படும்.
- தொகை ரீதியான கடன் கட்டுப்பாட்டுக் கருவி மற்றும் பண்பு ரீதியான கடன் கட்டுப்பாட்டுக் கருவி என பணக்கொள்கையைச் செயற்படுத்தும் இரண்டு பிரதான கருவிகள் காணப்படுகின்றன.
- இதற்கு மேலதிகமாக கடன் கொள்கை ஊடுகடத்தற் பொறிமுறை என்ற வகையில் வேறு நாணயக் கொள்கைக் கருவிகளும் காணப்படுகின்றன.
- கடன் நிரம்பலைக் குறைப்பதற்காக பொதுவாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொகை ரீதியான கடன் கட்டுப்பாட்டுக் கருவி களாகவும், கடன் அளவையும் கடன் பெறுகின்ற துறையையும் கட்டப்படுத்துவதற்காக மத்திய வங்கி மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பண்புரீதியான கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள் எனவும் அழைக்கப்படும்.
- தொகை ரீதியான கடன் கருவிகள், கொள்கை ரீதியான வட்டி வீதம், சட்ட ரீதியான ஒதுக்கு வீதம், திறந்த சந்தை நடவடிக்கை எனப் பிரதானமாக மூன்றாகப் பிரிக்கப்படும்.
- கொள்கை ரீதியான வட்டி வீதத்தைச் செயற்படுத்துவதற்காக பயன்படும் உபகரணங்கள் கீழ் வருமாறு காட்டப்படலாம்.
  - வங்கி வட்டி வீதம்
  - மீள் கொள்வனவு செய்யும் வீதம்
  - மீள் விற்பனவு செய்யும் வீதம்

- பண்பு ரீதியான கடன் கட்டுப்பாட்டு உபகரணங்களும் பின்வருமாறு பல்வேறு வடிவங்களில் காணப்படலாம்.
    - கடன் எல்லைகளுக்கான வரையறைகள் விதித்தல்.
    - கடனுக்கான பிணைகளை நிர்ணயித்தல்.
    - தெரிவுசெய்யப்பட்ட வட்டி விகிதங்களை நிர்ணயித்தலும், ஊக்குவித்தலும்.
    - ஊக்குவிப்பு
- நிதியமைப்பில் ஏற்படும் மாற்றம் காரணமாக மொத்தச் செலவு மற்றும் சமநிலை உற்பத்தி என்பவற்றில் ஏற்படும் மாற்றத்தை ஒழுங்குபடுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஊடுகடத்தற் பொறிமுறை என அழைக்கப்படும்.
- அதற் மூலம் மொத்தச் செலவு மற்றும் மொத்த உற்பத்தி என்பவற்றில் ஏற்படும் பாதிப்பை விளக்க முடியும்.




- இவை ஒவ்வொன்றும் காரணமாக நிதி விரிவாக்கத்துக்கு மற்றும் கடன் நிரம்பலுக்கு ஏற்படும் பாதிப்பை விளக்க முடியும்.

**தேர்ச்சி 8** : பொருளாதார செயற்பாட்டுக்கு பணம் மற்றும் வங்கியமைப்பு பங்களிக்கும் விதத்தினை ஆராய்வார்.

**தேர்ச்சி மட்டம் 8.8 :** இலங்கையின் நிதிச்சந்தையைப் பகுப்பாய்வு செய்வர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- நிதிச் சந்தையை வரைவிலக்கணப்படுத்துவார்.
- நிதிச் சந்தையை வகைப்படுத்திக் காட்டுவார்.
- நிதிச் சந்தையை வரைவிலக்கணப்படுத்தி அதில் செயற்படுகின்ற உப சந்தைகளை விளக்குவார்.
- மூலதன சந்தையினை வரைவிலக்கணப்படுத்தி மூலதனச் சந்தையில் கொடுக்கல் வாங்கல் செய்கின்ற நிறுவனங்களை விளக்குவார்.
- பணச் சந்தை மற்றும் மூலதனச் சந்தைக்கிடையிலான வேறு பாட்டை ஒப்பிடுவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- நிதிச் சொத்துக்களின் பரிமாற்றத்துக்கவசியமான வசதிகளை வழங்கும் நிறுவனங்கள் அல்லது செயலொழுங்குகள் நிதிச் சந்தை என அழைக்கப்படும்.
- நிதிச் சந்தையானது பணச் சந்தை மற்றம் மூலதனச் சந்தை என இரு பிரிவுகளைக் கொண்டது.
- பணம் மற்றும் குறுங்கால நிதிக் கருவிகள் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்ற சந்தை பணச்சந்தையாகும்.
- குறுங்காலக் கடனுக்குக் கேள்வியை ஏற்படுத்துவோர் மற்றும் நிரம்பலாளர்களைத் தொடர்புபடுத்தல் அதன் பிரதான தொழிற் பாடாகும்.
- குறுங்காலக் நிதிக் கருவி என்பது பொதுவாக ஒரு வருடத்துக்குக் குறைந்த முதிர்ச்சிக் காலத்தையுடய உண்டியல்களும் பிணைகளு மாகும்.
- பணச் சந்தையில் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்ற கருவிகள் அழைப்புக்கடன் திறைசேரி உண்டியல்கள், முறிகள், உள்நாட்டு, வெளிநாட்டு நாணய உண்டியல்கள் , வணிகப் பத்திரங்கள், மீள் கொள்வனவு ஒப்பந்தம் போன்றனவாகும்.
- பணச் சந்தையில் காணப்படும் உப சந்தைகள் பின்வருமாறு
  - வங்கிகளுக்கிடையிலான அழைப்புகடன் சந்தை
  - முதனிலை மற்றும் இரண்டாம் நிலை திறைசேரி உண்டியல் சந்தை
  - உள்நாட்டு, வெளிநாட்டு நாணயமாற்றுச் சந்தை

- வரையறுக்கப்பட்ட வெளிநாட்டு வங்கிச் சந்தை
- குறுங்காலக் கடன் சந்தை
  - வணிகப் பத்திரச் சந்தை
  - மீள் கொள்வனவு ஒப்பந்தச் சந்தை

- வியாபார நிறுவனங்களுக்கும் அரசாங்கத்துக்கும் அவசியமான நடுத்தர மற்றும் நீண்டகால நிதிகளை வழங்குவது மூலதனச் சந்தையாகும்.
- மூலதனச் சந்தை பின்வரும் நிறுவனங்களைக் கொண்டது.
  - கொழும்பு பங்குப் பரிமாற்றம்
  - அனுமதிப் பத்திரம் பெற்ற விசேட வங்கிகள்
  - வணிக வங்கி
  - குத்தகைக் கம்பனிகள்
  - நிதிக் கம்பனிகள்
  - அலகுப் பொறுப்பாட்சி நிறுவனம்
  - சேமிப்பு நிறுவனங்கள் போன்றன.
- ஒரு வருடத்துக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட கடன் பத்திரங்கள் இச்சந்தையில் சந்தைப்படுத்தப்படும்.
- மூலதன சந்தையில் பரிமாற்றப்படுகின்ற பிரதான கருவிகள் பின்வருமாறு
  - கடன்
  - சாதாரண பங்குகள்
  - பிணையங்கள்
- மூலதன சந்தையில் உள்ள உப சந்தைகள் கீழே பின்வருமாறு
  - பங்குச்சந்தை
  - பிணைய சந்தைகள்
  - வணிக வங்கிகளின் நீண்டகால கடன் சந்தை
  - வங்கியில்லாத நிதி நிறுவனங்களின் நீண்டகால கடன் சந்தை

**தேர்ச்சி 9** : பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசாங்கம் தலையிடும் விதத்தை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 9.1** : சந்தை முறைமை தோல்வியடைவதற்கான காரணங்களைத் தர்க்க ரீதியாக முன்வைப்பர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- சந்தை முறைமையின் தோல்வியை வரைவிலக்கணப்படுத்துவார்.
- சந்தை முறைமை தோல்வியடைவதற்கான காரணங்களை விளக்குவார்.
- சந்தை முறைமை தோல்வியடைவதற்கான காரணங்கள், சந்தை முறைமையில் தோல்வியை ஏற்படுத்தும் விதத்தை விளக்குவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- சந்தை முறைமையின் தோல்வி என்பதனால் கருதப்படுவது சமூக நலனுக்காக அருமையான வளங்களைப் பங்கீடு செய்வதில் சந்தைப் பொறிமுறை தோல்வியடைதல்.
- தன்னிச்சையாக செய்யப்படும் தெரிவுகள் சமூக நலனுக்கு எப்போதும் பங்களிப்புச் செய்வதில்லை.
- அப்போது வளங்களின் வினைத்திறனற்ற பங்கீடொன்று ஏற்படும் என்பது.
- சந்தைத் தோல்வியில் பின்வரும் காரணங்கள் செல்வாக்குச் செலுத்தும் என்பது.
  - வெளிவாரிகள்
  - நிறைவில் போட்டி
  - பொதுப் பண்டங்கள் நிரம்பல் செய்யப்படாமை
  - சமூக நலப் பண்டங்கள்
- சந்தைத் தோல்விக்குக் பின்வருவன காரணமாகின்றன.
  - வெளிவாரிகள்
  - நிறைவில் போட்டி
  - தகவல்கள் பூரணமற்றதாக அமைதல்
  - பொதுப் பண்டங்கள் நிரம்பல் செய்யப்படாமை
  - தரைப் பொதுப் பண்டங்கள் உத்தமமாக வழங்கப்படாமை.
  - சமூக நலப் பண்டங்கள் உத்தமமாக வழங்கப்படாமை
- உற்பத்தி காரணமாகவும் நுகர்வு காரணமாகவும் அதனுடன் நேரடித் தொடர்பு எதுவுமற்ற பல்வேறு தரப்பினருக்கும் ஏற்படுகின்ற சாதகமான மற்றும் பாதகமான விளைவுகள் வெளிவாரிகள் எனப்படுவதுடன் அவற்றைக் கவனத்திற் கொள்ளாமை காரணமாக சந்தை முறையின் தோல்வி ஏற்படுகின்றது.

- சந்தை முறைமையில் போட்டித்தன்மை இல்லாதொழிந்து தனியுரிமை நிலையொன்று உருவாதல் நிறைவில் போட்டி என அழைக்கப்படும்.
- சந்தை முறைமையின் தோல்விக்கு நிறைவில் போட்டி பின்வருமாறு காரணமாகும்.
    - வளங்களின் வினைத்திறனற்ற பங்கீடு
    - உற்பத்தி சமூகத்துக்கு வேண்டிய உத்தம உற்பத்தியை விடக் குறைவடைதல்.
    - பொருளின் விலை போட்டி நிலைமையின் போது காணப்படும் விலையை விடக் குறைவடைதல்.
- ஒரு தனிநபரின் நுகர்வு இன்னொரு தனி நபரின் நுகர்வைக் கட்டுப்படுத்துவதற்குக் காரணமாக அமையாத நுகர்வின்போது போட்டித் தன்மையொன்று இல்லாத மற்றும் கூட்டாக நுகர்கின்ற பொருட்கள் சேவைகள் பொதுப் பண்டங்களாகும்.

  உதாரணம்: வீதி வெளிச்சம், வெளிச்ச வீடு, மணிக்கூட்டுக் கோபுரம், தேசிய பாதுகாப்பு
- பொதுப் பண்டங்களுக்கு விலையொன்றை அறவிட கூடியமை காரணமாகவும் இலாபமொன்றைப் பெற முடியாததனாலும் சந்தை முறையின் கீழ்ப் பொதுப் பண்டங்கள் நிரம்பல் செய்யப்படுவதில்லை.
- சந்தை முறைமையின் கீழ்ப் பொதுப் பண்டங்கள் நிரம்பல் செய்யப்படாமையினால் பொதுப் பண்டங்களை வழங்குவதற்கு அரசாங்கம் தலையிட வேண்டி ஏற்படுகின்றது.
- ஒரு தனி நபரின் நுகர்வு இன்னொருவரின் நுகர்வைக் கட்டுப்படுத்துவதற்குக் காரணமாகின்ற நுகர்வின்போது போட்டித் தன்மையற்ற பொருட்கள், சேவைகள் அரைகுறைப் பொதுப் பண்டங்களாகும்.

  உதாரணம்: பெருந்தெருக்கள்
- சந்தை முறைமையின் கீழ் அரைப் பொதுப்பண்டங்கள் உத்தமமான அளவில் நிரம்பல் செய்யப்படாமை காரணமாக அரசாங்கம் தலையிட்டு அரைப் பொதுப் பண்டங்களை உத்தமமான அளவில் நிரம்பல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி ஏற்படுகிறது.
- நுகர்வின்போது தனியார் நலன்களை விட மேலதிகமாக சமூக நலனைப் பெற்றுத்தரும் பொருட்கள், சேவைகள் சமூக நலப் பண்டங்களாகும்.

  உதாரணம்: கல்வி, சுகாதாரம், சுகநல சேவைகள்

- அந்தை முறைமையின் கீழ் அரைகுறைப் பொதுப் பண்டங்கள் உத்தம அளவில் உற்பத்தி செய்யப்படாமையால் குறை நுகர்வு நிலை யொன்று ஏற்படுகின்றது.
- இதனால் சமூக நலப் பண்டங்களின் நுகர்வுக்கு நுகர்வோரை ஊக்குவிப்பதற்கு அரசு தலையிட வேண்டியுள்ளது.
- நுகர்வின்போது தனியார் நலன்களைவிட குறைந்த சமூக நலனைப் பெற்றுத் தருகின்ற பொருட்கள், சேவைகள் சமூகத்துக்கு பாதகமான பண்டங்கள் ஆகும்.
- சந்தை முறைமையின் கீழ் சமூகத்துக்குப் பாதகமான பண்டங்களை வழங்கும் போது மிகை நுகர்வொன்று ஏற்படுகின்றது.
- இதனால் சமூகத்துக்கு பாதகமான பண்டங்களின் நுகர்வைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையிட வேண்டி ஏற்படுகின்றது.
- சந்தை முறைமையின் கீழ் நுகர்வோருக்கும் உற்பத்தியாளருக்கும் தீர்மானமெடுப்பதற்கு அவசியமான தகவல்கள் வினைத்திறனான முறையில் கிடைக்காமை தகவல்களின் பூரணமற்ற தன்மையாகும்.
- சந்தைத் தோல்வியைத் தடுப்பதற்காக அரசாங்கத்துக்குப் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

**தேர்ச்சி 9** : பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசாங்கம் தலையிடும் விதத்தை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 9.2** : சந்தை முறைமை தோல்வியடைவதில் வெளிவாரி விளைவுகளின் தாக்கத்தைப் பரீட்சிப்பர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- வெளிவாரி விளைவுகளை வரைவிலக்கணப்படுத்துவார்.
- நேர்கணிய வெளிவாரி விளைவு, எதிர்க்கணிய வெளிவாரி விளைவு என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை உதாரணங்களுடன் விளக்குவார்.
- உற்பத்தியின்போதும் நுகர்வின்போதும் ஏற்படுகின்ற நேர்க்கணிய, எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளுக்கு உதாரணங்களை முன்வைப்பார்.
- உற்பத்தியின்போதும் நுகர்வின்போதும் ஏற்படும் வெளிவாரி விளைவுகளை வரிப்படத்தின் துணையுடன் விளக்குவார்.
- வெளிவாரி விளைவுகளின் காரணமாக சந்தைமுறைமை தோல்வியடையும் விதத்தை விளக்குவார்.
- வெளிவாரி விளைவுகளினால் ஏற்படும் சந்தைத் தோல்வியைத் தவிர்ப்பதற்கான முன்மொழிவுகளை முன்வைப்பார்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

**பிரவேசம்** :
- வெளிவாரி விளைவுகளைக் காட்டும் இரண்டு பெரிய படங்களை வகுப்புக்கு முன்வைக்கவும்.
  உதாரணம்: கைத்தொழிற்சாலையொன்றின் மற்றும் செவ்விளநீர்க் கோம்பைகளில் நீர் நிறைந்து நுளம்புகள் பெருகுதல். - படங்கள்
- படங்களில் அடங்கியுள்ளவைகளின் மூலம் சமூகத்துக்கு ஏற்படும் சாதகமான, பாதகமான விளைவுகள் பற்றி மாணவர்களின் கருத்துக்களை விசாரிக்கவும்.
  உதாரணம்:
  - கைத்தொழிற்சாலைகள் காரணமாக வேலை வாய்ப்புக்கான சந்தர்ப்பங்கள் உருவாகுதல்.
  - செவ்விளநீர்க் கோப்பைகளில் நீர் நிரம்புவதனால் டெங்கு மற்றும் யானைக்கால் நோய் ஏற்படல்.
  - அதனால் சமூகத்துக்கு நட்டவீடு வழங்கப்படுவதோ சமூகத்தினால் செலவொன்று செய்யப்படுவதோ நடைபெறுவதில்லை.

- இவ்வாறு ஏதாவதொரு பொருளாதார நடவடிக்கை காரணமாக அதனுடன் தொடர்பற்ற வெளித்தரப்பினருக்கு ஏற்படும் நன்மை அல்லது தீமை வெளிவாரி விளைவுகள் எனக் குறிப்பிடப்படும்.
- உற்பத்தியில் போலவே நுகர்விலும் வெளிவாரி விளைவுகள் ஏற்படும்.

- மாணவர்களைப் பொருத்தமான முறையில் குழுக்களாக்கி கற்றலுக் கான உத்தேச அறிவுறுத்தல்களை வழங்கி செயற்பாடுகளில் ஈடுபடுத்தவும்.

**கற்றலுக்கான உத்தேச அறிவுறுத்தல்கள்:**

- பின்வரும் தலைப்புக்களில் உமக்குத் தரப்பட்டுள்ள தலைப்பின் மீது கவனம் செலுத்தவும்.
  - உற்பத்தயில் வெளிவாரி விளைவுகள்
  - நுகர்வில் வெளிவாரி விளைவுகள்
- உமக்குத் தரப்பட்டுள்ள தலைப்பை விளங்கிக் கொள்வதற்காக குழுக் கலந்துரையாடலொன்றைச் செய்யவும்.
- தலைப்புக்கு ஏற்ப உங்களது அனுபவங்களின் அடிப்படையில் தகவல்களைச் சேகரியுங்கள்.
- நீங்கள் சேகரித்த தரவுகளின் அடிப்படையில் வெளிவாரி விளைவுகளைப் பட்டியற்படுத்தவும். அவ்வெளிவாரி விளைவுகளை நேர்க்கணிய மற்றும் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள் என வேறுபடுத்திக் காட்டவும்.
- வெளிவாரி விளைவுகள் ஏற்படுவதற்கான காரணங்களையும் அவற்றின் விளைவுகளையும் இனங்காணவும்.
- வெளிவாரி விளைவுகளைத் தவிர்த்துக் கொள்வதன் முக்கியத்துவம் மற்றும் தவிர்க்கக்கூடிய முறைகள் என்பவற்றுக்கான உங்களது கருத்துக்களை முன்வைக்கவும்.
- உங்களின் தேடியறிதல்களை முழு வகுப்புக்கும் ஆக்கபூர்வமாக முன்வைக்கவும்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- வெளிவாரி விளைவுகள் என்பது ஏதாவதொரு பொருளாதார நடவடிக்கை காரணமாக அதனுடன் தொடர்பற்ற வெளித்தரப் பினருக்கு ஏற்படும் நன்மை அல்லது தீமையாகும்.
- உற்பத்தியில் போலவே நுகர்விலும் வெளிவாரி விளைவுகள் ஏற்படும்.
- உற்பத்தி நடவடிக்கை காரணமாக வெளித்தரப்பினருக்கு ஏற்படும் நன்மை அல்லது தீமை உற்பத்தியில் வெளிவாரி விளைவுக ளாகும்.

- நுகர்வு நடவடிக்கை காரணமாக வெளித்தரப்பினருக்கு ஏற்படும் நன்மை அல்லது தீமை நுகர்வின் வெளிவாரி விளைவுகளாகும்.
- வெளித்தரப்பினருக்கு ஏற்படும் நன்மையான நிலைமை நேர்க் கணிய வெளிவாரி விளைவுகளாகவும் தீமையான நிலைமை எதிர்க்கணிய வெளிவாரி விளைவாகக் கருதப்படும்.
  உதாரணம்:
  - உற்பத்தியில் நேர்க்கணிய வெளிவாரி விளைவு.
    - புதிய தொழில்நுட்பம் காரணமாக செய்யப்பட் ஆய்வுகள்
    - அழகான பூந்தோட்டம்
    - தேனீ வளர்ப்பு
  - உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளுக்கான உதாரணங்களைப் பின்வருமாறு காட்டலாம்.
    - எரிபொருள் தகனத்துடன் தொடர்பான உற்பத்திச் செயற்பாடுகள்
    - ஓசோன் படலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் உற்பத்திச் செயற்பாடுகள்
  - நுகர்வில் நேர்க்கணிய வெளிவாரி விளைவுகளுக்கான உதாரணங்களைப் பின்வருமாறு காட்டலாம்.
    - புண்ணியக் கொடைகள்
    - நோய்களைத் தடுக்கும் ஊசி மருந்துகள்
    - கல்வி சார்ந்த ரூபவாஹினி நிகழ்ச்சிகள்
  - நுகர்வில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளைப் பின்வருமாறு காட்டலாம்.
    - கழிவுப்பொருட்கள் குவிக்கப்படுதல்
    - மோட்டார் வாகனங்களால் புகை வெளியேற்றப்படல்
- எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள் காரணமாக வெளிவாரிச் செலவுகளும் நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள் காரணமாக வெளிவாரி நலன்களும் ஏற்படும்.
- வெளிவாரிச் செலவு மற்றும் வெளிவாரி நலன்களை அடிப்படையாகக் கொண்டு சமூக செலவுகளும், சமூக நலன்களும் ஏற்படும்.

  தனியார் செலவு + வெளிவாரிச் செலவு = சமூக செலவு

  தனியார் நலன் + வெளிவாரி நலன் = சமூக நலன்
- சந்தை முறைமையின் கீழ் தனியார் செலவுகளும் தனியார் நலன்களும் மட்டுமே கணக்கில் எடுக்கப்படும்.
- வெளிவாரி விளைவுகளைக் கணக்கிலெடுக்காமை காரணமாக சந்தை முறைமையின் உற்பத்தி மற்றும் நுகர்வு தொடர்பான தீர்மானங்கள் உத்தமமாக அமையாது.

- இதனைக் பின்வரும் வரிப்படத்தின் அடிப்படையில் விள்கக முடியும்.




தரப்பட்ட வரிப்படத்தில்;

MSC = எல்லைச் சமூக செலவு

MSB = எல்லைச் சமூக நலன்

MPB = எல்லை தனியார் நலன்

- மேலுள்ள வரிப்படத்தின் படி சந்தையின் உத்தம சமநிலையாவது எல்லைச் சமூக செலவு (MSC) எல்லை தனியார் நலன் என்பன (MPB) சமப்படுகின்ற A புள்ளியாகும். $Q_0$ சமநிலை உற்பத்தி உத்தம உற்பத்தியாகும்.
- சமூகத்தின் பார்வையில் உத்தம சமநிலையாவது எல்லைச் சமூக செலவு (MSC), எல்லைச் சமூக நலன் (MSB) க்குச் சமப்படும் B புள்ளியாகும். $Q_1$ சமநிலை உற்பத்தி உத்தம உற்பத்தியாகும்.
- நுகர்வின் நேர்க்கணிய வெளிவாரிகள் காணப்படும்போது சமூகத்தின் பார்வையில் உத்தம நுகர்வு சந்தையின் உத்தம நுகர்வைவிட உயர்வாக இருக்கும் ன்பது,




இவ் வரிப்படத்தில்; MSC = எல்லைச் சமூக செலவு,

MSB = எல்லைச் சமூக நலன்

MPB = எல்லை தனியார் நலன்

- இவ் வரிப்படத்தின் படி சந்தையின் உத்தம உற்பத்தியாவது எல்லை செலவு (MC) எல்லை சமூக நலன் என்பன (MSB) சமப்படுகின்ற A புள்ளியாகும். $Q_0$ சமநிலை உற்பத்தி உத்தம உற்பத்தியாகும்.
- சமூகத்தின் பார்வையில் உத்தம உற்பத்தியாவது எல்லைச் சமூக செலவு (MSC), எல்லைச் சமூக நலன் (MSB) க்குச் சமப்படும் B புள்ளியாகும். அதேவேளை $Q_1$ சமநிலை உற்பத்தி உத்தம உற்பத்தியாகும்.
- அதன்படி உற்பத்தி நேர்க்கணிய விளைவு காணப்படும்போது சந்தையின் உத்தம உற்பத்தியை விட சமூகத்தின் பார்வையின்படி உத்தம உற்பத்தி உயர்வாகும்.
- இதன்படி சந்தை முறைமையின் தோல்விக்கு வெளிவாரிகள் காரணமாகும் என்பது தெளிவாகின்றது என்பது.
- வெளிவாரி விளைவுகளால் ஏற்படும் தோல்விகளைத் தவிர்ப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.
    - நட்டஈடு வழங்கல்
    - உள்வாங்கச் செய்தல்
    - பங்கீட்டு நடவடிக்கைகள்
    - உரிமைப்பத்திரக் கட்டணம் அறவிடல்
    - தண்டம் விதித்தல்
    - சட்டங்களை விதித்தல்
- வெளிவாரி விளைவுகளைத் தவிர்ப்பதற்காக நிறுவனங்கள் தாமாகவே நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளன.
    - பாதிப்புக்களை ஈடுசெய்ய இலாபத்தில் ஒரு பகுதியை ஒதுக்குதல்.
    - ஒலிமாசடைவதைத் தவிர்ப்பதற்கு தொழிற்சாலையினுள் நவீன உபகரணங்களைப் பொருத்துதல்.

**தேர்ச்சி 9** : பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற் காக அரசாங்கம் தலையிடும் விதத்தை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 9.3** : சந்தைப் பொருளாதாரமொன்றில் அராசாங்கத்தின் தொழிற்பாடு களை விளக்குவர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- சந்தைப் பொருளாதாரமொன்றில் அரசின் தொழிற்பாடுகளை இனங்காட்டுவார்.
- அவற்றை வரைவிலக்கணப்படுத்துவார்.
- அத்தொழிற்பாடுக்ள சந்தையில் வினைத்திறனை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தைக் காட்டுவார்.
- சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் அரசின் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைககைள உதாரணத்துடன் முன்வைப்பார்.
- சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் அரசின் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளில் பொருளாதார விளைவுகளை விளக்குவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டடல்கள்:**
- சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் அரசின் தொழிற்பாடுகளைக் பின்வருமாறு காட்டலாம்.
  - வளங்களை வினைத்திறனுடன் பங்கீடு செய்தல்.
  - வருமானம் மற்றும் சொத்து என்பவற்றில் நியாயமான பங்கீடு
  - சட்டங்களை ஆக்குவதும் நல்லாட்சியும்.
  - பேரினப் பொருளதார உறுதியை ஏற்படுத்தல்.
  - கீழ்க்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
- சந்தைப் பொறிமுறையை வினைத்திறனுள்ளதாக்குவதற்கு அவசியமான மற்றும் சமூக சூழலையும் எற்படுத்துவதற்காக செயற்படுகின்றது.
- சந்தை முறைமையில்காணப்படுகின்ற வினைத்திறன் இன்மைகளை நீக்குவதற்காக அரசாங்கம் பின்வருமாறு செயற்படும்.
  - பொதுப் பண்டங்களையும் சமூக நலப் பண்டங்களையும் வழங்குதல்.
  - நிறைவில் போட்டியைத் தவிர்த்தல்.
  - சூழல் மாசடைதல் போன்ற வெளிவாரி விளைவுகள் தொடர் பாக கவனம் செலுத்தல்.
  - பொதுச் சொத்துக்கள் தொடர்பான உரிமையை உறுதிப் படுத்தல்.

- நியாயத்துவத்தை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் கீழ்த்தரப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.
  - வருமானம், சொத்துக்களின் மறு பங்கீட்டை ஏற்படுத்தல்.
  - சொத்துரிமையின் உச்ச எல்லைக்கான வரையறைகள்
  - நிலச்சீர்திருத்தம்.
- பேரினப் பொருளாதார உறுதித் தன்மையைப் பேணுவதற்காக பணவீக்கம் மற்றும் வேலையின்மை போன்ற நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு அரசாங்க நிதி மற்றும் பணக் கொள்கைகளைப் பயன்படுத்தும்.
- பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதற் காக அரசு செயற்படும்.
- கீழ்க்கட்டமைப்பு வசதிகைள மேம்படுத்துவதற்காக அரசு பின்வருமாறு செயற்படும்.
  - பௌதிக கீழ்க்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
    உதாரணம்: பெருந்தெருக்கள், அதிவேகப்பாதை, பாலங்கள், துறைமுகங்கள், கட்டிடங்கள்.
  - நிறுவனக் கீழ்க்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்
    உதாரணம்: சட்ட அமைப்புக்கள், நீதிமன்றங்கள், கண்காணிப்பு நிறுவனங்கள்.
- சந்தைப் பொருளாதாரமொன்றில் அரசு தலையிடும்போது அரசாங்கத் துறைக்கேயுரித்தான சில குறைபாடுகளை அடிப்படை யாகக் கொண்டு எதிர்பார்த்த விளைவுகளைப் பெற்றுக் கொள்ளாமல் பொருளாதாரத்தில் வினைத்திறனற்ற தன்மை விருத்தி பெறுவது அரசின் தோல்வி என அழைக்கப்படும் என்பது.
- சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் அரசு தலையிடும்போது அரசாங்கம் தோல்வியடைவதற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்தும்.
  - நேர்மையற்ற தன்மைகளின் விளைவு
  - உறுதிப்படுத்தப்பட்ட விலைகளும் சூழல் பாதிப்புக்களும்
  - அதிகாரத்தைப் பெறுவதற்காக முறையற்ற செயல்களில் ஈடுபடல்.

**தேர்ச்சி 9** : பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற் காக அரசாங்கம் தலையிடும் விதத்தை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 9.4** : பேரினப் பொருளதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசு நிதிக் கொள்கையைப் பயன்படுத்தும் விதத்தை விளக்குவர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :

- அரச நிதிக் கொள்கையை வரைவிலக்கணப்படுத்துவார்.
- அரச நிதிக் கொள்கைக் கருவிகளைப் பெயரிட்டு விளக்குவார்.
- பல்வேறு பேரினப் பொருளாதார நோக்கங்களையும் அடைந்து கொள்வதற்கு அரச நிதிக் கொள்கையைப் பயன்படுத்தும் விதத்தை உதாரணங்களுடன் விளக்குவார்.
- பேரினப் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் போது ஏற்படும் பிரச்சினைகளை விளக்குவார்.
- பேரினப் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்கை யில் ஏற்படும் பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்வதற்கான முன்மொழிவுகளை முன்வைப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- பேரினப் பொருளதார செயலாற்றும் மூலம் ஒரு பொருளாதாரம் நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் நோக்கங்கள் பேரினப் பொருளாதார நோக்கங்களாகும்.
- சகல பொருளாதாரங்களும் பொதுவாக நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற பேரினப் பொருளாதார நோக்கங்கள் சில காணப்படுகின்ற அதே வேளை அவை கீழே தரப்பட்டுள்ளன.
  - நிறைதொழில் மட்டம்
  - பொருளாதார வளர்ச்சியை வேகப்படுத்தல்
  - விலை உறுதிப்பாடு
  - சென்மதி நிலுவைச் சமநிலை
  - நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி
- பொருளாதார செயற்பாட்டின் மீது பேரினப் பொருளாதார நோக்கங்கள் நிறைவேறுதல் தங்கியிருக்கிறது.
- பேரினப் பொருளாதார மாறிகளின் மட்டங்கள் மற்றும் காலத்துக் கேற்ப அவை வேறுபடும் விதத்துக்கேற்ப பொருளாதாரத்தின் செயற்பாடு தீர்மானிக்கப்படும்.
- பிரதான பேரினப் பொருளாதார மாறிகள் பல பொருளாதாரத்தி னுள் காணப்படுகின்றது.

  உதாரணம்: உற்பத்தி, வேலைமட்டம், விலைமட்டம், நுகர்வு

- பேரினப் பொருளாதார மாறிகளின் மட்டங்களும் அவை கால மாற்றத்துடன் வேறுபடும் விதமும் உள்ளக, வெளிக்காரணிகளால் தீர்மானிக்கப்படும்.
- பேரினப் பொருளதார மாறிகள் சாதகமான முறையில் மாற்றமடையாத போது பொருளாதார செயற்பாடு பாதகமடையும்.
- பொருளாதாரமொன்றின் மொத்தச் செயற்பாட்டினூடாக ஏற்படும் பிரச்சினைகள் பேரினப் பொருளாதாரப் பிரச்சினைகளாகும்.

  உதாரணம்:
  - வேலையின்மை
  - பணவீக்கம் உயர்வடைதல்
  - நாணயமாற்றுவீதம் வீழ்ச்சியடைதல்
- பேரினப் பொருளாதார மாறிகளை எதிர்பார்த்த மட்டத்தை அடையச் செய்வதனால் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம்.
- பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பொருளாதாரத்தை நெறிப்படுத்தல் பேரினப் பொருளாதார முகாமைத்துவம் என அழைக்கப்படும்.
- பொருளாதாரத்தை பேரினப் பொருளாதார இலக்குகளை நோக்கிச் செயற்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் பேரினப் பொருளாதார முகாமைத்துவம் என அழைக்கப்படும்.
- பேரினப் பொருளாதார முகாமைத்துவத்தின் போது எடுக்கப்படும் நடவடிக்கைகள் பேரினப் பொருளாதார கொள்கைகள் என அழைக்கப்படும்.

  உதாரணம்:

  பணக்கொள்கை, அரசாங்க நிதிக் கொள்கை, வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை
- அரசாங்க வருமானம் மற்றும் செலவினைச் செயற்படுத்துவதன் மூலும் பேரினப் பொருளாதார மாறிகளில் பாதிப்பினை ஏற்படுத்தல் அரச நிதிக் கொள்கையாகும்.

  (இறைக்கொள்கை, வரவு செலவுத்திட்டக் கொள்கை)
- அரச வருமானம், அரச செலவு மற்றும் அரசாங்கக் கடன் என்பன அரச நதிக் கொள்கையைச் செயற்படுத்தும் பிரதான கருவிகளாகும்.
- அரச நிதிக் கொள்கை மூலம் மொத்தக் கேள்விக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதன் காரணமாக பணக்கொள்கையைப் போலவே அரச நிதிக் கொள்கையும் கேள்வி முகாமைக் கொள்கை என அழைைக்கப்படுகின்றது.

- அரச நிதிக் கொள்கைக் கருவிகளைப் பயன்படுத்தும் பேரினப் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றுகின்றபோது பல பிரச்சினைகள் ஏற்படும்.

  **உதாரணம்:**

  (i) நிறைதொழில் மட்டத்தை அடைந்து கொள்வதற்கு விரிவாக்கல் வழிகளினூடாக எடுக்கப்படும் அரச கடன் அளவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் வேதனங்கள் அதிகரிப்பதனால் பணவீக்கம் ஏற்படல் மற்றும் அதன் மூலம் விலை உறுதி என்ற நோக்கத்தை அடைந்து கொள்வது கடினமானதாகும்.

  (ii) வரிச்சலுகைகளை வழங்குவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை வேகப்படுத்துவதற்கு முயற்சிக்கும்போது அந்த நோக்கம் நிறைவேறினாலும் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்குப் பாதிப்பு ஏற்படும்.

- இவ்வாறு அரச நிதிக் கொள்கையைப் பயன்படுத்தி பேரினப் பொருளாதாரக் கொள்கைகள் சகலதையும் நிறைவேற்றுவது கடினமான காரியமாக இருப்பதற்குக் காரணம் அவற்றின் நோக்கங்களுக்கிடையே முரண்பாடுகள் காணப்படுகின்றமை யாலாகும்.
- இப்பிரச்சினைகள் குறைகின்ற வகையில் அரச நிதிக் கொள்கையைச் செயற்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும்.

**தேர்ச்சி 9** : பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசாங்கம் தலையிடும் விதத்தை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 9.5** : அரச வருமானத்தின் பிரதான மூலமொன்றாக வரி முறையை விளக்குவர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :

- அரச வருமானத்தின் பிரதான மூலங்களைப் பெயரிட்டு விளக்குவார்.
- அரச வருமானத்தின் வரி வருமானம், வரியல்லாத வருமானம் என்பவற்றின் அமைப்பினை முன்வைப்பார்.
- வரியிடற் தத்துவங்களைப் பெயரிட்டு விளக்குவார்.
- வரியை வகைப்படுத்துகின்ற பல்வேறு வடிவங்களின் கீழ் வரியை வகைப்படுத்திக் காட்டுவார்.
- வரிமுறைமையொன்றினால் பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற சாதக, பாதக விளைவுகளை முன்வைப்பார்.
- இலங்கையின் அரச வருமானக் கட்டமைப்பை விளக்குவார்.
- இலங்கையின் அரச வருமானத்தின் போக்கினைப் பரீட்சித்து அரச வருமானம் குறைவதற்கான காரணங்களையும் அதிகரிப்பதற்கான முன்மொழிவுகளையும் முன்வைப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- அரசாங்கம் வருமானம் பெறும் மூலங்கள் இரண்டு காணப்படுகின்றது.
  - வரி வருமானம்
  - வரியில்லா வருமானம்
- வரி அறவிடும் பல்வேறு தத்துவங்கள் காணப்படுகின்றது என்பது.
- இறுதியாக வரியைத் தாங்குவது வரித்தாக்கமாகும்.
- வரித்தாக்கத்தின் அடிப்படையில் நேரி வரிகள் மற்றும் முறைமுக வரிகள் என வரியானது இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படும்.
- வரிக்குட்படும் நபரின் அல்லது நிறுவனத்தின் மூலம் வரி செலுத்தப்படுமாயின் அது நேர்வரி என்றும் அது வருமானம், சொத்து, செல்வம் என்பவற்றின் மீது தங்கியிருக்கிறது.
- வரி செலுத்துவோன் மீது வரிச்சுமையேற்றப்படாத இன்னொரு வருக்கும் பெயர்க்கக்கூடிய வரிகள் மறைமுக வரிகளாகும் . (பொருட்கள் சேவைகள் மீது விதிக்கப்படும் வரிகள்)
- வரி அறவிடப்படும் விகிதங்களுக்கேற்ப மூன்று விதமாக வரிகளை வகைப்படுத்தலாம்.
  - விகிதசம வரி
  - கூடிச் செல்லும் விகிதவரி
  - குறைந்து செல்லும் விகிதவரி
- பொருளாதாரத்தின் பல்வேறு குறைகள் மீதும் சாதகமான, பாதகமான விளைவுகள் ஏற்படக்கூடும்.
- இலங்கையின் அரச வருமானம் வரி மற்று் வரியல்லா வருமானம் என்பவற்றை உள்ளடக்கியதாகும்.
- அரச வருமானத்தின் போக்குகளை வங்கி அறிக்கையின் அடிப்படையில் பரீட்சித்துப் பார்க்க வேண்டும்.

**தேர்ச்சி 9** : பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசாங்கம் தலையிடும் விதத்தை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 9.5** : அரசாங்க செலவு அமைப்பை ஆய்வு செய்து அண்மைக்கால மாற்றங்களை கண்டாய்வு செய்வர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- அரச செலவினை வரைவிலக்கணப்படுத்துவார்.
- பொருளியல் வகைப்பாட்டின்படி அரச செலவினை வகைப்படுத்தி அதனை உதாரணங்களுடன் விளக்குவார்.
- செயற்பாட்டு வகைப்பாட்டின் அடிப்படையில் அரச செலவினை வகைப்படுத்தி அதனை உதாரணங்களுடன் விளக்குவார்.
- போக்குகளை முன்வைப்பார்.
- அரச செலவின் பொருளாதார விளைவுகளை முன்வைப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- அரசாங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரசாங்கம் செய்யும் செலவுகள் அரச செலவுகளாகும்.
- பிரதான இரண்டு முறைகளுக்கேற்ப அரச செலவினை வகைப் படுத்தலாம்.
- பொருளியல் வகைப்பாட்டுக்கிணங்க அரச செலவு பின்வருமாறு




(இவ்வகைப்பாட்டின் ஒவ்வொரு பிரிவுக்குரிய செலவுகளுக்கான உதாரணங்களை மத்திய வங்கி அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மாணவருடன் கலந்துரையாடவும்.)

- நடைமுறைச்செலவுகள் நுகர்வுச் செலவு மற்றும் மீண்டெழும் செலவு எனவும் மூலதன செலவுகள் முதலீட்டுச் செலவுகள் எனவும் அழைக்கப்படலாம்.

- அரச சேவைகளைத் தொடர்ச்சியாகச் செய்வதற்காக செய்யப்படும் செலவுகள் நடைமுறைச்செலவுகளாகும்.

  உதாரணம்: ஊழியர் சம்பளம், அலுவலகக் காகிதாதி, கட்டி டங்களுக்கான வாடகை, போக்குவரத்துச் செலவு, மின்சாரக் கட்டணம், தொலைத் தொடர்பு சேவைகள்
- மூலதனப் பொருட்களை உருவாக்குதவற்காக அரசாங்கம் செய்கின்ற செலவுகள் மூலதனச் செலவுகளாகும் என்பது.

  உதாரணம்: அலுவலகத் தளபாடங்கள், கட்டிடங்கள், வாகனங்கள், பெருந்தெருக்களை நிர்மாணித்தல்.
- உண்மைச் சொத்துக்களின் கையேற்பின் கீழான மூலதனச் செலவுகளில் சொத்துக்கள், கட்டிடங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதும் உள்ளடங்கும்.
- மூலதன மாற்றல்களுள் அரச கூட்டுத்தாபனங்கள், அரச நிறுவுனங்கள் மற்றும் அரச உப நிறுவனங்கள் என்பவற்றுக்குச் செய்யப்படும் மாற்றல்கள் என்பன உள்ளடங்கும்.
- செயற்பாட்டடிப்படையிலான வகைப்படுத்தலின்படி அரச செலவினைப் பின்வருமாறு காட்டலாம்.

**செயற்பாட்டடிப்படையிலான வகைப்பாடு**




(இந்த வகைப்பாட்டின்படி ஒவ்வொரு வகைக்குமான செலவுகளுக் குரிய உதாரணங்களை மத்திய வங்கியின் அறிக்கை அடிப்படையில் மாணவருடன் கலந்துரையாடவும்.)

- அண்மையாண்டுகளில் இலங்கையின் மொத்த அரச செலவு தொகை ரீதியாக உயர்ந்து செல்லும் போக்கு காணக்கூடியதாக உள்ளது.
- எதிர்கால நலன்கள் பலவற்றை உருவாக்குவதற்கு காரணமாக அமைகின்ற அரச மூலதன செலவு, தேறிய கடன் வழங்கல் என்பனவும் அரச முதலீடுகளாகும்.

- அரச முதலீட்டுக்காக அரசாங்கம் தலையிடுவது பிரதானமாகக் கீழ்த்தரப்படும் காரணங்களினாலாகும்.
    - தனியார் துறை உற்பத்தி செய்ய முன்வராத மூலதனப் பொருட்களை உற்பத்தி செய்வது அவசியமாக இருப்பதும் அதன் மூலம் பொருளாதார வளர்ச்சிகது ஓர் உந்துதல் ஏற்படுவதும்.
    - தனியார் துறையின் முதலீடுகளை அதிகரிப்பதற்குப் பொருத்த மான சூழலொன்றைக்கட்டியெழுப்புவதற்கு அவசியமான வசதிகளையும் சேவைகளையும் வழங்குவதற்காக.
- அண்மைக்காலம் வரை அரசாங்கத்தின் மூலதன செலவு மற்றும் தேறிய கடன்வழங்கல் பின்வரும் காரணங்களால் வரையறைக் குட்பட்டுள்ளது.
    - உயர்ந்து சென்ற பாதுகாப்புச் செலவு
    - உயர்ந்து சென்ற கடன் சேவைக் கொடுப்பனவுகள் (விசேடமாக வட்டிக் கொடுப்பனவு)
    - நடைமுறை மாற்றங்கள் அதிகரித்தமை
- அண்மையாண்டுகளில் அரசின் மூலதன செலவுகளின் தொகை ரீதியான பெறுமதி அதிகரிப்பதற்கு பின்வருவன காரணங்களாகும்.
    - பேரளவுக் கீழ்க்கட்டுமான வசதி அபிவிருத்தித் திட்டங்கள் உதாரணம்: கம நெகும
    - தென் மாகாண கிராமிய அபிவிருத்தித் திட்டம்
    - சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள்
    - மறுசீரமைப்பு மற்றும் உள்ளூராட்சித் திட்டங்கள்

**தேர்ச்சி 9** : பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசாங்கம் தலையிடும் விதத்தை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 9.7** : அரச வரவு செலவுத் திட்டம் கொள்கைகளின் பொருளாதார விளைவுகளை பகுப்பாய்வு ரீதியாக தேடியறிவர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- அரச வரவு செலவுத் திட்டத்தை வரைவிலக்கணப்படுத்தி அதன் மாதிரியொன்றை முன்வைப்பார்.
- பற்றாக்குறை, மிகைநிலை மற்றும் சமநிலை என வரவு செலவுத் திட்டத்தை வகைப்படுத்துவார்.
- வரவு செலவுத் திட்டக் கொள்கைகளை விளக்கி விரிவாக்க மற்றும் சுருக்க வரவு செலவுத் திட்டக் கொள்கைகளின் பொருளாதார விளைவுகளை விபரிப்பார்.
- வருமானத்திற்கேற்ப செலவினை அமைத்துக் கொள்வதன் முக்கியத்துவம் தொடர்பாகக் கருத்துக்களை முன்வைப்பார்.
- பொருளாதாரமொன்றுக்கு மிகவும் பொருத்தமான வரவு செலவுத் திட்டக் கொள்கைகளை முன்மொழிவு செய்வார்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடு**

**பிரவேசம்**
- பின்வரும் பத்திரிகைத் தலைப்பினை வகுப்புக்கு முன் வைக்கவும்.

  **‘‘ புதிய அரசின் முதலாவது வரவு செலவுத்திட்டம் நாளை பாராளுமன்றத்துக்கு’’**
- இந்தத் தலைப்பு தொடர்பாக மாணவர்களின் கருத்தை விசாரிக்கவும்.
- பின்வரும் கருத்துக்கள் மேலெழும் வகையில் கலந்துரை யாடலை மேற்கொள்ளவும்.
  - வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அடுத்து வரும் ஆண்டுக்கான அரசாங்கத்தின் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் மற்றும் செலவு தொடர்பான தகவல்கள் முன்வைககப்படும்.
  - பல்வேறு வழிகளாலும் கிடைக்கின்ற வருமானத்தின் மூலமாக அரசின் செலவுகள் தீர்க்கப்படும்.
  - செலவுகளைத் தீர்ப்பதற்கு வருமானம் போதாதவிடத்து அதற்காக அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி ஏற்படும்.
- மாணவர்களைப் பொருத்தமான முறையில் குழுக்களாக்கிக் கற்றலுக்காக உத்தேச அறிவுறுத்தல்களை வழங்கி செயற்பாடு களில் ஈடுபடுத்தவும்.

**கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு:**

- பின்வருவது மூன்று நாடுகளின் எதிர்வரும் ஆண்டுக்கு எதிர்பார்க்கப் படுகின்ற அரச வருமானம் மற்றும் செலவு பற்றிய தகவல்களாகும். இதில் உமது குழுவுக்குக் கிடைத்துள்ள தகவல் மீது கவனம் செலுத்தவும்.

## ''A'' நாடு

| **வருமானம்** | **மில்லியன். ரூபா** | | |
|---|---|---|---|
| வருமான வரி | | 20 | |
| பொருட்கள் சேவைகள் மீதான வரி | 70 | | |
| சர்வதேச வர்த்தகம் மீதான வரி | | 10 | |
| வரியில்லா வருமானம் | | | 50 |

| **செலவு** | |
|---|---|
| சம்பளங்களும் கூலிகளும் | 70 |
| வட்டிச் செலுத்தல்கள் | 10 |
| மானியங்களும் மாற்றல்களும் | 18 |
| ஏனைய பொருட்கள் சேவைகள் | 12 |
| மூலதனச் செலவு | 35 |
| ஏனைய செலவுகள் | 05 |

## ''B'' நாடு

| **வருமானம்** | **மில்லியன். ரூபா** | | |
|---|---|---|---|
| வருமான வரி | | 30 | |
| பொருட்கள் சேவைகள் மீதான வரி | 70 | | |
| சர்வதேச வர்த்தகம் மீதான வரி | | 100 | |
| வரியில்லா வருமானம் | | | 100 |

| **செலவு** | |
|---|---|
| சம்பளங்களும் கூலிகளும் | 100 |
| வட்டிச் செலுத்தல்கள் | 50 |
| மானியங்களும் மாற்றல்களும் | 80 |
| ஏனைய பொருட்கள் சேவைகள் | 70 |
| மூலதனச் செலவு | 100 |
| ஏனைய செலவுகள் | 20 |

### ‘‘C’’ நாடு

| **வருமானம்** | **மில்லியன். ரூபா** | | |
| --- | --- | --- | --- |
| வருமான வரி | 80 | | |
| பொருட்கள் சேவைகள் மீதான வரி | 85 | | |
| சர்வதேச வர்த்தகம் மீதான வரி | | 135 | |
| வரியில்லா வருமானம் | | | 100 |

| **செலவு** | |
| --- | --- |
| சம்பளங்களும் கூலிகளும் | 100 |
| வட்டிச் செலுத்தல்கள் | 30 |
| மானியங்களும் மாற்றல்களும் | 70 |
| ஏனைய பொருட்கள் சேவைகள் | 50 |
| மூலதனச் செலவு | 70 |
| ஏனைய செலவுகள் | 60 |

- உமது குழுவுக்குக் கிடைத்துள்ள நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ள வருமான மற்றும் செலவுத் தகவல்களை நன்கு வாசித்து விளங்கவும்.
- நீர் அறிந்த மாதிரி அமைப்பொன்றைப் பயன்படுத்தி வருமான - செலவுகளை சீராக்கி அதன் மூலம் கிடைக்கின்ற இறுதி விளைவைப் பெற்றுக் கொள்க.
- மேலே வருமான - செலவு சீராக்கத்துக்கேற்ப அடுத்துவரும் ஆண்டில் நாட்டினுள் காணப்படக்கூடிய நிலைமை எவ்வாறென்பதை விளக்குக.
- அந்த நிலைமைக்கு முகங்கொடுப்பதற்கு அந்த நாட்டின் அரசுக்கு நீர் முன்மொழியக்கூடிய நடவடிக்கைகளைக் காட்டுக.
- அந்நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் விதத்தைக் குழுக் கலந்துரையாடலின் போது மேலெழச் செய்யவும்.
- உங்களின் கண்டறிதல்களை முழு வகுப்புக்கும் ஆக்கபூர்வமாக முன்வைக்க ஆயத்தமாகுங்கள்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- அடுத்து வரும் ஆண்டினுள் அரசின் நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் செலவுகளையும் அச்செலவுகளை ஈடுசெய்வதற்காக பணத்தைப் பெற்றுக் கொள்ளும் வழிகளையும் சட்டவாக்கத்துறைக்கு முன்வைத்து அனுமதித்துக்கொள்ளும் அறிக்கையே அரச வரவு செலவுத்திட்டமாகும்.

- தனியார் வரவு செலவுத் திட்டம் மற்றும் அரச வரவு செலவுத் திட்டத்துக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது.
- மொத்த வரவு செலவுத்திட்ட மீதிக்கமைய பற்றாக்குறை வரவு செலவுத்திட்டம், மிகைநிலை வரவு செலவுத்திட்டம், மற்றும் சமநிலை வரவு செலவுத்திட்டம் என வகைப்படுத்த முடியும்.
- பற்றாக்குறையொன்று காணப்படும்போது அதனை நிதியீட்டம் செய்ய வேண்டும்.

  (மத்திய வங்கி அறிக்கை அடிப்படையில் வரவு செலவுத்திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்படும் விதத்தை மாணவருக்கு முன்வைக்கவும்.)
- நிதியீட்டத்துக்காக விரிவாக்க மற்றும் சுருக்க வரவு செலவுத் திட்டக் கொள்கைகள் பயன்படுத்தப்படும்.
- வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிதியீட்டம் செய்வதற்காகப் பெறப்படும் கடன் நாட்டின் பண நிரம்பலை அதிகரிப்பதற்கு ஏதுவாகுமாயின் அக்கடன் விரிவாக்க விளைவு கொண்ட கடன் என அழைக்கப்படும்.
- கடன் பெறும் வழிகளால் பண நிரம்பலுக்குப் பாதிப்பு ஏற்படாது விடின் அக்கடன் சுருக்க விளைவு கொண்ட கடன் என அழைக்கப்படும்.
- விரிவாக்க விளைவு கொண்ட கடனுக்கான உதாரணங்களாக
  - அரசு மத்திய வங்கியிடம் கடன் பெறல்
  - வர்த்தக வங்கிகளிடமிருந்து கடன்பெறல்
  - வெளிநாட்டுக் கடன்பெறல்

  ஆகியவற்றைக் கூறலாம்.
- சுருக்க விளைவு கொண்ட கடனுக்கான உதாரணங்களாக
  - வங்கியில்லா நிறுவனங்களிடமிருந்தான கடன்கள்
  - பொது மக்களிடமிருந்து அரசு கடன்பெறல்

  என்பவற்றைக் குறிப்பிடலாம்.
- சுருக்க விளைவு கொண்ட வரவு செலவுத் திட்டக் கொள்கை களைப் பின்பற்றுவது வரிவாக்க விளைவு கொண்ட வரவு செலவுத்திட்டக் கொள்கையைப் பின்பற்றுவதைவிட பொருளாதாரத் துக்கு மிகவும் உகந்தது.

**தேர்ச்சி 9** : பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசாங்கம் தலையிடும் விதத்தை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 9.8** : இலங்கையின் அரசாங்க வரவு செலவுத்திட்டம் மற்றும் அதன் பொருளாதார விளைவுகளை ஆய்வு செய்வர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :

- இலங்கையின் அரச வரவு செலவுத்திட்ட நிலைமையினை தொகை ரீதியான தகவல்களின் அடிப்படையில் விளக்குவார்.
- இலங்கையின் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கான காரணங்களை முன்வைப்பார்.
- இலங்கையின் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையின் பொருளாதார விளைவுகளை விளக்குவார்.
- வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதிப்படுத்தும் மூலங்களை விளக்குவார்.
- வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிதிப்படுத்துவறத்கு மிகப் பொருத்தமான கொள்கைகள் தொடர்பாகக் கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் முன்வைப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- கடந்த சில வருடங்களில் இலங்கையின் அரச வரவு செலவுத்திட்ட நிலைமை பற்றிய தகவல்கள் மீது மாணவர்களின் கவனத்தைத் திருப்ப வேண்டும்.
  (மத்திய வங்கி அறிக்கையின் புள்ளிவிபர அடிப்படையில்)
- கடந்த பல வருடங்களாக இலங்கையின் அரச வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை காணப்படுகின்றது.
- அண்மையாண்டுகளில் இலங்கையின் வரவு செலவுத்திட்டக் குறைநிலைக்குக் பின்வருவன காரணங்களாகும்.
  - பல்வேறு வரிச் சலுகைகளை வழங்கியமை காரணமாக வரி வருமானங்கள் குறைவடைதல்.
  - மேலதிக வருமானங்களை ஈட்டித்தரக்கூடிய அரசின் அபிவிருத் தித் திட்டங்களைச் செயற்படுத்துவது தாமதிக்கின்றமை காரண மாக அரச வருமானத்தில் வளர்ச்சியொன்று இன்மை.
  - அரச முயற்சிகளின் செயற்றிரணின்மை காரணமாக இலாபம் உழைப்பதற்கு முடியாதிருத்தல்.
  - பாதுகாப்புச் செலவு அதிகரித்தல்.
  - கடனை மீளச் செலுத்தும் செலவுகள் அதிகரித்தல்.
  - வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரித்தல்.
  - அரச மாற்றல் செலவு அதிகரித்தல்.
  - அரச சேவைச் செலவுகள் அதிகரித்தல்.
  - தேர்தல் செலவுகள் அதிகரித்தல்.

- இலங்கையின் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிதிப் படுத்துவதற் காகப் பல்வேறு நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டுள்ளன என்பது. (மத்திய வங்கி அறிக்கையினைப் பயன்படுத்துவது அவசியமாகும்.)
  - வெளிநாட்டு நிதிப்படுத்தல்
    - வெளிநாட்டுக் கடன்கள்
    - வெளிநாட்டுக் கொடைகள்
  - உள்நாட்டு நிதிப்படுத்தல்
    - சந்தைக்கடன் பெறல்
      - வங்கியில்லாத
      - வங்கி (வணிக வங்கி)
- நடைமுறைச் செலவில் பற்றாக்குறையொன்று காணப்படுவதனால் பொருளாதாரத்துக்குப் பாதகமான விளைவும் நடைமுறைக் கணக்கில் மிகையொன்று காணப்படும்போது சாதகமான விளைவும் ஏற்படும்.
- தொடர்ச்சியாக வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையொன்று காணப் படுவதனால் பொருளாதாரத்துக்குப் பாதகமான விளைவுகள் ஏற்படும்.
  - அரச கடன்கள் அதிகரித்தல்
  - பணவீக்கம் ஏற்படக்கூடிய நிலை
  - சென்மதி நிலுவைப் பிரச்சினை ஏற்படல்
  - தனியார் துறையின் முதலீடு குறைவடைதல்
  - வட்டி விகித அதிகரிப்பு
  - அரசாங்கத் திட்டங்கள் செயற்படாத நிலை
  - சர்வதேச விசுவாசம் குறைவடைதல்
  - வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் வீழ்ச்சியடைதல்
  - உள்நாட்டுச் சேமிப்புக் குறைவடைதல்
- வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையைக் குறைத்துக் கொள்வத னால் பொருளாதாரத்துக்குப் பல்வேறு நன்மைகள் கிட்டும் என்பது.
  - அரச கடன் சுமையினைக் குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருத்தல்.
  - பண வீக்கத்தின் பாதிப்புக்கள் குறைவடைதல்
  - அரச முதலீடுகளை அதிகரிக்கக் கூடியதாக இருத்தல்
  - வட்டி வீதத்தைத் தாழ்ந்த மட்டத்தில் பேணக்கூடியதாக இருத்தல்.
  - தனியார் முதலீடுகளை அதிகரிக்கக் கூடியதாக இருத்தல்.
  - பொது மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வரிச் சுமையைக் குறைக்கக்கூடியதாக இருத்தல்
  - பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டுக்கு வழியேற்படல்.
- வரவு செலவுத்திட்டத்தை நிதிப்படுத்துவதற்காக விரிவாக்கத்தை ஏற்படுத்தாத மூலங்களைப் பயன்படுத்துவது மிகவும் பொருத்த மானது.

**தேர்ச்சி 9** : பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசாங்கம் தலையிடும் விதத்தை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 9.9** : இலங்கையின் அரச கடன் அமைப்பையும் மற்றும் அதன் போக்குகளையும் ஆய்வு செய்வர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- அரச கடனை வரைவிலக்கணப்படுத்தி அரச கடனுக்கான மூலாதாரங்களை வரிப்படமொன்றின் மூலம் முன்வைப்பார்.
- அரச கடன் சுமையின் பொருளாதார விளைவுகளை விளக்குவார்.
- அரச கடன் சேவைக் கொடுப்பனவை விளக்குவார்.
- இலங்கையின் அரச கடனின் அண்மைக்காலப் போக்குகளைப் பரிசீலிப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- வட்டியுடன் மீண்டும் திருப்பிச் செலுத்தும் நிபந்தனையின் அடிப்படையில் அரசாங்கம் பெறுகின்ற பணம் அரச கடன் என அழைக்கப்படும்.
- உள்நாட்டைப் போலவே வெளிநாட்டு மூலகங்களிலிருந்தும அரச கடன் பெறுகின்றது.
- அம் மூலாதாரங்களை வரிப்படம் ஒன்றின் மூலம் முன்வைக்க முடியும்.




- பணச் சந்தையிலிருந்தும் மூலதனச் சந்தையிலிருந்தும் பெற்றுக் கொள்ளும் கடன் சந்தைக் கடனாகும்.

- அரச கடன் அதிகரித்துச் செல்வதனால் பல்வேறு பொருளாதார விளைவுகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது.
  உதாரணம்:
  - அரச வருமானத்தின் பெரும்பகுதி கடனையும் கடனுக்கான வட்டியையும் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படல்
  - வேறு தேவைகள் மற்றும் அபவிருத்தியை நோக்கமாகக் கொண்ட செலவுகளுக்கு மிகக் குறைந்தளவான பணமே எஞ்சுதல்.
  - உள்நாட்டுச் சந்தையில் வட்டிவீதம் அதிகரித்தல்
  - உள்நாட்டுப் பண அலகொன்றின் வெளிநாட்டுப் பெறுமதி வீழ்ச்சி
  - தனியார் துறைக்குக் கிடைக்கக்கூடிய வளங்களின் அளவு குறைவடைதல் காரணமாக தனியார் முதலீடுகள் குறைவடைந்து பொருளாதார வளர்ச்சிக்குப் பாதகமான நிலையொன்று ஏற்படல்.
  - அரச நிதி முகாமைத்துவம் மற்றும் அரச கடன் முகாமைத்துவம் என்பன மிகவும் கடினமானதாக அமைதல்.
  - வங்கி முறையிலிருந்து பெறுகின்ற கடன்களால் பணவீக்கம் ஏற்படல்.
  - மொத்தச் செலவு அதிகரிப்பதனால் சென்மதி நிலுவைப் பிரச்சினை தோற்றம் பெறல்.
  - சர்வதேச கடன் பிரச்சினையொன்றுக்கு முகங்கொடுத்தல்.
  - உள்நாட்டுச் சேமிப்பு விகிதம் குறைவடைதல்.
  - உள்நாட்டுப் பணவீக்கம் காரணமாக மெய்நாணயமாற்று வீதம் குறைவடையும் போது சர்வதேச போட்டி நிலைமைக்குப் பாதகம் ஏற்படல்.
- அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ள மொத்தக் கடன் காரணமாக செலுத்த வேண்டிய கடன் தவணைக் கொடுப்பனவுகளை அதற்குரிய வட்டியுடன்மீளச் செலுத்துவது கடன் சேவைக் கொடுப்பனவு என அழைக்கப்படும்.
- அரசாங்கம் பெற்றுக்கொண்ட மொத்தக் கடனுக்காக செலுத்த வேண்டிய கடன் தவணைக் கொடுப்பனவு மற்றும் அதற்காகச் செலுத்த வேண்டிய வட்டி ஆகிய இரண்டும் உள்நாட்டு உற்தபத்தியின் விகிதமாகக் காட்டப்படுவது கடன் சேவை விகிதம் என அழைக்கப்படும்.

$$\text{அரச கடன் சேவை விகிதம்} = \frac{\text{கடன் தவணைக் கொடுப்பனவு} + \text{கடனுக்கான வட்டி}}{\text{மொத்த உள்நாட்டு உற்பத்தி}}$$

- கடன் தவணைக் கொடுப்பனவு, கடனுக்கான வட்டி ஆகிய இரண்டையும் ஏற்றுமதி வருமானம், அரசாங்க வருமானம், அரசாங்க செலவு ஆகியவற்றின் வீதமாகக் கூறும்போது பல்வேறு விதமான கடன் சேவை வீதங்களைக் கணிக்கலாம்.
- கடன் சேவைச் சுட்டெண் எனக் காட்டப்படுவதும் பல்வேறு முறைகளில் கணிக்கப்பட்ட கடன் சேவை விகிதங்களாகும்.
- அண்மையாண்டுகளில் இலங்கையின் அரச கடனின் போக்கு தொடர்பான உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகத் தீர்க்கப்படாத கடனின் தொகையானது தொடர்ச்சியாகக் குறைவடைந்து செல்கின்றமை அண்மைக் காலத்தில் அவதானிக்க முடியுமாக உள்ளது.
- மொத்த அரச கடனின் பெருமளவு உள்நாட்டுக் கடனாகும்.
- முதிர்ச்சிக் காலத்தின் அடிப்படையில் நடுத்தர கால மற்றும் நீண்ட காலக் கடன்கள் குறுங்காலக் கடன்களை விட அதிகமாக இருத்தல்.
- நிறுவனங்களின் அடிப்படையில் வங்கித்துறையை விட வங்கியில்லாத் துறையின் மூலம் பெற்ற கடன்கள் அதிகரித்தல்.
- உள்நாட்டுத் தீர்க்கப்படாத கடன்களில் பிரதானமான உபகரணம் திறைசேரி முறிகளாகும்.
- வெளிநாட்டுக் கடன்களுள் சலுகைக்க கடன்கள் கூடிய முக்கியத்துவம் பெறுகின்றன.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு விகிதமாக அரச கடன் சேவைக் கொடுப்பனவுகளில் வீழ்ச்சியொன்று காணப்படுகிறது.
- அரசாங்கக் கடனைச் சிறப்பாக முகாமை செய்வது மிக முக்கியமானது.

**தேர்ச்சி 9** : பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசாங்கம் தலையிடும் விதத்தை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 9.10** : அரச நிரம்பல் அதிகரிப்புக் கொள்கைகளின் பொருளாதார விளைவுகளைப் பகுப்பாய்வு செய்து தேடியறிவர்.

**பாடவேளை** : 05

**கற்றற் பேறுகள்** :

- நிரம்பல் அதிகரிப்புக் கொள்கையை வரைவிலக்கணப்படுத்துவார்.
- பல்வேறு நிரம்பல் அதிகரிப்புக் கொள்கை தொடர்பான நடவடிக்கைகளை விளங்கி அவற்றுக்கு உதாரணங்களை முன்வைப்பார்.
- நிரம்பல் அதிகரிப்புக் கொள்கைகளின் பொருளாதார விளைவுகளை விளக்குவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக பிரதிகளை வழங்குவது நிரம்பல் அதிகரிப்புக் கொள்கை என அழைக்கப்படும்.
- நிரம்பல் அதிகரிப்புக் கொள்கையினைச் செயற்படுத்தும்போது முதலீடு அதிகரிபு மற்றும் உற்பத்திச் செலவு குறைந்து உற்பத்திக் காரணிகளின் விளைதிறன் அதிரிக்கும்.
- இவ்வாறு பிரதான பேரினப் பொருளாதார மாறியினை எதிர்பார்த்த மட்டத்துக்குக் கொண்டு வருவதற்கு நிரம்பல் ஊக்குவிப்புக் கொள்கை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- உற்பத்தியை ஊக்குவிப்பதற்காகப் பல்வேறு நிரம்பல் அதிகரிப்புக் கொள்கை நடவடிக்கைகளைப் பயன்படுத்த முடியும் என்பதும் அவற்றைப் பின்வருமாறு காட்டலாம் என்பதுவும்
    - வரிச் சீரமைப்பு
    - தனியார் மயமாக்கல்
    - சட்டதிட்டங்களைத் தளர்த்துதல்
    - ஊழியர் சந்தை மறுசீரமைப்பு
    - மூலதனச் சந்தை மறுசீரமைப்பு
- உற்பத்தியை அதிகரிக்கும் விதத்தில் வரியைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவது வரிச் சீரமைப்பாகும்.
- சந்தையின் போட்டித்தன்மைக்கு வரி அறிவிடுவதனால் ஒரு சில பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.
- அவ்வாறாயின் வரியின் காரணமாக உற்பத்தியிலும் நுகர்விலும் முதலீடு மற்றும் சேமிப்பிலும் உத்தம மட்டம் இல்லாமல் போகும்.

- இதனால் சந்தையின் போட்டித் தன்மைக்கு வரி அறிவிடுவதன் மூலம் ஏற்படும் பாதிப்பைக் குறைக்கும் வகையில் வரி அறவிடும்போது நடுநிலைத்தன்மை பேணப்பட வேண்டும்.
  உதாரணம்: வரி மன்னிப்பு வழங்குதல்
  வரியை வெட்டுதல்
  வரியைக் குறைத்தல் போன்றன.
- இவ்வாறான நடுநிலைத்தன்மையொன்றைப் பெற்றுக் கொள்வதன் மூலம் உற்பத்திச் செலவு குறைவதனால் உற்பத்தி அதிகரிக்கும்.
- வரி மூலம் நடுநிலைத்தன்மையை வழங்குவது பொருளாதாரத் துக்கு சாதகம் போலவே பாதகமாகவும் அமையக்கூடும்.
  உதாரணம்:
  - வரிக் குறைப்பினால் அரச வருமானம் குறைதல், வருமானப் பரம்பல் ஏற்றத்தாழ்வு அதிகரித்தல், நுகர்வோர் அவசியமற்ற பொருட்களின் நுகர்வுக்கு திருப்பப்படல் போன்றன வரிச்சீரமைப்பின் பாதக விளைவாகக் காட்டப்படலாம்.
  - உற்பத்தி அதிகரிப்பு மற்றும் நுகர்வு, முதலீடு, சேமிப்பு என்பவற்றின் உத்தம மட்டம் வரியின் நடுநலைத்தன்மையைப் பேணுவதன் காரணமாக பெருமளவுக்குப் பாதுகாக்கப்படுவது வரிச்சீரமைப்பின் ஏற்படும் சாதக விளைவாகும்.
  - நிரம்பல் அதிகரிப்புக் கொள்கையென்ற வகையில் வரிச் சீரமைப்பைப் பயன்படுத்தும்போது அதன் மூலம் பொருளாதாரத்துக்கு ஏற்படும் பாதக விளைவு இயன்றளவுக்கு குறைகின்ற விதத்தில் அவை நடைபெறுவது மிக முக்கியமாகும்.
  - அரச உரிமையின் கீழ் காணப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளில் தனியார் துறையையும் தொடர்புபடுத்திக் கொள்வது தனியார் மயமாக்கல் என்பதனால் கருதப்படுவது.
  - கீழ்த்தரப்படும் வழிகளில்தனியார் மயமாக்கம் நடைபெறலாம்.
    - அரச முயற்சிகளின் முழு உரிமையையும் அல்லது உரிமையில் ஒரு பகுதியை தனியார் துறைக்கு விற்றல் அல்லது ஒப்படைத்தல்.
    - அரச முயற்சிகளின் முகாமைத்துவத்தைத் தனியார் துறைக்கு ஒப்படைத்தல்.
    - அரச துறைக்குரிய சில சேவைகளைத் தனியார் துறையிலிருந்து பெற்றுக் கொள்ளல்.
- தனியார் மயமாக்கல் காரணமாகப் பொருளாதாரத்தில் சாதக விளைவுகளைப் போலவே பாதக விளைவுகளும் ஏற்படும்.

- சாதக விளைவுகளுக்கான உதாரணங்களைப் பின்வருமாறு காட்டலாம்.
    - மிகவும் விளைதிறன் வாய்ந்த முறையில் உற்பத்திக்கான வளங்கள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுவதனால் உற்பத்தி விளைதிறனுள்ளதாக அமைதல்.
    - அரச தனியுரிமை இல்லாதொழிந்து போட்டிச் சந்தை உருவாதல்.
    - அரச வரவு செலவுத் திட்டத்துக்கு சுமையாக அமையாமை
    - வர்த்தக முயற்சிகள் மீதான அரச ஆதிக்கம் நீங்குதல்.
    - மூலதனப் பற்றாக்குறைக்கான தீர்வு
    - உற்பத்திகளின் தரம் கூடுதல்
    - உற்பத்திச் செலவு குறைதல்
    - விரயம், மாசடைதல், ஊழல் தவிர்க்கப்படல்
    - நுகர்வோரின் தேவைகளுக்கு விரைவான பிரதிபலிப்பு கிடைத்தல்.
- பொருளாதாரத்தில் போட்டித்தன்மை குறைவதற்கு காரணமாகின்ற சட்டத்தினால் விதிக்கப்பட்ட மற்றும் சமூக ரீதியாக ஏற்பட்டுள்ள ஒழுங்குகள் மற்றும் தடைகளை நீக்குதல். சட்டதிட்டங்களைத் தளர்த்துதல் என அழைக்கப்படும்.

  உதாரணம்:

  தொழில் முயற்சியொன்றை ஆரம்பிப்பதுடன் தொடர்புடைய கடுமையான சட்டதிட்டங்கள் இலகுபடுத்தப்படல். தொழில் முயற்சியொன்றை இடமமர்த்தல், ஆரம்ப மூலதனத்துக்கான அனுமதி பெறல் போன்றன.
- சுதந்திரமான வர்த்தகத்துக்கு தடையாகவுள்ள அரசின் கடுமையான மேற்பார்வையைக் குறைத்தல்.
- சமூக காரணிகளின் பாதிப்பு காரணமாக பொருட்களின் கொடுக்கல் வாங்கல் செலவு அதிகரித்தல். (மீள் விற்பனையின் போது உற்பத்தியாளன் தீர்மானிக்கும் விலையை விட உயர்விலைக்கு அவற்றை விற்பதற்கு சிலநபர்கள் ஆணையிடுதல். அவ்வாறு அதிகரித்த விலையை உற்பத்தியாளனக்குக் கொடுக்காமல் அதனை அவர்கள் பெற்றுக்கொள்ளல்) தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- சட்டதிட்டங்களைத் தளர்துதல் மூலமாக சந்தையின் போட்டித் தன்மைக்கு ஏற்படும் தடைகள் இல்லாமல்போவது உற்பத்தி யாளருக்கு சக்தியாக அமைவதுடன் உற்பத்திச் செலவு குறைந்து முதலீடு அதிகரித்து உற்பத்தி அதிகரிப்புக்கு சாதகமான அமையுமாயினும் பாதக விளைவுகளையும் ஏற்படுத்தலாம்.

  உதாரணம்:
  - நுகர்வுக்குப் பொருத்தமற்ற பொருட்கள் சந்தைக்கு வருதல்.
  - தரத்தில் குறைந்த பொருட்களை உற்பத்தி செய்ய முடியு மாதல், வெளிநாட்டு வர்த்தகத்தில் இறக்குமதிப் பொருட்கள் பொருளாதாரத்துக்கு அவசியமற்ற அல்லது பாதகமான பொருட்களை அமையக்கூடிய தன்மை.
- பொருளாதாரத்துக்கு ஏற்படும் பாதக விளைவுகளைக் குறைக்கும் விதத்தில் ஏதாவது வரையறைக்குட்பட்டு சட்டதிட்டங்களைத் தளர்த்தலாம்.
- ஊழியச் சந்தையில் காணப்படும் இல்லாமல் போகும் வகையில் ஊழியத்தின் கேள்வி, நிரம்பல் தொடர்பாக வேறுபாடுகளை ஏற்படுத்தல் ஊழியச் சந்தை மறுசீரமைப்பு என் காட்டப்படலாம்.
- ஊழியச் சந்தையில் போட்டி நிலைக்கு தடை ஏற்படாத வகை செயற்படுதல் என்பதுவும் ஊழியச் சந்தை மறுசீரமைப்பாகும்.

  உதாரணம்:
  - அழுத்தம் தரும் தொழிலாளர் சட்டங்களை நீக்குதல்.
  - ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும்போது சில தொழில் களைப் பொறுத்தவரை தகைமையற்றவர்களை ஆட்சேர்ப்புச் செய்யாதிருக்க நடவடிக்கை எடுத்தல்.
  - அவ்வத் தொழில்களுக்கான பயிற்சிகள் தொடர்பாக ஊழியர்களை அறிவுறுத்தல்.
- கேள்வி மற்றும் நிரம்பல் தொடர்பாகச் செய்யப்படும் மறுசீரமைப்பு காரணமாக போட்டித் தன்மையுள்ள ஊழியச் சந்தையொன்று உருவாகும்.
- இதனால் பொருளாதாரத்தில் உற்தப்தியை அதிகரிக்க முடியும்.
- எனினும் இத்தகைய மறுசீரமைப்புக்களைச் செய்யும்போது அவற்றைக் குறித்த எல்லைகளுக்குக் கீழே மேற்கொள்ள வேண்டுமென்பதுடன் அதுபற்றிக் கவனம் செலுத்தாவிடின் பாதக விளைவுகள் ஏற்படும்.

  உதாரணம்:

  தனியார் வியாபார முயற்சிகளில் வேலை வழங்கும் சுதந்திரம் அந்நிறுவனங்களுக்கு வழங்கப்படாதுவிடின் வேலையில்லாத காலங்களில் ஊழியர்கள் வெளியேற்றப்படுவதனால் ஊழியர் களுக்கு நியாயமற்ற நிலையொன்று ஏற்படல்.

- நிரம்பல் அதிகரிப்புக் கொள்கை நடவடிக்கை ஒன்றாக ஊழியச் சந்தை மறுசீரமைப்பு பயன்படுத்தப்பட வேண்டியது பாதக விளைவுகள் குறைகின்ற விதத்திலாகும்.
- உற்பத்தியை அதிகரித்துக் கொள்வதற்குத் தடையாகவுள்ள மூலதனப் பற்றாக்குறையைத் தீர்த்துக்கொள்ளும் விதமாக நடவடிக்கை மேற்கொள்வது மூலதனச் சந்தை மறுசீரமைப்பாகக் கருதப்படலாம்.

  உதாரணம்:
  - மூலதனத்தின் விளைதிறனை அதிகரித்தல்
  - நேரடி வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவித்தல்
  - சலுகை நிபந்தனைகளில் கீழ் வெளிநாட்டுக் கடன்பெறல்
  - சேமிப்பை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.
- இத்தகைய மறுசீரமைப்பு காரணமாக முதலீடு அதிகரித்து உற்பத்தி அதிகரிப்பது சாதகமான ஒரு நிலையாகும்.
- பாதக விளைவுகளும் இதனால் ஏற்படலாம்.
  - வெளிநாட்டு முதலீடு அதிகரித்தல் மூலமான இலாபம், பங்கிலாபம் என்பன வெளிநாடுகளுக்குச் செல்லுதல்.
  - வெளிநாட்டுக் கடன் பெறுகை காரணமாக கடன் தவணைக் கொடுப்பனவு மற்றும் வட்டியாக பெருமளவு தொகையைச் செலவிட வேண்டி ஏற்படல்.
  - அரசு நடைமுறைச் செலவைக் குறைக்குமாயின் அது நிகழ் கால சமூக நலனுக்குப் பாதகமாக அமையலாம்.
- நிரம்பல் அதகிரிப்புக் கொள்கை என்ற வகையில் மூலதன மறுசீரமைப்பைப் பயன்படுத்தும்போது கூட அதன் பாதக விளைவுகள் இல்லாமலாகும் விதத்தில் செய்யப்பட வேண்டும்.

**தேர்ச்சி 10** : சர்வதேச வர்த்தகமும் நிதியும் நாட்டில் பேரினப் பொருளாதாரத் திற்கு ஏற்படுத்தும் தாக்கத்தை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 10.1** : சர்வதேச வர்த்தகத்திற்கு அடிப்படையாகவுள்ள காரணிகளை ஆய்வு செய்வர்.

**பாடவேளை** : 05

**கற்றற் பேறுகள்** :
- சர்வதேச வர்த்தகம் என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.
- சர்வதேச வர்த்தகத்திற்கு அடிப்படையாகக் காணப்படும் முழு நன்மை, ஒப்பீட்டு நன்மை கோட்பாடுகளை வரைவிலக்கணப் படுத்துவார்.
- தரப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் ஏதாவதொரு பண்டத்திற்கு முழு நன்மை, ஒப்பீட்டு நன்மை மற்றும் காணப்படும் நாட்டை தெரிவு செய்வார்.
- சர்வதேச வர்த்தகத்தின் மூலம் அதனுடன் தொடர்புபடும் இரு நாடுகளுக்கும் தோன்றும் நன்மைகளை பட்டியற்படுத்துதல்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

**பிரவேசம்** :
- ஜப்பான் இலங்கையிலிருந்து ஆடைகளை கொள்வனவு செய்வதற்கான காரணத்தையும், இலங்கை ஜப்பானிலிருந்து மோட்டார் வாகனங்கள் கொள்வனவு செய்வதற்கான காரணத்தை யும் மாணவர்களிடம் கேட்டறிக.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தும் வகையில் கலந்துரை யாடலை மேற்கொள்க.
- ஜப்பான், மோட்டார் வாகன உற்பத்தியில் இலங்கையை விட உயர்வான வினைத் திறனை கொண்டிருப்பதுடன் ஆடை உற்பத்தியில் குறைந்த வினைத்திறனை கொண்டிருக்கும் என்பது.
- இலங்கை ஆடை உற்பத்தியில் உயர்ந்த வினைத்திறனை கொண்டிருப்பதுடன் மோட்டார் உற்பத்தியல் குறைந்த வினத் திறனை கொண்டுள்ளது.
- இதனால் இலங்கை ஆடையை அதிகமாக உற்பத்தி செய்து ஜப்பானுக்கு விற்பனை செய்து ஜப்பானிலிருந்து மோட்டார் வாகனங்களைக் கௌள்வனவு செய்கின்றது.
- யப்பான் மோட்டார் வாகனத்தை அதிகமாக உற்பத்தி செய்வது இலங்கைக்கு விள்பனை செய்து இலங்கையிலிருந்து ஆடைகளைக் கொள்வனவு செய்கின்றது.
- இவ்வதமாக நாடுகளுக்கிடையே சர்வதேச வர்த்தகம் நடை பெறுகின்றது.

- இங்கு மாணவர்களைப் பொருத்தமான முறையில் குழுக்களாகப் பிரித்து கற்றலுடன் தொடர்புடைய அறிவுரைகளை வழங்கி செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

**கற்றலுக்கான உத்தேச அறிவுறுத்தல்கள்:**

- கீழ்த்தரப்படும் நான்கு நாடுகளின் உற்பத்தியுடன் தொடர்புடைய தகவல்களை உள்ளடக்கிய இரு அட்டவணைகளிலும் உமது குழுவிற்குக் கிடைத்துள்ள அட்டவணை மீது கவனம் செலுத்தவும்.

அட்டவணை 1

| **உற்பத்தி** | **இலங்கை** | **அமெரிக்கா** |
|---|---|---|
| தைக்கப்பட்ட ஆடை<br>அலகு/மனித மணித்தியாலத்துக்கு | 12 | 02 |
| கோதுமை மா<br>Kg/மனித மணித்தியாலத்துக்கு | 08 | 10 |

(இரு நாடுகளிலும் சமமான உழைப்புச் செலவொன்று காணப்படுவதாக எடுகோள் கொள்ளப்படுகின்றது.)

அட்டவணை 2

| **உற்பத்தி** | **இலங்கை** | **யப்பான்** |
|---|---|---|
| மோட்டார் வாகனம்<br>அலகு/மனித மணித்தியாலத்துக்கு | 01 | 06 |
| காலணி<br>அலகு/மனித மணித்தியாலத்துக்கு | 02 | 04 |

(இரு நாடுகளிலும் சமமான உழைப்புச் செலவொன்று காணப்படுவதாக எடுகோள் கொள்ளப்படுகின்றது.)

- உமக்குக் கிடைத்துள்ள அட்டவணையில் உள்ள இரு நாடுகளிலும், இரு வகையான பண்டங்களிலும் உற்பத்தியுடன் தொடர்புடைய தகவல்களை அவதானமாக வாசித்து விளங்கிக் கொள்க.
- இத்தகவல்களின் அடிப்படையில் இரு நாடுகளுடன் தொடர்புடைய தாக உயர்ந்த வினைத்திறனிலும் குறைந்த வினைத்திறனிலும் உற்பத்தி செய்யக்கூடிய பண்ட வகையை இனங்காண்க.
- மேலுள்ள இரு வகையான பண்டங்களிலும் வினைத்திறனை அடிப்படையாகக் கொண்டு இன்னொரு நாட்டுடன் சர்வதேச வர்த்தகத்திலீடுபட எதிர்பார்க்கப்படுமாயின் எப்பண்டத்தை அதிகளவில் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் எப்பண்டத்தை இறக்குமதி செய்யும் என விளக்குக.
- இரு நாடுகளிலும் ஒவ்வொரு பண்ட உற்பத்தி தொடர்பாகவும் ஏற்படுகின்ற அமையச் செலவுகளைக் கணிப்பிடுக.

- உம்மால் கணிப்பீடு செய்யப்பட்ட அமையச் செலவின் அடிப்படையில் இரு நாடுகளுக்கும் எப்பண்டத்தை அதிகமாக உற்பத்தி செய்வது நன்மை பயக்கும் என்றும் எப்பண்டத்தை இறக்குமதி செய்வது நன்மை பயக்கும் என்பதையும் விளக்குக.
- இவ்வாறு இரு நாடுகளுக்கு இடையில் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் இடம்பெறுமாயின் நாடுகள் பெற்றுக்கொள்ளும் நன்மை களைப் பட்டியற்படுத்துக.
- உமது வெளிப்பாடுகளை முழு வகுப்பிற்கும் ஆக்கபூர்வமாக அமைய வேண்டும் என்பது பற்றிக் கருத்துரைக்கவும்.
- உங்களின் காண்புகளை முழு வகுப்புக்கும் ஆக்கபூர்வமாக முன்வைக்கவும்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- உலகில் ஒரு நாடு ஏனைய நாடுகளுடன் பொருட்கள், சேவைகளைப் பரிமாறிக் கொள்வது சர்வதேச வர்த்தகம் அல்லது வெளிநாட்டு வர்த்தகம் என அழைக்கப்படும்.
- நாடுகள் சர்வதேச வர்த்தக்தில் ஈடுபடுவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன.
- சர்வதேச வர்த்தகம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள பல்வேறு கோட்பாடுகளின் மூலம் அக்காரணங்கள் தொடர்பாக விளக்கப் படுத்தப்படுகின்றது.
- முழு நன்மைக் கோட்பாடு உற்பத்தியில் பிணைந்திறனை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
- முழு நன்மைக் கோட்பாட்டை உலகுக்கு அறிமுகப்பத்திய பொருளியலறிஞர் ‘‘அடம்ஸ்மித்’’ (1776) அதனை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகிறார்.

  ‘‘ஏதாவதொரு நாட்டுக்குத் தமது வர்த்தகப் பங்காளி உற்பத்தி செய்வதை விடக் குறைந்த வளத்தைக் கொண்டு ஏதாவதொரு பண்டத்தை உற்பத்தி செய்ய முடியுமாயின் அப்பண்டத்தை உற்பத்தி செய்வது ஏற்றுமதி செய்வதனால் மற்றும் அவ்வாறில்லாத ஏனைய பண்டங்களை இறக்குமதி செய்வதனால் நன்மைகளைப் பெற முடியும்.’’

| **உற்பத்தி** | **இலங்கை** | **அமெரிக்கா** |
|---|---|---|
| தைக்கப்பட்ட ஆடை அலகு/மனித மணித்தியாலத்துக்கு | 12 | 02 |
| கோதுமை மா Kg/மனித மணித்தியாலத்துக்கு | 08 | 10 |

- மேலுள்ள உதாரணப்படி அமெரிக்காவை விடக் குறைந்த வளத்தைச் செலவிட்டு தைக்கப்பட்ட ஆடைகளை உற்பத்தி செய்வதற்கு இலங்கைக்கு முடியுமாக இருப்பதனால் தைக்கப்பட்ட ஆடை தொடர்பாக முழு நன்மை இலங்கைக்குக் கிடைக்கின்ற வேளை முழு நன்மையின்மை அமெரிக்காவுக்கு காணப்படு கின்றது.
- இலங்கையைவிடக் குறைந்த வளச்செலவில் கோதுமை மாவை உற்பத்தி செய்வதற்கு அமெரிக்காவுக்கு முடியுமாக இருப்பதனால் கோதுமை மா தொடர்பாக முழு நன்மை அமெரிக்காவுக்குக் கிடைக்கின்ற அதேவேளை இலங்கைக்கு முழு நன்மையின்மை காணப்படுகின்றது.
- இதனால் இலங்கைக்கு முழு நன்மை காணப்படுகின்ற தைக்கப் பட்ட ஆடைகளை மேலதிகமாக உற்பத்தி செய்வது மிகையினை அமெரிக்காவுக்கு விற்பனை செய்து முழு நன்மையின்மை காணப்படுகின்ற கோதுமை மாவினை அமெரிக்காவிடமிருந்து கொள்வனவு செய்வதன் மூலம் நன்மை பெற முடியும்.
- அமெரிக்காவுக்கு முழு நன்மை காணப்படும் கோதுமை மாவை மேலதிகமாக உற்பத்தி செய்து மிகையினை இலங்கைக்கு விற்பனை செய்து முழு நன்மையின்மை காணப்படுகின்ற தைக்கப்பட்ட ஆடைகளை இலங்கையிலிருந்து கொள்வனவு செய்ய முடியும்.
- இவ்விதமாக முழு நன்மையை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையே சர்வதேச வர்த்தகம் நடைபெறலாம்.
- முழு நன்மைக் கோட்பாட்டில் காணப்படுகின்ற குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி பொருளியலறிஞர் டேவிட் ரிக்காடோ (1817) ஒப்பீட்டு நன்மைக் கோட்பாட்டினை உலகுக்கு அறிமுகப் படுத்தினார்.
- அது பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.

  ‘‘ ஏதாவதொரு நாடு தனது வர்த்தகப் பங்காளி உற்பத்தி செய்வதைவிட அதிகமான வளத்தைப் பயன்படுத்தி ஏதாவதொரு பண்டத்தை உற்பத்தி செய்வாராயினும் வர்த்தகப் பங்காளி உற்பத்தி செய்வதை விடக் குறைந்த அமயச் செலவில் அதனை உற்பத்தி செய்ய முடியுமாயின் அப்பண்டத்தை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதன் மூலம் நன்மை பெற்றுக்கொள்ள முடியும்.’’

- மேலேயுள்ள வரைவிலக்கணப்படி உலகில் இரு நாடுகளுள் ஒரு நாட்டுக்கு மற்றைய நாட்டை விடக் குறைந்த அமயச் செலவில் ஏதாவதொரு பண்டத்தை உற்பத்தி செய்ய முடியுமாயின் அந்நாட்டுக்கு அக்குறிப்பிட்ட பண்டத்தை உற்பத்தி செய்வது தொடர்பாக ஒப்பீட்டு நன்மை காணப்படுகின்றது என்பது தெளிவாகின்றது.
- ஒப்பீட்டு நன்மையினை பின்வரும் உதாரணத்தின் அடிப்படையில் விளக்க முடியும் .

| **உற்பத்தி** | **யப்பான்** | **இந்தியா** |
|---|---|---|
| மோட்டார் வாகனம் அலகு/மனித மணித்தியாலத்துக்கு | 10 | 03 |
| வானொலிப் பெட்டி அலகு/மனித மணித்தியாலத்துக்கு | 05 | 02 |

| **நாடு** | **மோட்டார் வாகனம் அலகு/மனித மணித்தி யாலத்துக்கு** | **வானொலி பெட்டி அலகு/மனித மணித்தி யாலத்துக்கு** | **மோட்டார் வாகனம் அலகு/மனித மணித்தி யாலத்துக்கு** | **வானொலி பெட்டி அலகு/மனித மணித்தி யாலத்துக்கு** |
|---|---|---|---|---|
| யப்பான் | 10 | 05 | 05 | 02 |
| இந்தியா | 03 | 02 | 0.66 | 1.5 |

- மேலுள்ள உதாரணத்தின்படி யப்பான் இந்தியாவை விடக் குறைந்த அமையச் செலவின் கீழ் மோட்டார் வாகனத்தை உற்பத்தி செய்வதும் இந்தியா யப்பானைவிடக் குறைந்த அமயச் செலவின் கீழ் வானொலிப் பெட்டியை உற்பத்தி செய் முடியும்.
- இதன்படி யப்பானுக்கு மோட்டார் வாகன உற்பத்தியின் ஒப்பீட்டு நன்மை காணப்படுவதுடன் வானொலிப் பெட்டி உற்பத்தி செய்வதில் ஒப்பீட்டு நன்மை காணப்படுவது இந்தியாவுக்காகும்.
- இரு நாடுகளும் வர்த்தகத்தில் ஈடுபடும்போது யப்பான் மோட்டார் வாகன உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சிக்கும் இந்தியா வானொலிப் பெட்டி உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சிக்கும் உட்படுவதன் காரணமாக உருவாகும் மேலதிக உற்பத்தியைப் பரிமாறிக் கொள்வதன் மூலம் இரண்டு நாடுகளுக்கும் நன்மை கிட்டும்.
- சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுவதனால் ஒரு நாட்டுக்குக் கிடைக்கின்ற நன்மைகள் பின்வருமாறு பிரதான இரண்டு பிரிவுகளாக வேறுபடுத்தலாம்.
    - நிலையான நன்மைகள்
    - மாற்றமடையும் நன்மைகள்

- உற்பத்தி மற்றும் நுகர்வை அடிப்படையாகக் கொண்டு ஏற்படும் நன்மைகள் நிலையான நன்மைகள் என அழைக்கப்படும் அதே வேளை அது பின்வருமாறு இரு பிரிவாகப் பிரிக்க உதவும்.
    - சிறப்புத் தேர்ச்சியின் நன்மைகள்
    - பரிமாற்றத்தின் நன்மைகள்
- வர்த்தகத்தில் ஈடுபடும்போது பல்வேறு காரணிகளின் செல்வாக்கினால் (உதாரணம்: ஏற்றுமதி விலை, வர்த்தக விகிதம் வேறுபடல்) மாற்றமடையும் நன்மைகள், மாற்றமடையும் நன்மைகள் என அழைக்கப்படும்.

  உதாரணம்: தொழில்நுட்பம்

**தேர்ச்சி 10** : சர்வதேச வர்த்தகமும் நிதியும் நாட்டில் பேரினப் பொருளாதாரத் திற்கு ஏற்படுத்தும் தாக்கத்தை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 10.2** : சர்வதேச வர்த்தகத்தில் பாதுகாப்பு கொள்கையின் மூலம் ஏற்படும் தாக்கத்தை ஆய்வு செய்வர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- சுதந்திர வர்த்தகத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.
- பாதுகாப்பை வாத நடவடிக்கையின் பொருளாதார விளைவுகளை விளக்குவார்.
- பாதுகாப்பு வாதத்துக்கு சார்பாகவும் எதிராகவும் முன்வைக்கப் பட்டுள்ள வாதகங்களை விளக்குவார்.
- சர்வதேச வர்த்தகத்தைக் கண்காணிக்கும் நிறுவனங்களை இனங்காட்டுவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- சுதந்திர வர்த்தகம் என்பதை நாடுகளுக்கிடையே பொருட்கள், சேவைகள், காரணிகள் என்பவற்றை சுதந்திரமாக அசைவதற்கு அனுமதிப்பது எனக் குறிப்பிடப்படலாம்.
- உள்நாட்டுச் சந்தையினுள், வெளிநாட்டு பண்டங்கள் சுதந்திரமாக உட்பிரவேசிப்பதை தடை செய்யும் எந்த வகையான செயற்பாடும் பாதுகாப்பு + வாதம் என அழைக்கப்படுவதுடன் பாதுகாப்பு வாத செயற்பாடுகள் பின்வருமாறு வகையில் மூன்றாக வகைப்படுத்தப் பட முடியும்.
    - தீர்வை வரி நடவடிக்கைகள்
    - தீர்வை வரியில்லாத நடவடிக்கைகள்
    - வர்த்தகத் தெரிவு தொடர்பான பொது முறைமை
- பாதுகாப்புவாத நடவடிக்கையென்ற வகையில் தீர்வை வரிகளைப் பின்வருமாறு பயன்படுத்தலாம்.
    - ஏற்றுமதித் தீர்வை விதித்தல்
    - இறக்குமதி தீர்வை விதித்தல்
- தீர்வை வரியல்லாத பாதுகாப்பு வாத நடவடிக்கைகளைப் பின்வருமாறு காட்ட முடியும்.
    - பங்கீட்டு முறையும்
    - செலாவணிக் கட்டுப்பாடும் இறக்குமுதியைத் தடை செய்தலும்
    - ஏற்றுமதி இறக்குமதி அனுமதிப்பத்திர முறை
    - வர்த்தக ஒப்பந்தங்களைச் செயற்படுத்தல்
    - குவித்தல்

- காடல் அமைத்தல்
- பிராந்திய பொருளாதார ஒத்துழைப்புக்கள்
- உற்பத்தி தரங்களை வெளியிடல்

- பாதுகாப்பின் நன்மையான தீமையான விளைவுகளை பின்வரும் அடிப்படையில் பிரித்துக் காட்டலாம்.

| **நன்மையான விளைவுகள்** | **தீமையான விளைவுகள்** |
|---|---|
| 1. வெளிநாட்டு போட்டியாளர்களிடமிருந்து உள்நாட்டு குழந்தை பருவ உற்பத்திகளை பாதுகாத்தல். | 1. உள்நாட்டு, வெளிநாட்டு சந்தைகள் ஒடுக்கமடைதல். |
| 2. தன்னிறைவை ஏற்படுத்தல். | 2. வெளிநாட்டு வர்த்தகம் ஒடுக்கமடைந்து தேசிய வருமானம் குறைவடைதல் |
| 3. வேலையின்மையை குறைப்பதற்கு | 3. உள்நாட்டு உற்பத்தி செலவுகளைக் குறைப் பதற்கு ஊக்குவிப்பின்மையால் வினைத்திற னற்ற தொழில் உருவாகுதல். |
| 4. குவித்தலை தடை செய்தல். | 4. தரமான பண்டங்களின் உற்பத்தி குறைதல். |
| 5. பாதகமான சென்மதி நிலுவை நிலைமையைச் சீர்செய்தல். | |

- பின்வரும் நன்மையான, தீமையான விளைவுகளின் அடிப்படையில் சார்பாகவும் எதிராகவும் தர்க்கங்கள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.
- சர்வதேச வர்த்தகத்தைக் கண்காணிப்பதற்கு நிறுவனங்கள் காணப்படுகின்றன.
- சர்வதேச வர்த்தகத்தை செயற்படுத்தும் பிரதான நிறுவனம் என்ற வகையில் உலக வியாபார அமைப்பினைக் குறிப்பிடலாம்.
- சர்வதேச வியாபார அமைப்பானது பாதுகாப்பு செயற்பாட்டை தளர்த்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டது.
- இதன் நோக்கங்களைப் பின்வருமாறு காட்டலாம.
  - சுதந்தர வர்த்தகத்திற்குத் தடையாக அமையும் தீர்வை வரிகளைக் குறைத்து சர்வதேச வர்த்தகத்தை விரிவாக்குதல்.
  - சர்வதேச வர்த்தகத்தில் விவசாயம், வர்த்தக முதலீடும் போன்ற துறைகளில் சுதந்திர வர்த்தகத்தை விஸ்தரித்தல்.
  - வர்த்தகத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் தீர்வை வரியல்லாத தடையாக கருதப்படக்கூடிய குவித்தல் ஏற்றுமதிக் கோட்டா

- உற்பத்தி தரப்படுத்தல் நியமங்களை அமுலாக்குதல் போன்ற வற்றை நீக்குவதற்கு கவனத்தைச் செலுத்துதல்.
- வர்த்தகத்திலான சமமின்மைகளை நீக்குதல்.
- சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி உள்ளடங்கலாக சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனங்களுடன் அன்யோன்யமாக செயற்படுதல்.
- வர்ததகத் தேர்வு தொடர்பான பொது முறைமை GSP + என்பது 2005 இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஐரோப்பா சங்கத்திற்கு பண்டங்களை ஏற்றுமதி செய்கையில் தீர்வை வரி இன்றி மூன்று வருடங்களுக்கு மேற்கொள்ளக்கூடிய ஒரு வேலைத்திட்டமாகும்.

**தேர்ச்சி 10** : சர்வதேச வர்த்தகமும் நிதியும் நாட்டில் பேரினப் பொருளாதாரத் திற்கு ஏற்படுத்தும் தாக்கத்தை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 10.3** : இலங்கையின் சர்வதேச வர்த்தக கட்டமைப்பையும் போக்கையும் விமர்சிப்பர்.

**பாடவேளை** : 05

**கற்றற் பேறுகள்** :
- இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகம் மற்றும் இறக்குமதி வர்த்தகம் என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துவார்.
- இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பு மற்றும் இறக்குமதிக் கட்டமைப்பு அமைந்துள்ள விதத்தை விபரிப்பார்.
- இலங்கின் ஏற்றுமதிக் கட்டமைப்பு மற்றும் இறக்குமதிக் கட்டமைப்பின் போக்கு தொடர்பான ஒப்பீட்டு ரீதியான வாதத்தில் ஈடுபடுவார்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

**பிரவேசம்** :
- இலங்கைக்கு மிகவும் அதிகமாக வெளிநாட்டு செலாவணியை உழைத்துத் தரும் பண்டத்தையும் இலங்கை அதிகளவு வெளிநாட்டு செலாவணியைச் செலவு செய்யும் பண்டத்தையும் மாணவர்களிடம் கேட்டறிக.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தும் வகையில் கலந்துரை யாடலை மேற்கொள்க.
    - இலங்கைக்கு உயர்ந்த வெளிநாட்டு செலாவணியை புடைவை யும் ஆடையும் ஈட்டித் தருகின்றது.
      (2009ஆம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கைப்படி)
    - இலங்கை அதிகளவான வெளிநாட்டு செலாவணியைச் செலவு செய்வது கனிய எண்ணெய்யை வெளிநாட்டுச் சந்தையில் கொள்வனவு செய்வதற்கு.
      (2009ஆம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கைப்படி)
    - இவ்வாறு இலங்கை பல்வேறு வகையான பண்டங்களையும் சேவைகளையும் ஏற்றுமதி, இறக்குமதி செய்கின்றது.
- மாணவர்களை பொருத்தமான முறையில் குழுக்களாக்கி கற்றலுக்கான உத்தேச அறிவுறுத்தல்களையும் வழங்கி செயற்பாடுகளில் ஈடுபடுத்தவும்.

**கற்றலுக்கான உத்தேச அறிவுறுத்தல்கள்:**

- பின்வரும் தலைப்புகளுள் உமக்கு வழங்கப்பட்ட தலைப்பின் மீது கவனத்தைச் செலுத்துக.
    - இறக்குமதி வர்த்தகம்
    - ஏற்றுமதி வர்த்தகம்
- உமக்கு வழங்கப்பட்ட தலைப்பை இனங்காண்பதற்காக குழுக் கலந்துரையாடலில் ஈடுபடுக.
- தலைப்புக்குப் பொருத்தமான பட்டியற்படுத்துக.
- அந்த உரிய சார்பளவான பங்களிப்பினை சதவீதத்தில் காட்டுக.
- குறிப்பிட்ட காலப் பகுதியினுள் குறிப்பிட்ட பங்களிப்பு மற்றும் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை முன்வைக்கவும்.
- அம்மாற்றங்களுக்கான காரணங்களை விளக்குக.
- உமது கண்டறிதலைக் கூட்டாக இணைந்து வரைபு, சதவீதம், அட்டவணை மூலம் ஆக்கபூர்வமாகக் முன்வைப்பதற்குத் தயாராகுக.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- ஏதாவது ஒரு நாடு உலகின் இன்னொரு நாட்டிலிருந்த பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வது இறக்குமதி வியாபாரம் ஆகும்.

  உதாரணம்: இலங்கை, இந்தியாவிலிருந்து மோட்டார் வாகனத்தைக் கொள்வனவு செய்தல்.
- ஏதாவதொரு நாடு உலகின் இன்னொரு நாட்டுக்கு பொருட்கள், சேவைகளை விற்பனை செய்தல் ஏற்றுமதி வர்த்தகமாகும் என்பது.

  உதாரணம்: இலங்கை ஐக்கிய அமெரிக்க இராச்சியத்திற்குத் தேயிலையை விற்பனை செய்தல்.
- இலங்கையின் இறக்குமதிக் கட்டமைப்பைக் பின்வருமாறு காட்டலாம்.
    - நுகர்வுப் பண்டம்
    - இடைநிலைப் பண்டம்
    - முதலீட்டுப் பண்டம்
    - வகைப்படுத்தப்படாத ஏற்றுமதி
- அவ்விறக்குமதிக் கட்டமைப்பைக் பின்வருமாறு சதவீதமாகக் காட்டலாம்.
    - நுகர்வுப் பண்டம் - 19.3%
    - இடைநிலைப் பண்டம் - 55.55%
    - முதலீட்டுப் பண்டம் - 24%
    - வகைப்படுத்தப்படாத ஏற்றுமதி - 1.1%

- இறக்குமதி செய்யப்படும் நுகர்வுப் பண்டங்களுக்கான உதாரணங் களைப் பின்வருமாறு காட்டலாம்.
    - அரிசி, சீனி, கோதுமை, பால்மா
    - தனியார் மோட்டார் வாகனங்கள்
    - மின் உபகரணங்கள்
- இறக்குமதி செய்யப்படும் இடைநிலைப் பண்டங்களுக்கான உதாரணங்களைப் பின்வருமாறு காட்டலாம்.
    - கனிய எண்ணெய்
    - உரம்
    - இரசாயனப் பொருட்கள்
    - புடவையும் ஆடையும்
- இறக்குமதி செய்யப்படும் முதலீட்டுப் பண்டங்களுக்கான உதாரணங்களைப் பின்வருமாறு காட்டலாம்.
    - இயந்திரங்கள், பொறிகள் மற்றும் கருவிகள்
    - போக்குவரத்துச் சாதனங்கள்
    - கட்டிடப் பொருட்கள்
- 1977 இலிருந்து 2009 வரையான இறக்குமதிக் கட்டமைப்பு கால அடிப்படையில் மாற்றமடைந்துள்ள விதம் பின்வருமாறு

| **இறக்குமதிக் கட்டமைப்பு** | **1977** | **2009** |
|---|---|---|
| நுகர்வுப் பண்டம் | 42% | 19% |
| இடைநிலைப் பண்டம் | 45% | 55% |
| முதலீட்டுப் பண்டம் | 12% | 24% |
| வகைப்படுத்தப்படாத ஏற்றுமதி | 1% | 1% |

| **இடைநிலைப் பண்டம்** | **1977** | **2009** |
|---|---|---|
| வடிக்கப்படாத எண்ணெய் | 23% | 10% |
| ஏனைய கனிய எண்ணெய் உற்பத்திகள் | 2% | 12% |
| புடவை | 3% | 14% |
| உரம் | 1% | 2% |
| கடதாசி | 1% | 2% |
| ஏனைய இடைநிலைப்பண்டங்கள் | 15% | 16% |

மேலுள்ள தகவல்கள் 2009 மத்திய வங்கி அறிக்கைப்படி முன்வைக்கப்பட்டுள்ள அதேவேளை அண்மைய ஆண்டுகளின் மத்திய வங்கி அறிக்கைகளைப் பயன்படுத்தி மேலுள்ளவாறு அவசியமான தகவல்களை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும்.

- இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பைக் கீழ்வருமாறு காட்டலாம்.
    - விவசாய ஏற்றுமதி
    - கைத்தொழில் ஏற்றுமதி
    - கனியப் பொருள் ஏற்றுமதி
    - வகைப்படுத்தப்படாத ஏற்றுமதி(2009மத்திய வங்கி அறிக்கைப்படி)
- அவ்வேற்றுமதிக் கட்டமைப்பை பின்வருமாறு சதவீதமாகக் காட்டலாம்.
    - விவசாய ஏற்றுமதி 23.9%
    - கைத்தொழில் ஏற்றுமதி 74.9%
    - கனியப் பொருள் ஏற்றுமதி 1.3%
- ஏற்றுமதி செய்யப்படும் விவசாயப் பண்டங்களுக்கான உதாரணங்களைப் பின்வருமாறு காட்டலாம்.
    - தேயிலை, இறப்பர், தெங்கு, ஏனைய விவசாய ஏற்றுமதிகள்
- ஏற்றுமதி செய்யப்படும் கைத்தொழில் பொருட்களுக்கான உதாரணங்களைப் பின்வருமாறு காட்டலாம்.
    - உணவு, குடிபானம், புகையிலை
    - புடவையும் தைக்கப்பட்ட ஆடைகளும்
    - கனிய உற்பத்திகள்
    - இறப்பர் உற்பத்திகள்
    - பீங்கான உற்பத்திகள்
    - தோல், பிரயாணப்பை மற்றும் காலணி
    - இயந்திரங்களம் பொறிகளும் கருவிகளும்
    - இரத்தினங்களும் ஆபரணங்களும்
    - ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள்
- ஏற்றுமதி செய்யப்படும் கனிய ஏற்றுமதிகளுக்கான உதாரணங்களைக் பின்வருமாறு காட்டலாம்.
    - இரத்தினக் கற்கள்
    - ஏனைய கனியப்பொருள் ஏற்றுமதிகள்
- 1977 தொடக்கம் 2009 வரையான ஏற்றுமதிக் கட்டமைப்பு கால அடிப்படையில் மாற்றமடைந்துள்ள விதத்தைக் பின்வருமாறு காட்டலாம்.

| **இறக்குமதிக் கட்டமைப்பு** | **1977** | **2009** |
|---|---|---|
| விவசாயப் பண்டம் | 79% | 24% |
| கைத்தொழில் பண்டம் | 14% | 75% |
| ஏனையவை | 7% | 1% |

- கைத்தொழில் பண்ட ஏற்றுமதி விரிவாகக் பின்வருமாறு காட்டப் படுகின்றது.

| கைத்தொழில் பண்டம் | 1977 | 2009 |
|---|---|---|
| புடவைகளும் தைக்கப்பட்ட ஆடைகளும் | 2% | 46% |
| கனிய எண்ணெய் உற்பத்திகள் | 2% | 2% |
| ஏனைய கைத்தொழில் பண்டங்கள் | 3% | 6% |
| உணவு, குடிபானம், புகையிலை | - | 6% |
| இரத்தினக்கல்லும் ஆபரணங்களும் | - | 5% |
| இறப்பர் உற்பத்திகள் | - | 5% |

- மேற்குறிப்பிட்ட போக்குக்கு காரணமாகியுள்ள விடயங்கள பின்வருவனாகும்.
    - ஏற்றுமதிப் பயிர்களின் விலைத் தளம்பல்
    - ஏற்றுமதி அளவு குறைவடைதல்
    - உலக சந்தையில் காணப்படுகின்ற நிச்சயமற்ற தன்மை
    - ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கு அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
    - இயற்கை உற்பத்திகள் காரணமாக உலகரீதியாக கேள்வி அதிகரிப்பு
    - இலங்கையின் தைக்கப்பட்ட ஆடைகள் உயர்மட்டத்தில் காணப் படுவதும் அது தொடர்பாக சர்வதேச விசுவாசம் வெற்றி கொள்ளப்படலும்.
    - உலகரீதியான பொருளாதார மந்தம்.

**தேர்ச்சி 10** : சர்வதேச வர்த்தகமும் நிதியும் நாட்டில் பேரினப் பொருளாதாரத்திற்கு ஏற்படுத்தும் தாக்கத்தை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 10.4** : வர்த்தக மாற்று விகிதத்தின் அடிப்படையில் சர்வதேச வர்த்தகத்தின் பொருளாதார விளைவுகளை விமர்சிப்பர்.

**பாடவேளை** : ஆறு பாடவேளை

**கற்றற் பேறுகள்** :

- வர்த்தக மாற்று விகிதத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.
- பண்ட வர்த்தக மாற்று விகிதத்தைப் பெயரிட்டு கணிப்பிட்டுக் காட்டுவார்.
- பண்ட வர்த்தக மாற்று விகிதத்தின் பொருளாதார விளைவுகளை விபரிப்பார்.
- வருமான வர்த்தக மாற்று விகிதத்தைப் பெயரிட்டுக் கணிப்பிட்டுக் காட்டுவார்.
- வருமான வர்த்தக மாற்று விகிதத்தின் பொருளாதார விளைவுகளை விபரிப்பார்.
- அண்மைக் கால மத்திய வங்கி அறிக்கைகளின் அடிப்படையில் இலங்கையின் பண்ட வர்த்தக மாற்று விகிதம் வருமான வர்த்தக மாற்று விகிதம் தொடர்பான அண்மைக்கால தகவல்களை முன்வைப்பார்.

**கற்றலுக்கான உத்தேச அறிவுறுத்தல்கள்:**

- ஏற்றுமதி அலகொன்றினால் பெற்றுக்கொள்ளக்கூடிய இறக்குமதிப் பண்டங்களின் அளவு வர்த்தக விகிதமாகும்.
- வர்த்தக விகித வகைகள் பிரதானமாக இரண்டாகும்.
    - பண்ட வர்த்தக மாற்று விகிதம்
    - வருமான வர்த்தக மாற்று விகிதம்
- ஏற்றுமதிகளின் இறக்குமதி இயலளவு அல்லது கொள்வனவுச் சக்தியை அளவிடுவதற்காகத் தயாரிக்கப்பட்ட அளவீடு பண்ட வர்த்தக மாற்று விகிதமாகும.
- ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணை இறக்குமதி விலைச் சுட்டெண்ணால் பிரித்து நூறால் பெருக்குவதன் மூலம் பண்ட வர்த்தகமாற்று விகிதத்தைக் கணிக்கலாம்.
- வர்த்தக விகிதம் அதிகரிக்கும்போது பொருளாதார வளர்ச்சிக்கு அது சாதகமாக அமையும்.
- வர்த்தக விகிதம் வீழ்ச்சியடைவது அபிவிருத்திக்குப் பாதகமாக அமையும்.

- பண்ட வர்த்தக விகிதத்தினால் ஒரு நாட்டின் இறக்குமதிக் கொள்வனவுச் சக்தி போதியளவில் வெளிப்படுத்தப்படுவதில்லை.
- ஏற்றுமதி வருமானத்தின் இறக்குமதிக் கொள்வனவுச் சக்தியை அளவிடுவதற்காக தயாரிக்கப்படும் சுட்டெண் வருமான வர்த்தக மாற்று விகிதமாகும்.
- ஒரு நாட்டின் பண்ட வர்த்தகமாற்று விகிதத்தை அதன் ஏற்றுமதி அளவுச் சுட்டெண்ணால் பெருக்கும்போது வருமான வர்த்தக மாற்று விகிதத்தைக் கணிப்பிடலாம்.

$$I = \frac{Px}{Pm} \times Qx$$

- I = வருமான வர்த்தக மாற்று விகிதம்
- Px = ஏற்றுமதி விலைச்சுட்டெண்
- Pm = இறக்குமதி விலைச்சுட்டெண்
- Qx = ஏற்றுமதி அளவுச் சுட்டெண்

- மூலதனப் பண்டங்களை இறக்குமதி செய்யும் ஆற்றல் பெருமளவுக்குத் தங்கியிருப்பது வருமான வர்த்தக மாற்று விகிதத்தின் மீதாகும். அதனால் விருத்தியடைந்துவரும் நாடுகளில் கட்டாயமாக வருமான வர்த்தக மாற்று விகிதம் உயர்ந்து செல்ல வேண்டும்.

**தேர்ச்சி 10** : சர்வதேச வர்த்தகமும் நிதியும் நாட்டில் பேரினப் பொருளாதாரத்திற்கு ஏற்படுத்தும் தாக்கத்தை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 10.5** : சென்மதி நிலுவை அட்டவணையின் உள்ளடக்கத்தை ஆய்வு செய்து அதன் மாதிரி அமைப்பொன்றைத் தயாரிப்பர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- சென்மதி நிலுவை எண்ணக்கருவை வரைவிலக்கணப்படுத்துவார்.
- சென்மதி நிலுவை அட்டவணையின் உள்ளடக்கத்தை உதாரணம் மூலம் விளக்குவார்.
- சென்மதி நிலுவை அட்டவணையொன்றைக் கருதுகோள் ரீதியான புள்ளிவிபரங்களைத் தகவல்களை பயன்படுத்தி தயாரிப்பார்.
- சென்மதி நிலுவை அட்டவணையில் உள்ளடக்கும் விடயங்களை விளக்குவார்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

**பிரவேசம்** :
- குடும்பத்துக்கு வருமானம் கிடைக்கின்ற வழிகள் மற்றும் அவ்வருமானத்தைச் செலவிடும் விதம் தொடர்பாக மாணவரிடம் விசாரிக்கவும்.
- கீழுள்ள விடயங்களை மேம்படுத்திக் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.
  - குடும்பத்துக்குப் பின்வரும் வழி வகைகளில் வருமானம் கிடைக்கின்றது என்பது.
    - வீட்டிலுள்ளவரது சம்பளங்கள்
    - நிலபுலங்களிலிருந்து கிடைக்கும் வருமானம்
    - வங்கி வைப்புக்களிலிருந்து கிடைக்கும் வட்டி
    - தொழிலுக்கு மேலதிகமாக செய்கின்ற பல்வேறு வர்த்தக நடவடிக்கைகளிலிருந்தான வருமானம்
- குடும்பத்துக்குக் கிடைக்கின்ற வருமானம் பின்வருமாறு பல்வேறு பொருட்கள் சேவையின் பயன்பாட்டுக்கு செலவிடப்படும் என்பது.
  - உணவு மற்மறும் உடுதுணிகளின் கொள்வனவு
  - கல்வி நடவடிக்கைகளுக்கு
  - பயணச் செலவுகளுக்கு
  - மின்கட்டணம், நீர்க்கட்டணம், தொலைபேசிக்கட்டணம் என்பவற்றைச் செலுத்துவதற்கு

- வீட்டுக்குக் கிடைக்கும் வருமானம் மற்றும் செய்யப்படும் செலவு என்பவற்றை ஒப்பிடுவதன் மூலம் இறுதியில் மீதியா, பற்றாக் குறையா உள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம்.
- இவ்வகையில் ஒரு நாடு வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களி லிருந்து பெறுகின்ற வருமானம் மற்றும் செலவுக் கணக்கீட்டு ஒழுங்குமுறையின்படி அறிக்கைப்படுத்தி இறுதி விளைவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**கற்றலுக்கான உத்தேச அறிவுறுத்தல்கள்:**

- இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான சில தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் உமது குழுவுக்குக் கிடைத்துள்ள தகவல் மீது அவதானம் செலுத்தவும்.

**A தொகுதி**

| **விடயம்** | **பெறுமதி (மில். ரூ.)** |
|---|---|
| உணவு குடிபானங்களின் இறக்குமதி | 200 |
| தேயிலை ஏற்றுமதி | 100 |
| புடவைகள் மற்றும் ஆடை ஏற்றுமதி | 500 |
| புடவை இறக்குமதி | 300 |
| உரம் இறக்குமதி | 400 |
| இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதி | 50 |
| சுத்திகரிக்கப்படாத எண்ணெய் இறக்குமதி | 200 |
| கட்டிடப் பொருட்க்ள இறக்குமதி | 50 |
| இறப்பர் ஏற்றுமதி | 100 |
| கனிய எண்ணெய் உற்பத்திகள் இறக்குமதி | 100 |
| தெங்கு ஏற்றுமதி | 50 |

**B தொகுதி**

| **விடயம்** | **பெறுமதி (மில். ரூ.)** |
|---|---|
| விமான சேவையிலிருந்து வருமானம் | 500 |
| வெளிநாட்டுக் கப்பல்களுக்கான சேவை வழங்கல் | 300 |
| இலங்கையில் வேறு துறைமுக வசதிகள் பெற்றுக் கொடுத்தல் | 200 |
| சர்வதேச தொடர்பாடல் அமைப்புக்களின் சேவையைப் பெற்றுக் கொடுத்தல் | 1000 |
| வெளிநாட்டு ஹோட்டல், சிற்றுண்டிச்சாலை வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் | 100 |
| இலங்கையிலிருந்து ஹோட்டல், சிற்றுண்டிச்சாலை | |

**C தொகுதி**

| விடயம் | பெறுமதி (மில். ரூ.) |
|---|---|
| இலங்கை வெளிநாடுகளுக்குச் செலத்திய வட்டிக் கொடுப்பனவு | 600 |
| மத்திய கிழக்கில் வேலை செய்யும் இலங்கைப் பெண்கள் தமது பிள்ளைகளுக்கு அனுப்பிய சம்பளம் | 500 |
| இலங்கையரொருவர் வெளிநாட்டு வர்த்தக முயற்சியொன்றில் செய்த பண முதலீடு | 1300 |
| சுனாமி அனர்த்தம் காரணமாக எமது நாட்டுக்குக் கிடைத்த நன்கொடை | 100 |
| வெளிநாட்டவர் இலங்கையின் வியாபார முயற்சிகளின் பங்குகளைக் கொள்வனவு செய்தல். | 200 |
| வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்குக் கிடைத்த வெளிநாட்டுதவி | 300 |
| வெளிநாட்டில் வசிக்கும் வதிவற்றோருக்காக அனுப்பிய பண நன்கொடை | 100 |
| இலங்கையிலிருந்து வெளிநாடொன்றுக்குச் செய்யப்பட்ட நன்கொடை | 300 |

- உமக்குக் கிடைத்துள்ள தகவல் தொகுதியிலிருந்து இலங்கைக்கு வெளிநாட்டுச் செலாவணி கிடைக்கக்கூடிய கொடுக்கல் வாங்கல்களைப் பட்டியற்படுத்தி மொத்த வெளிநாட்டுச் செலாவணிப் பெறுகைகளைக் கணிக்க.
- இலங்கைக்கு வெளிநாட்டுச் செலாவணிச் செலவை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்களின் பட்டியலொன்றைத் தயாரித்து மொத்த வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவு களைக் கணிக்க.
- மேலே கணிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிப் பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகளை ஒப்பிட்டு இறுதி மீதியைக் கணிப்பிடுக.
- உங்களின் கண்டறிதல்களை ஆக்கபூர்வமான முறையில் வகுப்புக்கு முன்வைக்குக.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- உலகின் ஒரு நாடு உலகிலுள்ள ஏனைய நாடுகளுடன் செய்கின்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான எழுத்துமூலமான அட்டவணை சென்மதி நிலுவை அட்டவணையாகும் என்பது.
- இது இரட்டைப்பதிவு முறையில் கணக்குப் பதிவு செய்யப்படுவதனால் சென்மதி நிலுவை எனவும் அழைக்கப்படும்.
- சென்மதி நிலுவை அட்டவணை பிரதான கணக்குகள் இரண்டைக் கொண்டதாகும்.
  - நடைமுறைக்கணக்கு
  - மூலதன மற்றும் நிதியியல் கணக்கு
- நடைமுறைக் கணக்கு மீண்டும் பிரதான கணக்குகள் நான்காகப் பிரிக்கப்படும்.
  - வர்த்தகக் கணக்கு (பொருட்கள் கணக்கு
  - சேவைக் கணக்கு (காரணியல்லா சேவைக் கணக்கு)
  - வருமானக் கணக்கு (காரணிச் சேவைகள் கணக்கு)
  - நடைமுறை மாற்றல் கணக்கு (உத்தியோகபூர்வ மற்றும் தனியார் மாற்றல் கணக்கு)
- உலகின் ஒரு நாடு உலகின் ஏனைய நாடுகளுடுன் செய்கின்ற பொருள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பாகப் பதிவு செய்யும் கணக்கு வர்த்தகக் கணக்கு அல்லது பண்டக் கணக்கு என அழைக்கப்படும்.
- இக்கணக்கின் மீதி வர்த்தக மீதி என அழைக்கப்படுவதுடன் அது நேர் அல்லது மறைப் பெறுமதிகளைப் பெறலாம்.
- சர்வதேச வர்த்தகத்தின்போது ஒருநாடு ஏனைய நாடுகளுடன் காரணியல்லாச் சேவைகளுக்காக செய்கின்ற செலவு மற்றும் வருமானம் பதியப்படுகின்ற கணக்கு சேவைக் கணக்கு என அழைக்கப்படும்.
- இக்கணக்கின் மீதி நேர் அல்லது மறைப் பெறுமதியைப் பெறக் கூடும்.
- சர்வதேச வர்த்தகத்தின்போது காரணி வருமானப் பெறுகை மற்றும் காரணி வருமானக் கொடுப்பனவு தொடர்பாகப் பதிவு செய்கின்ற கணக்கு வருமானக் கணக்கு என அழைக்கப்படும்.
- வீட்டுப் பணிப்பெண்கள் வெளிநாடுகளிலிருந்து அனுப்பும் வேதனம் இக்கணக்கில் ஒரு விசேட அம்சமாகும்.
- இக்கணக்கின் பெறுகை மற்றும் கொடுப்பனவுக்கிடையேயான மீதி நேர் அல்லது மறைப் பெறுமதியைப் பெறக்கூடும்.

- உலக நாடுகளிடையே தொடர்புகள் காணப்படும்போது ஒரு நாடு உலகின் வேறொரு நாட்டுக்கு செய்கின்ற நன்கொடைகள் அரசாங்கமொன்றிலிருந்து இன்னொரு அரசாங்கத்துக்காக அமையு மாயின் அது உத்தியோகபூர்வ மாற்றல் என அழைக்கப்படும்.
- அதேபோல ஏதாவதொரு நாட்டின் பிரஜை வெளிநாடு சென்ற பின்னர் தமது உறவினர் நண்பர்களுக்கு அனுப்புகின்ற அவரது சம்பளம் தனியார் மாற்றல் எனக் கருதப்பட முடியும்.
- இதன்படி நடைமுறை மாற்றல்கள் உத்தியோகபூர்வமாற்றல் மற்றும் தனியார் மாற்றல் என இரண்டு பிரிவாகப் பிரிக்கப்படும்.
- மேலேயுள்ள நான்கு கணக்குகளதும் மீது நடைமுறைக் கணக்கின் மீதியாகும்.
- அது நேர் அல்லது மறைப் பெறுமதியைப் பெறலாம் என்பது.
- மூலதனக் கணக்கில் பதிவு செய்யப்படுவது மூலுதன மாற்றல்க ளாகும்.
- நிதியியல் கணக்கு குறுங்கால மற்றும் நீண்டகாலம் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றது.
- நீண்டகால நிதியியல் கணக்கில் நேரடி முதலீடு, தனியார் நீண்டகாலம் (தேறியது) மற்றும் அரசின் நீண்ட காலம் (தேறியது) என்பன அடங்கும்.
- குறுங்கால நிதியியல் கணக்கில் பின்வருவன அடங்குகின்றன.
    - பல்வகை முதலீடுகள் (தேறியது)
    - தனியார் குறுங்காலம் (தேறியது)
    - வணிக வங்கிகளின் சொத்துக்கள் (தேறியது)
    - வணிக வங்கிகளின் பொறுப்புக்கள் (தேறியது)
    - அரசின் குறுங்காலம் (தேறியது)
- சிறப்பு எடுப்பனவு உரிமை (சி.எ.உ) பெறுமதியை கணிக்கும் போதான சீராக்கல், பிழைகளும் தவிர்ப்புக்களும் என்பவற்றைச் சீராக்குவதன் மூலம் சென்மதி நிலுவையின் மொத்த மீதியைத் தயாரித்துக் கொள்ள முடியும்.



சென்மதி நிலுவை அட்டவணை
நடைமுறைக் கணக்கு
மூதன நிதியியல் கணக்கு
பண்டக் கணக்கு (வர்தகக் கணக்கு)
சேவைக் கணக்கு
வருமானக் கணக்கு
மாற்றல் கணக்கு
மூலதன மாற்றல்
பண்ட ஏற்றுமதி பெறுகை
பண்ட இறக்குமதி கொடுப்பனவு
பெறுகை
கொடுப்பனவு
பெறுகை
கொடுப்பனவு
உத்தியோக பூர்வ மாற்றல்
தனியார் மாற்றல்
நீண்ட காலம்
• நேரடி முதலீடு
• தனியார் நீண்ட காலம்(தேறியது)
• அரசாங்கம் நீண்ட காலம் (தேறியது)
குறுங்கால
• குறுங்கால பல்வகை முதலீடு
• தனியார் குறுங்காலம் (தேறியது)
• வணிக வங்கிகளின் சொத்து (தேறியது)
• வணிக வங்கிகளின் பொறுப்பு (தேறியது)
• அரச குறுங்காலம் (தேறியது)
வர்த்தக மீதி
+
சேவைக் கணக்கு மீதி
+
வருமானக் கணக்கு மீதி
+
மாற்றல் கணக்கு மீதி
நடைமுறைக் கணக்கு மீதி
+
மூலதன மற்றும் நிதியியல் கணக்கு மீதி
+
பெறுமதி கணிப்பிடுதலின் சீராக்கம், பிழைகளும் தவிர்ப்புக்களும் விசேட எடுப்பனவு உரிமை
மொத்த மீதி

**தேர்ச்சி 10** : சர்வதேச வர்த்தகமும் நிதியும் நாட்டில் பேரினப் பொருளாதாரத் திற்கு ஏற்படுத்தும் தாக்கத்தை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 10.6** : வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்களை பொருளாதாரத்திற்கு ஏற்படுத்தும் தாக்கத்தை இலங்கை சென்மதி நிலுவை அட்டவணையின் உதவியுடன் விளக்குவர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :

- மத்திய வங்கி ஆண்டறிக்கையின் உதவியுடன் சென்மதி நிலுவையின் அண்மைக்கால போக்கினை விளக்குவார்.
- சென்மதி நிலுவை அட்டவணையில் வர்த்தக மீதி, நடப்பு மீதி, முழு மொத்த மீதி என்பவற்றின் போக்குகளை ஆய்வு செய்வார்.
- அக்கணக்குகளுக்கு நேர்கணிய மீதிகளை உயர்த்தவும், எதிர் கணிய மீதிகளை குறைக்கவும் கருத்துக்களை முன்வைப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- சென்மதி நிலுவை அட்டவணை ஒன்றின் மொத்தக் கணக்கு மீதி மிகை அல்லது பற்றாக்குறையாக அமைவது சென்மதி நிலுவைச் சமநிலையின்மை என அழைக்கப்படும்.
- மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கைப்படி இலங்கையின் சென்மதி நிலுவையின் அண்மைக்காலப் போக்குகளைப் பரீட்சிக்க முடியும்.
- சென்மதி நிலுவை மிகையொன்றின் பொருளாதார விளைவுகளுக் கான உதாரணம் பின்வருமாறு
- வெளிநாட்டு ஒதுக்குகள் அதிகரித்தல்
- இறக்குமதிகளுக்கான வெளிநாட்டு ஒதுக்கின் போதுமான கால அளவு நீடிக்கும்.
  - பண நிரம்பலின் விரிவாக்கற் தாக்கம் ஏற்படல்
  - பணவீகக்த்துக்கு வழியேற்படல்
  - வெளிநாட்டு நாணயமாற்று விகிதம் உயர்வடைதல்.
  - ஏற்றுமதிப் போட்டித்தன்மை பலவீனமடைதல்.
- சென்மதி நிலுவைப் பற்றாக்குறையொன்றின் பொருளாதார விளைவுகளுக்கான உதாரணங்கள் பின்வருமாறு தரப்படுகின்றன.
  - வெளிநாட்டு ஒதுக்குகள் குறைவடைதல்
  - பண நிரம்பலில் ஒடுக்க விளைவுகள்
  - நாணயமாற்று விகிதம் தேய்வடைதல்
  - பாதுகாப்புவாதக் கொள்கை நோக்கி ஈடுபாடு கொள்ளல்
  - வெளிநாட்டுக் கடன் உயர்வடைதல்

- சென்மதி நிலுவைப் பற்றாக்குறையை நிதியீட்டம் செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகளைப் பின்பற்ற முடியும்.
  உதாரணம்:
  - நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை நிதியீட்டம் செய்வதற்கு மூலதன மற்றும் நிதியியல் கணக்கிலுள்ள வளங்களைப் பயன்படுத்தல்.
  - முழு மொத்தமான பற்றாக்குறையை நிதியீட்டம் செய்வதற்கு நீண்டகால நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
    - இறக்குமதிப் பதிலீடு
    - ஏற்றுமதிப் பன்முகப்படுத்தல்
    - வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக்கொள்ளல்.
    - நாணய மாற்றுவீத மதிப்பிறக்கம்
    - விகித முறைமை

(மத்திய வங்கி வருடாந்த அறிக்கையின்படி இலங்கையின் சென்மதி நிலுவையில் கால அடிப்படையிலான தரவுகள் மற்றும் போக்குகள் தொடர்பாக மாணவர்களை அறிவுறுத்துக.)

**தேர்ச்சி 10** : சர்வதேச வர்த்தகமும் நிதியும் நாட்டில் பேரினப் பொருளாதாரத்திற்கு ஏற்படுத்தும் தாக்கத்தை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 10.7** : வெளிநாட்டு நாயணமாற்று விகிதம் நிர்ணயிக்கப்படல் மற்றும் அதன் விளைவுகளை ஆய்வு செய்வார்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை மற்றும் வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் என்பவற்றை அட்டவணைப்படுத்துவார்.
- வெளிநாட்டு நாணய மாற்று விகிதத்தை வகைப்படுத்தி அவற்றை விளக்குவார்.
- பல்வகை வெளிநாட்டு நாணயமாற்று விகிப் பயன்பாட்டின் மூலம் ஏற்படக்கூடிய பொருளாதார விளைவுகளை விளக்குவார்.
- நாணயமாற்று விகித நாடொன்றின் சென்மதி நிலுவையின் மீது ஏற்படுத்தும் பாதிப்பு எத்தகையது என்பது பற்றி ஆய்வு செய்வார்.
- நாடொன்றினுள் பணத்தின் மதிப்பிறக்கம் மற்றும் மதிப்பேற்றம் ஏற்படும் விதத்தை உதாரணங்களுடன் விளக்குவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- பல்வேறு நாடுகளின் பணம் பரிமாற்றப்படும் சந்தை வெளிநாட்டு செலாவணிச் சந்தையாகும்.
- ஒரு நாட்டின் பண அலகொன்று இன்னொரு நாட்டுப் பண அலகொன்றுடன் பரிமாற்றப்படும் விகிதம் நாணயமாற்று விகிதமாகும்.
- இலங்கையில் ஒவ்வொரு காலப் பகுதியில் பின்வருமாறு பல்வேறு நாணய மாற்று விகிதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
  - நிலையான நாணயமாற்று வீதம்
  - மிதக்கும் நாணய மாற்று வீதம்
  - முகாமை செய்யப்பட்ட மிதக்கும் நாணய மாற்று விகிதம்
- நாணய மதிப்பிறக்கம் மற்றும் மதிப்பேற்றம் என்பன ஏற்படலாம்.
- நாணய பதிப்பிறக்கம் என்பது உள்நாட்டுச் சட்ட முறைப் பண அலகொன்றின் வெளிநாட்டுப் பெறுமதி அல்லது வெளிநாட்டுச் சட்ட முறைப் பணங்களினால் செய்யப்படும் கணிப்பீடுகள் வீழ்ச்சியடைவதாகும்.
- நாணய மதிப்பேற்றம் என்பது மதிப்பிறக்கத்தின் எதிரான செயற்பாடாகும்.
- நாணய மதிப்பிறக்கம் மற்றும் மதிப்பேற்றம் என்பன நிலையான மாற்று விகித முறையின் கீழ் நடைபெறும்.

- நாணயமாற்று வீதத் தேய்வு என்பது நெகிழ்வுள்ள நாணயமாற்று வீதத்தின் கீழ் உள்நாட்டுப் பண அலகொன்றைக் கொள்வனவு செய்வதற்காக செலுத்த வேண்டிய வெளிநாட்டு பண அலகுகளின் தொகை அல்லது வெளிநாட்டுப் பண அலகொன்றைக் குறைவடைவது கொள்வனது செய்வதற்காக செலத்த வேண்டிய உள்நாட்டுப் பண அலகுகளின் தொகை அதிகரிப்பது என்பது.
  உதாரணம்:
  அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை இலங்கை ரூபா. 100 இலிருந்து ரூபா 150 ஆகக் அதிகரித்தல் அல்லது இலங்கை ரூபாவின் கொள்வனவு விலை அமெரிக்க டொலரில் 0.01 இலிருந்து 0.0067 ஆக குறைவடைதல்.
- நாணய மாற்று வீத பெறுமதி அதிகரித்தல் என்பது நாணய மாற்று வீத தேய்வுக்கு எதிரான செய்றபாடாகும்.
  உதாரணம்:
  அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை இலங்கை ரூபா. 150 இலிருந்து ரூபா 100 ஆகக் குறைவடைவது அல்லது இலங்கை ரூபாவின் கொள்வனவு விலை அமெரிக்க டொலரில் 0.0067 இலிருந்து 0.01 ஆக உயர்வடைதல்.
- ஒவ்வொரு நாட்டினதும் உள்நாட்டுப் பணவீக்க விகிதம் நாணய மாற்று வீதத்தில் குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தும் என்பது.
- பெயரளவு நாணய மாற்றுவீதம் என்பது ஒவ்வொரு வெளிநாட்டு நாணய வகைகளுடன் உள்நாட்டு சட்டமுறைப் பணத்தின் பரிமாற்று வீதத்தை வேறு வேறாகக் குறிப்பிட்டு அதன்படி பணத்தின் வெளிநாட்டுப் பெறுமதி மாற்றத்தை அளவிட்டுக் காட்டுவதாகும்.
- நாடுகளிடையேயான பண அலகுகளின் அடிப்படையில் செய்யப் படும் வர்த்தகத்தின் சார்பளவான பெறுமதியைக் கருத்திற்கொண்டு நிறையிடப்பட்டுத் தயாரிக்கப்படும் நாணய மாற்று வீதம் பெயரளவுப் பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதமாகும்.
- மெய்ப் பயனுறுதி வாய்ந்த நாணய மாற்று வீதம் என்பது அவ்வாறு நிறையிடப்பட்டுத் தயாரிக்கப்பட்ட நாணயமாற்று விகிதத்திலிருந்து பணவீக்க வீதத்தை நீக்கித் தயாரிக்கப்பட்ட நாணயமாற்று வீதமாகும்.
- மெய்யான நாணய மாற்று வீதம் உயர்வடைவதனால் காட்டப்படுவது நாணய மாற்று வீத மிகை மதிப்பீடு ஆகும்.
- நாணய மாற்று வீதத்தின் பெறுமதி குறைவடைவதற்கு இடமளிப்பதனால் வர்த்தக மீதி மற்றும் நடைமுறைக் கணக்கினை சாதகமாக்கிக்கொள்ள முடியும்.

**தேர்ச்சி 10** : சர்வதேச வர்த்தகமும் நிதியும் நாட்டில் பேரினப் பொருளாதாரத் திற்கு ஏற்படுத்தும் தாக்கத்தை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 10.8** : வெளிநாட்டு முதலீடு ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தை விளக்குவார்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- வெளிநாட்டு முதலீட்டை வரைவிலக்கணப்படுத்தி வகைப் படுத்துவார்.
- வெளிநாட்டு முதலீடுகளின் சாதகமான மாற்றும் பாதுகமான பொருளாதார விளைவுகளை விபரிப்பார்.
- வெளிநாட்டு முதலீடு அதிகரிப்பது வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரிப்பதற்குக் காரணமாகும் விதத்தை இலங்கையின் புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- ஒரு நாட்டின் நிறுவனமொன்று அல்லது தனிநபர் வேறொரு நாட்டின் நிதிச் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், புதிய வர்த்தக முயற்சிகளை உருவாக்கல் மற்றும் தற்போது இருக்கின்ற வர்த்தக முயற்சிகளின் பெருமளவான பங்குகளைக் கொள்வனவு செய்தல் வெளிநாட்டு முதலீடு என அழைக்கப்படும்.
- வெளிநாட்டு முதலீடுகள் இரு பிரதான தலைப்புகளின் கீழ் விளக்கப்படுகின்றது.
  - நேரடி முதலீடு
  - பட்டியலிடப்பட்ட முதலீடு
- கைத்தொழிற்சாலைகள், மூலதனப் பொருட்களும், இருப்புக்கள் என்பவற்றின் மீது செய்யப்படும் தேறிய முதலீடு நேரடி முதலீடாகும்.
- நேரடி முதலீட்டின் கீழ் வெளிநாட்டு மூலதனம், முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் என்பன முதலீடு செய்யும் நாட்டை நோக்கிப் பாயும்.
- நேரடி வெளிநாட்டு முதலீட்டின்போது முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் உரிமை வெளிநாட்டு முதலீட்டாளருக்கு உரித் தாகும்.
- பட்டியலிடப்பட்ட முதலீடு என்பது வெளிநாட்டவர்கள் உள்நாட்டுப் பணத்தினால் வெளிப்படுத்தப்படும் நிதிப் பொறுப்புக்கள் மீது முதலீடு செய்வதாகும்.
- பட்டியலிடப்பட்ட முதலீட்டுக்காகப் பயன்படுத்தப்படும் நிதிப் பொறுப்புக்களுக்குப் பங்குகள், கடன் ஹமுறிகள், வர்த்தகப் பத்திரங்கள், திறைசேரி உண்டியல்கள், பிணைகள் மற்றும் திறைசேரி என்பன உதாரணங்களாகும்.

- வெளிநாட்டு முதலீடுகளின் நன்மைகளுக்கான உதாரணங்களைப் பின்வருமாறு காட்டலாம்.
    - வெளிநாட்டுச் செலாவணி நாட்டுக்குள் வரல்
    - வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு தீர்வாக அமைதல்
    - கடன் சுமை அதிகரிக்காமல் இருத்தல்
    - புதிய தொழில்நுட்பம் நாட்டினுள் வருதல்.
    - மூலதனம் நாட்டுக்குள் வருதல்.
    - முகாமைத்துவம் நாட்டுக்குள் வருதல்.
- வெளிநாட்டு முதலீடுகளின் தீமைகளைப் பின்வருமாறு காட்டலாம்.
    - இலாபம் பெருமளவில் வெளிநாடுகளுக்குச் செல்லல்
    - உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பாதக விளைவுகள் ஏற்படல்
    - மூலதன செறிவான உற்பத்தி முறைப் பாவனையால் வேலை வாய்ப்புக்கள் இழக்கப்படல்.
    - இயற்கை வளங்கள் மிகை நுகர்வுக்குட்படல்.
    - உள்நாட்டுக் கைத்தொழில்கள் வீழ்ச்சியடைதல்.
    - அரசுக்கு வரி வருமானம் உரிய முறையில் கிடைக்காது போதல்.
    - உள்நாட்டு முதலீட்டாளருக்குக் கிடைக்கக்கூடிய பணம் வெளிநாட்டு முயற்சிகள் நோக்கித் தள்ளப்படல்.
- வெளிநாட்டுச் சொத்துக்களிடையே சேமிப்பு முக்கியமாகும்.

(மத்திய வங்கி வருடாந்த அறிக்கையின்படி இலங்கையின் வெளிநாட்டு முதலீடுகளின் கால அடிப்படையிலான தரவுகள் மற்றும் போக்குகள் தொடர்பாக மாணவர்களை அறிவுறுத்துக.)

**தேர்ச்சி 10** : சர்வதேச வர்த்தகமும் நிதியும் நாட்டில் பேரினப் பொருளாதாரத்திற்கு ஏற்படுத்தும் தாக்கத்தை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 10.9** : சர்வதேச பொருளாதார ஒத்துழைப்புக்காகச் செயற்படுகின்ற பல்வேறு பொருளாதார ஒழுங்கமைப்புக்கள் பற்றி விளக்குவர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- பொருளாதார ஒருங்கிணைப்புகளின் நோக்ங்களை விளக்குவார்.
- பொருளாதார ஒருங்கிணைப்புக்களின் பல்வேறு நிலைமைகளையும் உதாரணங்களுடன் விளக்குவார்.
- பல்வேறு பொருளாதார ஒருங்கிணைப்புகளிலும் காணப்படும் சிறப்பம்சங்களை முன்வைப்பார்.
- இலங்கையுடன் தொடர்பான வர்த்தக ஒப்பந்தங்களை உதாரணங்களுடன் விளக்குவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- ஒரே நாட்டின் பல்வேறு குழுவினரிடையே அல்லது சர்வதேச குழுவினரிடையே தீர்வை வரி மற்றும் தீர்வை வரியல்லாத காரணிகள் எதுவும் இல்லாது பொருட்கள், சேவைக்ள மற்றும் உற்பத்திக் காரணிகள் பரிமாற்றப்படும் செயன்முறை ஒருங்கிணைப்பு என்பதாகும்.
- பொருளாதார ஒருங்கிணைப்பின் நோக்கங்களைப் பின்வருமாறு காட்டலாம்.
    - நாடுகளிடையே விலை வேறுபாடுகளை நீக்கி ஒரே விலையை ஏற்படுத்தல்.
    - போட்டித்தன்மையை அதிகரிப்பதன் மூலம் நுகர்வோருக்குக் குறைந்த விலையில் பொருட்களைப் பெற்றுக்கொடுத்தல்.
    - உலக வர்த்தகத்தை விரிவாக்குதவன் மூலம் நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல்.
    - வினைத்திறனுள்ள உற்பத்திக் கட்டமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் உயர்வான பொருளாதார பிரதி பலன்களை உழைத்தல்.
    - உலக மக்களின் நலன்களை அதிகரிக்கச் செய்தல்.
    - பல்பக்க வர்த்தக பங்காளர்களுடன் பேரம் பேசுதல்.
    - உலகமயமாதல் செயற்பாட்டின்போது சர்வதேசப் போட்டி நிலையைப் பாதுகாத்தல்.
    - மக்களிடையே அரசியற் தொடர்புகளை விருத்தி அடையச் செய்தல்.

- பொருளாதார ஒருங்கிணைப்பின் பல்வேறு கட்டங்களைக் பின்வருமாறு வகையில் வகைப்படுத்த முடியும்.
    - முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் (PTA)
    - சுதந்திர வர்த்தகப் பிரதேசம் (FTA)
    - சுங்கச் சங்கம் (CU)
    - பொதுச் சந்தை (CM)
    - பொருளாதார மற்றும் நிதிச் சங்கம் (EU & FM)
    - முழுமையான பொருளாதார ஒருங்கிணைப்பு (FI)
- அங்கத்தவரல்லாத நாடுகளிடையே வர்த்தகத்தின்போது பயன்படுத்துகின்ற வர்த்தகத் தடைகளை விடக் குறைந்த தடைகளின் கீழ் அங்கத்துவ நாடுகளிடையே பொருட்கள், சேவைகளைப் பரிமாற்றிக் கொள்வதற்காக நாடுகள் ஒன்று சேர்ந்து ஏற்படுத்திக் கொள்ளும் ஒருங்கிணைப்பு முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் என அழைக்கப்படும்.
- முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தங்களுக்கு உதாரணங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.
    - ஐரோப்பிய பொருளாதார ஒப்பந்தம்
    - இந்திய - ஆப்கானிஸ்தான் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம்
    - வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்
- அங்கத்துவ நாடுகள் அங்கத்துவமல்லாத நாடுகளுடன் வர்த்தகத்தில் ஈடுபடும்போது அவ்வந்நாடுகளின் விருப்பப்படி வர்த்தக தடைகளைப் பேணிச் செல்வதற்கும் அங்கத்துவ நாடுகளுடன் செய்யப்படும் வர்த்தகத்தை தடைகள் இல்லாமல் பேணிச் செல்வதற்கும் சில நாடுகள் ஒன்றிணைந்து ஏற்படுத்திக் கொள்ளும் ஒழுங்கமைப்பு சுதந்திர வர்த்தகப் பிரதேசமாகும்.
- சுதந்திர வர்த்தகப் பிரதேசங்களுக்கு உதாரணங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.
    - ஆபிரிக்க சுதந்திர வர்த்தகப் பிரதேசம் (AFAA)
    - ஆசிய - பசுபிக் சுதநிர வர்த்தகப் பிரதேசம் (AFTA)
    - மத்திய ஐரோப்பிய சுதந்திர வர்த்தகப் பிரதேசம் (CEFTA)
    - வட அமெரிக்க சுதந்திர வர்த்தகப் பிரதேசம் (NAFTA)
- அங்கத்துவ நாடுகளிடையேயான வர்த்தகத்தை தடைகள் இல்லாமல் பேணுவதும் அங்கத்துவ நாடுகள் அங்கத்துவ நாடு அல்லாத நாடுகளுடன் வர்த்தகத்தின்போது ஒரேவிதமான வர்த்தகக் கொள்கையொன்றைப் பேணிச் செல்வதற்காக சில நாடுகள் ஒன்றிணைந்து செயற்படுவது சுங்கச் சங்கம் என அழைக்கப்படும்.
- சுங்கச் சங்கத்துக்கான உதாரணங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.
    - மத்திய அமெரிக்க பொதுச் சந்தை
    - அன்டீஸ் சமூகம்
    - கரிபியன் சமூகம்
    - வட அமெரிக்க சமூகம்

- அங்கத்துவ நாடுகளிடையே பொருட்கள், சேவைகளுக்கான வர்த்தகம் தடைகள் இன்றி நடைபெறுவதற்கும் அங்கத்துவ நாடுகள் அங்கத்துவமில்லாத நாடுகளுடன் வர்த்தகம் செய்யும் போது பொதுவான கொள்கையொன்றைப் பின்பற்றுவதற்கும் அங்கத்துவ நாடுகளிடையே உற்பத்திக் காரணிகள் தடையின்றி அசைவதற்கும் நாடுகள் ஒன்றிணைவது பொதுச் சந்தை என அழைக்கப்படும்.
- பொதுச் சந்தைக்காகக் கீழே தரப்படும் உதாணரங்களை முன்வைக்கலாம்.
    - கரிபியன் சமூக பொதுச் சந்தை (CARICOM)
    - மத்திய அமெரிக்க பொதுச் சந்தை (CACM)
    - மத்திய ஆபிரிக்க பொருளாதார மற்றும் நதிச் சமூகம்(CEMAL)
- அங்கத்துவ நாடுகளிடையே வர்த்தகத்தைத் தடையின்றி மேற்கொள்வதற்கும் அங்கத்துவ நாடுகள், அங்கத்துவமில்லாத நாடுகளுடன் பொருட்கள் மற்றும் சேவை வர்த்தகத்தைப் பொதுக் கொள்கையொன்றின் கீழ் மேற்கொள்வதற்கும் அங்கத்துவ நாடுகளிடையே உழைப்பும் மூலதனமும் சுதந்திரமாக அசைவதற்கும் அங்கத்துவ நாடுகளிடையே ஒரேவிதமான நிதிக் கொள்கை மற்றும் இறைக் கொள்கையொன்றைச் செயற்படுத்துவதற்கும் சில நாடுகள் ஒன்றிணைவது பொருளாதார மற்றும் நாணயச் சங்கம் என அழைக்கப்படும்.
- பொருளாதார மற்றும் நிதிச் சங்கங்களுக்கான உதாரணங்கள் கீழ்வருமாறு காட்டப்படலாம்.
    - மத்திய ஆபிரிக்க பொருளாதார நிதிச்சங்கம்
    - மேற்கு ஆபிரிக்க பொருளாதார நிதிச்சங்கம்
    - ஐரோப்பிய நாணய மற்றும் பொருளாதார சங்கம்
- அங்கத்துவ நாடுகளிடையே மற்றும் அங்கத்துவமில்லாத நாடுகளிடையே பொருட்கள், சேவைகளின் பரிமாற்றத்தை தடையின்றி மேற்கொள்வதற்கும் உற்பத்திக் காரணிகளின் பரிமாற்றத்தைத் தடையின்றி மேற்கொள்வதற்கும் அங்கத்துவ நாடுகளிடையே ஒரே விதமான நிதிக் கொள்கை, இறைக் கொள்கை, சட்டவாக்க, நிர்வாக, நீதி மற்றும் அரசயில் கொள்கைகளைப் பேணுவதற்கும் நாடுகள் ஒன்றிணைவது முழுமையான ஒருங்கிணைப்பாகக் கருதப்படும்.
- பொருளாதார ஒருங்கிணைப்பின் குறிப்பிட்ட ஒரு கட்டமாக நாடுகள் வர்த்தக ஒப்பந்தங்களுள் பிரவேசிக்கின்றன.
- வர்த்தக ஒப்பந்தங்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்படலாம்.
    - இருபக்க வர்த்தக ஒப்பந்தம்
    - பல்பக்க வர்த்தக ஒப்பந்தம்
- இரண்டு நாடுக்ள மூலம் வர்த்தகம் மற்றும் நிதி நடவடிக்கைள் தொடர்பாக ஏற்படுத்திக் கொள்ளப்படும் ஒப்பந்தம் இருபக்க வர்த்தக ஒப்பந்தமாகும்.

- பின்வரும் இருபக்க வர்த்தக ஒப்பந்தங்களில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது.
    - இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்
    - இலங்கை - பாகிஸ்தான் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்
- இலங்கையும் இந்தியாவும் இணைந்து 1998.12.28ஆம் திகதி இந்திய - இலங்கை வர்த்தக ஒப்பந்ததில் கைச்சாத்திட்டதுடன் 2000.03.31ஆம் திகதி முதல் அது செயற்படுகின்றது.
- இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் நோக்கம் பின்வருமாறு.
    - சகவாழ்வுப் பொருளாதார ஒழுங்கொன்றைப் பேணிக் கொண்டு இரு நாடுகளுக்கிடையிலான பொருளாதார ஒத்துழைப்பை விருத்தி செய்தல்.
    - இரு நாடுகளுக்கிடையிலான வியாபார நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்காக போட்டித்தன்மையை அர்த்தமுடைய தாக்குவதற்காக நியாயமான நிபந்தனைகளை விதித்தல்.
    - வர்த்தக நடவடிக்கைகளின்போது அந்நியோன்யப் பொறுப்புக் களைப் பாதுகாத்துக் கொள்ளல்.
    - வலயத்தின் வர்த்தக நடவடிக்கைகளில் காணப்படுகின்ற தடைகளை நீக்குவதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்தல்.
- இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் மூலும் இலங்கைக்குக் கிடைக்கும் நன்மைகளுக்கான பின்வருமாறு
    - பாரிய சந்தையொன்று கிடைத்தல்.
    - போக்குவரத்துச் செலவு குறைதல்
    - உள்நாட்டுச் சந்தையில் நுகர்வுப் பொருட்களின் விலை குறைதல்.
    - சுதந்திரமான வர்த்தகத்தின் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருத்தல்.
    - உள்நாட்டு உற்பத்திக்கும் பாதுகாப்புக் கிடைத்தல்.
    - வெளிநாட்டு முதலீடுகள் பெருமளவு இலங்கைக்குள் வரல்.
    - வெளிநாட்டுச் சவால்களுக்கு தைரியமாக முகங்கொடுக்கக் கூடியதாக இருத்தல்.
    - இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் புதிய கைத்தொழில் பண்டங்களை குறைந்த விலையில் பெறக்கூடியதாக இருத்தல்.
- பாக்கிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் 2002.08.01ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டதுடன் 2005 பெப்ரவரி 09ஆம் திகதியின் பின்பு செயற்படுகின்றது.
- பாகிஸ்தான் - இலங்கை வர்த்தக ஒப்பந்தத்தின் நோக்கங்கள் பின்வருமாறு
    - பொருட்களின் வர்த்தகத்தை விரிவுபடுத்துவதன் மூலம் பாக்கிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார தொடர்புகளை விருத்தி செய்தல்.

    - இரு நாடுகளினதும் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.
    - இருபக்க வர்த்தகத்தையும் உலக வர்த்தகத்தையும் வளர்ச்சியடையச் செய்வதற்கு மற்றும் விரிவுபடுத்துவதற்கும் பங்களிப்புச் செய்தல்.
- பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் இலங்கைக்குக் கிடைக்கும் நன்மைகள் பின்வருமாறு
    - பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்குத் தீர்வை வரிகள் இல்லாது பொருட்கள் இறக்குமதி செய்யலாம்.
    - இலங்கையினுள் இறக்குமதிப் பண்டங்களின் விலைகள் வீழ்ச்சியடைதல்.
    - ஏற்றுமதிப் பன்முகப்படுத்தலுக்கு சந்தர்ப்பம் ஏற்படல்.
    - மூலப் பொருட்களைக் குறைந்த விலையில் பெறக்கூடியதாக இருத்தல்.
    - உள்நாட்டு குழந்தைப்பருவக் கைத்தொழில்கள் வேகமாக முதிர்ச்சி நிலை அடைவதற்குக் காரணமாதல்.
    - முதலீடுகள் மற்றும் வேலைவாய்ப்புக்கான வாய்ப்புக்கள் விரிவடைதல்.
- பல்பக்க வர்த்தக ஒப்பந்தங்களுக்கான உதாரணங்கள் பின்வருமாறு
    - பொதுத் துறைகள் தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா நாடுகளின் (BIMSTEC)
    - தென்னாசிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (SAFTA)
    - ஆசிய - பசுபிக் சுதநிர வர்த்தகப் ஒப்நதம் (APTA)
    - வட அமெரிக்க சுதந்திர வர்த்தகப் ஒப்பந்தம்ம் (NAFTA)
- வங்காள தேசம், இந்தியா, மியன்மார், இலங்கை, தாய்லாந்து, நேபாளம் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகள் பொது, துகைள் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா (BIMSTEC) இன் அங்கத்துவ நாடுகள்.
- BIMSTEC இல் கூடுதலான முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய துறைகள் பல இனங்காணப்பட்டுள்ளதுடன் அவையாவன
    - வியாபாரம், முதலீடு
    - தொழில்நுட்பம்
    - போக்குவரத்தும் தொடர்பாடலும்
    - வலுச் சக்தி
    - சுற்றுலாக் கைத்தொழில்
    - நீரியல் வளங்கள்

- 1995ஆம் ஆண்டில் பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுக்ள ஒன்றிணைந்து தென் ஆசியா வலய ஒத்துழைப்புச் சங்கம் அல்லது சார்க் அமைப்பை உருவாக்கின.
- சார்க் அமைப்பின் நாடுகள் மூலம் தென்னாசிய முன்னுரிமை வர்த்தக ஒப்பநதம் (SAFTA - South Asian Prferential Trade Agreement) 1995 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- சார்க் அமைப்பு நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்காகவும் வர்த்தகத்தை விருத்தி செய்து கொள்வதற்காகவும் 2001ஆம் ஆண்டில் தென்னாசிய சுதந்திர வர்த்தகச் சங்கம் (SAFTA - South Asian Free Trade Association) ஆரம்பிக்கப்பட்டது என்பது.
- தென்னாசிய சுதந்திர வர்த்தக சங்கத்தின் நோக்கங்கள் பின்வருமாறு
    - வர்தகத் தடைகளை நீக்குதலும் நாடுகளின் எல்லைகளுக் கூடாக நடைபெறும் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதிகளை வழங்குதல்
    - அங்கத்துவ நாடுகளின் பொருளாதார மட்டம் மற்றும் அவற்றின் பொருளாதார அபிவிருத்தி ஒழுங்குமுறை என்பவற்றைக் கருத்திற்கொண்டு சுதந்திரமானதும் நியாயமானதுமான வர்த்தகமொன்றை உருவாக்குவதற்கும் வர்த்தகத்தின் நன்மைகளை சமனான முறையில் அந்நாடுகளிடையே பகிர்ந்தளிப்பதற்கும் வழி செய்தல்.
    - ஒப்பந்ததைச் செயற்படுத்தல், அதன் நடவடிக்கைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் பிரச்சினைகளை ஏற்படின் தீர்த்தலுக்காக விளைதிறனுள்ள பொறிமுறையொன்றை உருவாக்கல்.
    - ஒப்பந்தத்தின் நலன்களை எதிர்காலத்தில் விரிவடையச் செய்வதற்கும் அதிகரிப்பதற்கும் அவசியமான பிராந்திய ஒத்துழைப்பு வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குதல்.
- தென் ஆசியா சுதந்திர வர்த்தக சங்கத்தின் ஒப்பந்தம் கீழே தரப்படும் ஆறு கருவிகளின் அடிப்படையிலும் ஆகும்.
    - கட்டில்லா வர்த்தக வேலைத்திட்டம்
    - நிறுவன ரீதியான வேலைத்திட்டம்
    - வழிகாட்டலும் பிரச்சினை தீர்க்கும் பொறிமுறையும்
    - பாதுகாப்பு நடவடிக்கை ஒழுங்குகள்
    - ஒப்பந்தம் செய்யப்பட்ட வேறு கருவிகள்
- தென் ஆசிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளுக்கான உதாரணங்கள்:
    - பிராந்தியத்தினுள் அரசியல் ஒருமைப்பாடு குறைவடைதல்.
    - அங்கத்துவ நாடுகள் பெருமளவுக்கு ஒரே வகையான பண்டங்களை உற்பத்தி செய்தல்.

- நிர்வாக மற்றும் அரசியல்
- பிராந்திய நாடுகளிடையே உயர்ந்த தீர்வை வரி விகிதம் காணப்படல்.

- அமெரிக்க ஐக்கிய குடியரசு, கனடா, மெக்சிக்கோ ஆகிய நாடுக்ள ஒன்றிணைந்து வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (NAFTA - North American Free Trade Agreement) 1993ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டதுடன் 1994.01.01 முதல் நடைமுறைப்படுத்தப் பட்டது.
- வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் நோக்கங்கள்:
  - தீர்வை மற்றும் தீர்வையல்லாத தடைகளை நீக்குதல்.
  - ஒப்பந்தத்துடன் தொடர்புடைய நாடுகளிடையே முதலீடுகள் செய்வதற்குரிய தடைகளை நீக்குதல்.
  - பிராந்தியத்தினுள் வர்த்தகத்தை விருத்தி பெறச் செய்தல்.
  - ஒப்பந்தத்துடன் தொடர்புடைய நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பை விருத்தி அடையச் செய்தல்.
- முழு வட அமெரிக்காவினுள்ளும் பொருட்கள், சேவை வர்த்தகம் முழுமையாக சுதந்திரமாக நடைபெறுவதற்கு இவ்வொப்பந்தம் காரணமாகியதுடன் அதனால் பொருட்களின் விலை குறை வடைதல் மற்றும் ஒப்பந்தத்துக்குட்பட்ட நாடுகளின் வர்த்தகம் இருமடங்காதல்.
- ஆசிய - பசுபிக் பிராந்தியத்துக்குட்பட்ட 18 நாடுகள் ஒன்றிணைந்து ஆசிய - பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு (APEC - Asian Pacific Economic Co-operation) 1993ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.
- யப்பான், சீனா, தென்கொரியா, தாய்லாந்து, இந்தோனீசியா, பிலிப்பைன்ஸ், புரூனை, பப்புவா நியுகினி, சிலி, அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்க ஐக்கிய குடியரசு, மெக்சிகோ, நியுசிலாந்து ரோன்ற நாடுகள் ஆசிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பின் அங்கத்துவம் வகிக்கின்றது.
- ஆசிய பசுவிக் பொருளாதார ஒத்துழைப்பின் இரண்டாவது சம்மேளனத்தின் போது இணங்கிக்கொண்டபடி அதன் செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள்.
  - பூரண கட்டில்லா வர்த்தக வலயங்களை உருவாக்கல்.
  - சுங்க நடவடிக்கைகளை முறைமைப்படுத்தலும் தளர்த்தலும்
  - கம்பியூட்டர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வர்த்தகத்தை சுதந்திரமானதாக அமைத்தல்.
  - வறிய மக்களுக்கான நலன்புரி நடவடிக்கைகளை உயர் மட்டத்துக்குக் கொண்டு வரல்.

**தேர்ச்சி 10** : சர்வதேச வர்த்தகமும் நிதியும் நாட்டில் பேரினப் பொருளாதாரத்திற்கு ஏற்படுத்தும் தாக்கத்தை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 10.10** சர்வதேச நிதி நிறுவனங்களின் நடவடிக்கைகளை விபரிப்பர்.

**பாடவேளை** : 05

**கற்றற் பேறுகள்** :
- சர்வதேச நிதி நிறுவனங்களைப் பெயரிடுவார்.
- சர்வதேச நிதி நிறுவனங்களின் நடவடிக்கைகளை விபரிப்பார்.
- சர்வதேச நிதி நிறுவனங்களிலிருந்து இலங்கைக்குக் கிடைக்கும் சேவைகளைப் பட்டியற்படுத்துவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- அங்கத்துவ நாடுகளின் நிதிப்பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக குறுங்காலக் கடன் வழங்குதலை அடிப்படையாகக் கொண்டு 1947 ஜனவரி மாதம் சர்வதெச நாணய நிதி (IMF) உருவாக்கப் பட்டது
- சர்வதேச நாணய நிதியின் தலைமை அலுவலகம் ஐக்கிய அமெரிக்க குடியரசின் வாசிங்டன் நகரில் அமைந்துள்ளதுடன் அதன் ஆரம்ப அங்கத்துவ நாடுகள் 28ஆக இருந்த போதிலும் நிகழ்காலத்தில் 184 நாடுகள் அதில் அங்கத்துவம் வகிக்கின்றன.
- சர்வதேச நாணய நிதிக்குரிய மூலதனம் அங்கத்துவ நாடுகளுக்கு நிதிப் பங்குகளை வெளியிடுவதன் மூலம் பெறப்பட்டதுடன் சர்வதேச நாணயத்தில் அங்கம் வகிக்க வேண்டியதன் நிதிப் பங்கு ஒன்றை அல்லது சிலவற்றை குறிப்பிட்ட நாடு வழங்க வேண்டும்.
- குறிப்பிட்ட அங்கத்துவ நாட்டுக்குக் கிடைக்கும் நிதியப் பங்கு அந்நாட்டின் பொருளாதார முக்கியத்துவம் மற்றும் சர்வதேச வர்த்தகத்துக்கு அந்நாடு பங்களிக்கின்ற அளவுக்கேற்ப தீர்மானிக்கப்படுகின்றது.
- ஒவ்வொரு நாட்டுக்கும் உரித்தான பங்கின் அளவு அடிப்படையில் அவ்வந்நாட்டுக்கு கிடைக்கும் வாக்குரிமையும் பெற்றுக் கொள்ளக்கூடிய கடனளவு தீர்மானிக்கப்படுகின்றது.
- 1947ஆம் ஆண்டு இறுதியில் சர்வதேச நாணய நிதியின் மூலதனம் 8.8 ஐக்கிய அமெரிக்க டொலராக இருந்ததுடன் அதில் கூடுதலான நிதியப் பங்குகளினை ஐக்கிய அமெரிக்கா பெற்றிருந்தது.
- அங்கத்துவ நாடுகளுக்குரிய நிதியப் பங்குகளில் 25% தங்கத்தினாலும் மீதி அந்நாட்டு உள்நாட்டுப் பணத்தினாலும் செலுத்த முடியும்.

- சர்வதேச நாணய நிதியிடம் கடன் பெறும் போது அக்கடனுக்குச் சமமான பெறுமதியுடைய உள்நாட்டுப் பணம் சர்வதேச நாணய நிதியின் வைப்புச் செய்யப்பட வேண்டுமென்பதுடன் சர்வதேச நாணய நிதி அனுமதித்த பணத்தின் மூலம் குறிப்பிட்ட கடன் வழங்கப்படும்.
- சர்வதேச நாணய நிதியிடம் பெற்ற கடன்கள் 3 தொடக்கம் 5 வருடம் வரையான காலப்பகுதியினுள் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் அக்கடன் மீளச் செலுத்த வேண்டியது அனுமதிக்கப் பட்ட பணத்தின் மூலமாகும்.
- சர்வதேச நாணய நிதியின் நோக்கங்கள்:
    - சர்வதேச நிதிப் பிரச்சினைகளின்போது ஒத்துழைப்புடன் வேலை செய்தல் மற்றும் வழிகாட்டல் சேவைகளை வழங்குவதற்கான நிரந்தரமான நிறுவனம் ஒன்றின் மூலம் சர்வதேச நிதி ஒத்துழைப்பை விருத்தி செய்தல்.
    - சர்வதேச வர்த்தகத்தின் சமநிலை வளர்ச்சிக்கும் பரம்பலுக்கும் அவசியப்படும் உதவியைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் உயர்வான வேலை வாய்ப்பு உயர்வான மெய் வருமானம் என்பவற்றைப் பேணிச் செல்வதற்கு அவசியமான உதவிகளைச் செய்தல்.
    - நாணயமாற்று வீதங்களில் நிலையான தன்மையை ஏற்படுத்தல்.
    - நடைமுறைக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக பல்பக்க கொடுப்பனவு முறையொன்றை ஏற்படுத்துவதற்காக உதவி செய்தலும் அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகளை இல்லாமலாக்குதல்.
    - அங்கத்துவ நாடுகளின் விசுவாசத்தை உறுதிப்படுத்துவற்காக நிதி வழங்குதல் மற்றும் சென்மதி நிலுவையின் பாதகமான சீராக்கல்களைச் சரிப்படுத்திக் கொள்வதற்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுத்தல்.
    - அங்கத்துவ நாடுகளின் சென்மதி நிலுவை சமநிலையின்மைகளைக் குறைப்பதற்காக சென்மதி நிலுவைச் சமநிலை காணப்படும் காலத்தைக் குறைத்தல்.
- சர்வதேச நாணய நிதி கீழ்த்தரப்படும் கடன் வகைகளை வழங்குகிறது என்பது.
    - நீடிப்புச் செய்யப்பட்ட நிதி வசதிகள் (Extended Fund Facilition)
    - கட்டமைப்புச் சீராக்கல் வசதிகள் (Structural Adjustment Facilition)
    - விரிவுபடுத்தப்பட்ட கட்டமைப்புச் சீராக்கல் வசதிகள் (Extended Structural Adjustment Facilition)
    - நட்டஈடு (Compensatory and contengency financial facilities)
    - இருப்பு நிதி வசதி (Buffer stock financing facilities)
    - எண்ணெய்க் கடன் வசதி (Oil loan facilities)
    - முறையான வசதிகள் (Systematic Transformation Facilition)

- ஐக்கிய அமெரிக்க குடியரசு மற்றும் பிரித்தானியா உட்பட மேலும் 42 நாடுகளின் பங்குபற்றலுடன் அமெரிக்காவில் பிரெட்டன்ஸ்வூட் நகரில் 1944ஆம் ஆண்டு ஜுலை மாதம் நடைபெற்ற பிரெட்டன்வூட்ஸ் அட் மகா நாட்டின் பெறுபேறாக 1947.03.01ஆம் திகதி உலக வங்கி (WBG) அமைக்கப்பட்டது.
- இரண்டாம் உலக யுத்தத்தினால் அழிவுக்குட்பட்ட நாடுகளின் மறுசீரமைப்பு மற்றும் அத்தகைய யுத்தமொன்று மீண்டும் ஏற்படுவதைத் தவிர்த்தல் பொருளாதார புணர்வாழ்வு போன்ற நோக்கங்களை அடைந்து கௌள்வதற்காக ஐக்கிய நாடுகளின் நிதி மற்றும் நிதியியல் நடவடிக்கை மகாநாட்டினால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்குமைய உலக வங்கி தாபிக்கப்பட்டது.
- உலக வங்கியின் பிரதான நோக்கம் அங்கத்துவ நாடுகளுக்கு நீண்டகால அபிவிருத்திக்காக உதவி வழங்குகிறது.
- மறுசீரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி (IBRD) அல்லது உலக வங்கியின் ஆரம்ப அங்கத்துவ நாடுகள் 28 ஆகும். 2004ஆம் ஆண்டு இறுதியில் அங்கத்துவ நாடுகளின் தொகை 177 ஆகும்.
- உலக வங்கிக்கு நிதி வழங்கியிருப்பது அதன் அங்கத்துவ நாடுகளாகும்.
- சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (Internationa Finace co-operation - IFC) மற்றும் சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (International Development Association - IDA)) உலக வங்கியின் உப நிறுவனங்கள் இரண்டாகும் என்பதுடன் இந்நிறுவனங்கள் உலக வங்கிக்குழுமம் என (World Bank Group) அழைக்கப்படுகிறது என்பது.
- உலக வங்கியின் அடிப்படை நோக்கங்கள்:
    - அங்கத்துவ நாடுகளின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக மூலதன வசதி செய்துகொடுத்தல் மூலம் அவற்றின் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்தல்.
    - இலகுவான நிபந்தனைகளின் கீழ் வெளிநாட்டு முதலீடு அங்கத்துவ நாடுகளுக்குக் கிடைக்காதபோத வெளிநாட்டுத் தனியார் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக வசதிகளையும் சந்தர்ப்பங்களை யும் ஏற்படுத்தல்.
    - தனியார் முதலீடுகளுக்கு மேலதிகமாக வங்கியின் நிதியையும் வேறு வழிகளிலிருந்து கிடைக்கின்ற நிதிகளையும் பயன்படுத்தி அங்கத்துவ நாடுகளுக்கு விளைதிறனுள்ள உற்பத்தி நடவடிக்கைகளுக்காக நீண்டகாலக்கடன் வழங்கல்.
    - அங்கத்துவ நாடுகளுக்கு கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை சேவைகளைப் பெற்றுக்கொடுத்தல்.
    - அங்கத்துவ நாடுகளின் உற்பத்தி வளங்களை விருத்தி செய்து கொள்வதற்காக சர்வதேச முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலம் சர்வதேச வர்த்தகத்தின் சமநிலை வளர்ச்சியை ஏற்படுத்தல்.

- இலங்கைக்கு உலக வங்கியினால் கிடைக்கும் சேவைகளுக்குப் பின்வருமாறு உதாரணங்கள் காட்டலாம்.
    - அவசியப்படும் வெளிநாட்டுச் செலாவணியை சலுகை அடிப்படையிலான நிபந்தனைகளின் கீழ் கடனாக வழங்குதல்.
    - தொழில்நுட்பம், உற்பத்திமுறை மற்றும் கைத்தொழில் அறிவு போன்றவற்றை விருத்தி செய்துகொள்வதற்காக அனுசரணை வழங்குதல்.
    - வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான ஒத்துழைப்பு வழங்குதல்.
    - அபிவிருத்தியை வேகப்படுத்துவதற்கு அவசியமான செயற்றிட்டங்களைத் திட்டமிடுவதற்கும் அவற்றின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கும் உலக வங்கி அறிஞர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொடுத்தல்.
    - உலகமயமாதல் பணப் பாதைக்குள் பிரவேசிப்பதற்காக அவசியமான ஒத்துழைப்பு வழங்கல்.
    - உலக சந்தையில் முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற பாதகமான நிலைமைய சீர்ப்படுத்துவதற்கு அவசியமான உதவிகளை வழங்குதல்.
    - உலக மக்களுடன் நல்ல தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக உதவி வழங்கல்.
    - கட்டமைப்பு ரீதியான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற் காக அவசியமான சிறப்பறிவினைப் பெற்றுக் கொடுத்தல்.
    - புதிய பொருளாதாரக் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்கு அவசியமான ஒத்துழைப்பு வழங்கல்.
- இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற் காக உலக வங்கியின் மூலம் நீண்டகால கடன் வழங்கப்பட்ட பிரதான துறைகளுக்கான உதாரணங்கள்:
    - விவசாயம் மற்றும் கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்
    - வலுச்சக்தி செயற்திட்டம்
    - கல்வி
    - கைத்தொழில் துறை
    - சுகாதாரமும் போசணையும்
    - போக்குவரத்து
    - சிறிய மற்றும் நடுத்தர அளவான முயற்சிகள்
    - நகர அபிவிருத்தி
    - நீர் வழங்கல்
    - வடக்கு கிழக்கு இடம்பெயர்ந்தவர்களை மீண்டும் எழச் செய்தல்.

**தேர்ச்சி 10** : சர்வதேச வர்த்தகமும் நிதியும் நாட்டில் பேரினப் பொருளாதாரத் திற்கு ஏற்படுத்தும் தாக்கத்தை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 10.11:** அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு உலகமயமாதலால் ஏற்படும் தாக்கங்களை விளக்குவர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- உலக மயமாக்கலை விரைவிலக்கணப்படுத்துவார்.
- உலகமயமாதலின் பிரதான பண்புகளை முன்வைப்பார்.
- உலக மயமாதலின் சக்திகளை விபரிப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- வெளிநாட்டு வர்த்தகம், வெளிநாட்டு முதலீடு மற்றும் வெளிநாட்டுத் தொழில்நுட்பம் ஆகிய விடயங்கள் மூலம் நாடுகள் உலகப் பொருளாதாரத்துடன் ஒன்றிணைதல் மற்றும் பொருளாதாரம் திறந்து விடப்படல் உலகமயமாதல் என அழைக்கப்படும்.
- உலகமயமாதலின் அடிப்படை அம்சங்கள்:
  - புதிய சந்தைகள் உருவாதல்.
  - புதிய கருவிகள் உருவாதல்.
  - புதிய உலக நிறுவனங்களும் அமைப்புக்களும் உருவாதல்.
  - புதிய சட்டதிட்டங்கள் உருவாதல்.
- உலகமயமாதல் மூலம் உலக பொருளாதாரத்தில் ஒன்றிலொன்று தங்கியிருக்கும் நிலை ஏற்படும்.
- உலக மயமாதல் மூலம் வர்த்தக மற்றும் நிதிப் பாய்ச்சல்களில் வளர்ச்சி ஏற்படும்.
- உலகமயமாதல் மூலம் உற்பத்திச் செயற்பாடு சர்வதேச மயமாக்கப்படுகின்றது.
- உலகமயமாதல் மூலம் உழைப்பு சர்வதேச ரீதியாக அசைவுக்கு உட்படுகின்றது.
- வரலாற்றுச் செயற்பாடொன்றாக உலகமயமாதலில் பல்வேறு கட்டங்கள்.
  - 1870 களிலிருந்து 1920 வரை உலக வர்த்தகத்தில் பாரிய வளர்ச்சியொன்று ஏற்படல்.
  - இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்து 1945 இன் பின்னர் உலக பாரிய அதிகரிப்பொன்றைக் காணக்கூடியதாக இருத்தல்.
  - 1980 களின் இறுதி அரைப் பகுதியின் பின் உலகமயமாதலில் இன்னொரு கட்டம் வளர்ச்சியடைதல்.

- உலகமயமாதலின் பிரதான பண்புகள்:
    - வர்தக மற்றும் நிதியியல் பாய்ச்சலிகளின் துரித வளர்ச்சி
    - உற்பத்திச் செயற்பாடு சர்வதேச மயமாதல்.
    - உழைப்பு சர்வதேச ரீதியில் அசைவுக்குட்படல்.
    - நாடுக்ள பொருளாதர ரீதியில் ஒன்றிணைதல்.
- உலகமயமாதலின் சக்திகள்:
    - போக்குவரத்துத் துறையில் வளர்ச்சி
    - தொழில்நுட்ப வளர்ச்சி
    - உலக நிதிச் சந்தைகளில்
    - நாடுகளிடையே ஒப்பீட்டு நன்மை மாற்றமடைதல்
    - பல்தேசியக் கம்பனிகளின் உற்பத்தியில் பல்வேறு செயற்பாடுகள் பல்வேறு நாடுகளில் இடமமர்த்தப்படல்.
    - பாதுகாப்புவாதக் கொள்கைகள் நீக்கப்படல்.
    - பேரளவுச் சிக்கனம்
    - பொருளாதாரங்கள் ஒன்றிணைதல்.
- உலகமயமாதலின் நன்மைகள்:
    - உலகின் வர்த்தகத்தின் அளவு அதிகரித்தல்.
    - உற்பத்தி மற்றும் வருமானம் அதிகரித்தல்.
    - தொழில்வாய்ப்புக்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்தல்.
    - நேரடி வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்தல்.
    - புதிய தொழில்நுட்பங்கள் உரிமையாதல்.
    - பல்வேறு பண்டங்ளின் நுகர்வுக்குச் சந்தர்ப்பம் கிட்டுதல்.
    - உற்பத்தியில் போட்டித்தன்மை அதிகரிப்பதன் காரணமாக தரமுள்ள உற்பத்தி உருவாகுதல்.
    - தகவல்கள் கிடைப்பதில் வினைத்திறன் ஏற்படல்.
- உலகமயமாதலின் தீமைகள்:
    - சர்வதேச ரீதியாக வருமானப் பரம்பல் ஏற்றத்தாழ்வு அதிகரித்தல்.
    - சுற்றாடல் பிரச்சினைகள்
    - உள்நாட்டுப் பொருளாதார முறைகளின் தன்னாதிக்கத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படல்.
    - கலாச்சார பன்முகத்தன்மை மறைந்து போதல்
    - நிதிச் சந்தைகளின் நிலையற்ற தன்மை ஏற்படுகையில் பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்படல்.
    - உள்நாட்டு உற்பத்தித் துறைகளில் பின்னடைவு மற்றும் வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்கள் இழக்கப்படல்.
    - சர்வதேச பயங்கரவாதம்/ சுகாதாரப் பிரச்சினைகள்
- உலகமயமாதலின் நன்மை மற்றும் தீமைக்கு ஏற்ப உலகமய மாதலுக்கு சார்பாகவும் எதிராகவும் தாக்கங்கள் முன்வைக்கப் பட்டுள்ளன.

**தேர்ச்சி 11** : அபிவிருத்தியின் பல்வேறுபட்ட தன்மையினை சமநிலையாக விளக்கி நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கு பங்களிக்க வேண்டியதன் அவசியத்தை காட்சிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 11.1** : பொருளாதார வளர்ச்சியின் முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்து பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாகும் காரணிகளைப் பகுப்பாய்வு செய்வர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :

- பொருளாதார வளர்ச்சி என்றால் என்ன என்பதனை வரைவிலக் கணப்படுத்துவார்.
- அதனைத் தீர்மானிக்கும் காரணிகளை எடுத்துக்காட்டுவார்.
- பொருளாதார வளர்ச்சியின் முக்கியத்துவத்தைக் மதிப்பிடுவார்.
- பொருளாதார வளர்ச்சியைக் கணிப்பிட்டு முன்வைப்பார்.
- பொருளாதார வளர்ச்சியுடன் பொருளாதாரக் கட்டமைப்பு மாற்ற மடையும் விதத்தைக் காட்டுவார்.
- பொருளாதார வளர்ச்சியில் செலவுகளும் உண்டென்பதை உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுவார்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

**பிரவேசம்** :

- ரூபவாஹினியில் செய்தி வாசிக்கும் முறையில் கீழ்த்தரப்படும் பந்தியினை மாணவன் ஒருவர் மூலம் வகுப்புக்கு முன்வைக்கவும்.
  ‘‘ ‘சர்கிஸ்தான்’ பொருளாதாரத்தில் பெரியளவு முன்னேற்ற மொன்று ஏற்பட்டு வருவதாக அந்நாட்டு ஜனாதிபதி கடந்த சில தினங்களுக்கு முன் அறிவித்துள்ளார். அத்துடன் சர்கிஸ்தான் பொருளாதாரத்தில் மெய்யான மொத்த தேசிய உற்பத்தியில் தொடர்ச்சியான அதிகரிப்பொன்று ஏற்படுகின்றதென்றும் அதன் காரணமாக வேலையின்மை குறைவடைந்து செல்கின்றது. அதேபோல் அந்நாட்டு மக்களின் நுனர்வுச் சக்தியும் அதிகரித்து வாழ்க்கைத்தரமும் உயர்ந்தள்ளது என அவர் மேலும் தெரிவித்தூர்.’’

- பின்வரும் கருத்துக்கள் மேலெழும் வகையில் கலந்துரை யாடலை மேற்கொள்ளவும்.
  - நாட்டின் உயர்மட்ட உற்பத்தி இயலளவு தொடர்ச்சியாக அதிகரிப்பதனால் பொருளாதார வளர்ச்சியொன்று ஏற்படும்.
  - பொருளாதார வளர்ச்சியின்போது உற்பத்தி இயலளவு அதிகரிப்பதனால் வேலையின்மை குறைவடையும்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- பொருளாதார வளர்ச்சி என்பது மெய்த்தேசிய உற்பத்தியின் தொடர்ச்சியான அதிகரிப்பு என்பதோடு
- பொருளாதாரத்தில் உற்பத்திச் செயற்பாடுகளின் நீண்ட கால அதிகரிப்பு மூலம் இது வெளிப்படுத்தப்படும்.
- இதன் மூலம் பொருளாதாரத்தில் பொருட்கள் சேவைகளின் உற்பத்தியின் தொகை ரீதியான அதிகரிப்பொன்று வெளிப்படுத்தப் படும்.
- பொருளாதார வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சி விகிதம் என்பவற்றுக்கிடையே தெளிவான வேறுபாடொன்று காணப்படும்.
- வருமான ஏற்றத்தாழ்வு, வறுமை மற்றும் வேலையின்மை ஆகிய பிரச்சினைகளின் குறைந்த - கூடிய மட்டங்களை தீர்மானிப்பதில் பொருளாதார வளர்ச்சியும் கருதக் கூடியளவு பாதிப்பை ஏற்படுத்தும்.
- பொருளாதார வளர்ச்சிக்கான காரணங்களை பின்வருமாறு காட்டலாம்.
  - வளங்களின் அளவில் அதிகரிப்பு
    - பௌதிக மூலதனம்
    - மனித மூலதனம்
    - இயற்கை மூலதனம்
    - சமூக மூலதனம்
  - விளைதிறன் அதிகரிப்பு
    - தொழில்நுட்பம்
    - மனித மூலதனம்
  - பொருளாதார உறுதி
  - அரசியல் ஸ்தீரத்தன்மை
  - நல்லாட்சி
  - பொருளாதார வளர்ச்சி சம்பந்தமான பல்வேறு கோட்பாடுகள் காணப்படுகின்றன.
  - பொருளாதா வளர்ச்சியை அளவிட முடியும்.
  - பொருளாதார வளர்ச்சியுடன் பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றமடைகின்றது.

    உதாரணம்:
    - விவசாயத் துறையை விட கைத்தொழில் துறை முக்கியம் பெறுவதுடன் மிகவும் முக்கியமான துறையாக சேவைத் துறை மாற்றமடைதல்.

- பொருளதார வளர்ச்சி ஏற்படுவதுடன் வருமான மட்டம் அதிகரிப்பதன் மூலம் வருமானக் கேள்வி நெகிழ்ச்சி காரண மாக உற்பத்தியின் கட்டமைப்பு மாற்றம் ஏற்படுகின்றது.
- பொருளாதார வளர்ச்சியின் நன்மைகளைப் பின்வருமாறு காட்டலாம்.
    - உயர் வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுக் கொள்ள முடிதல்.
    - வறுமையைக் குறைத்தல்.
    - வருமானம் உயர்வடைதல்
    - வியாபார முயற்சிகளால் உயர்ந்த இலாபம் பெறக்கூடிய தாக அமைதல்.
    - வேலைவாய்ப்பு அதிகரித்தல்
    - வர்த்தகரீதியான நம்பகத்தன்மை அதிகரித்தல்
    - வரவு செலவுத்திட்ட இடைவெளி குறைதல்.
- பொருளதார வளர்ச்சியின் செலவுகளைப் பின்வருமாறு காட்டலாம்.
    - பணவீக்கம் ஏற்படும் அபாயம்
    - உற்பத்தி மற்றும் நுகர்வு அதிகரிப்பினால் சூழலில் ஏற்படும் பாதிப்புக்கள்.
    - வருமான மற்றும் சொத்துப் பரம்பலில் வேறுபாடுகள்
    - பிரதேச ரீதியான வேறுபாடுகள்
    - நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியைப் பாதித்தல்
    - புவி வெப்பமடைதல் அதிகரித்தல்

**தேர்ச்சி 11** : அபிவிருத்தியின் பல்வேறுபட்ட தன்மையினை சமநிலையாக விளக்கி நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கு பங்களிக்க வேண்டியதன் அவசியத்தை காட்சிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 11.2** : பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டின் பண்புகள் மற்றும் அளவீடு

**பாடவேளை** : 05

**கற்றற் பேறுகள்** :
- பொருளாதார அபிவிருத்தி என்பதனை வரைவிலக்கணப் படுத்துவார்.
- பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டில் காணப்படவேண்டிய பண்புகளைப் பெயரிடுவார்.
- அபிவிருத்தியை அளவிடும் குறிகாட்டிகளைப் பெயரிட்டு விளக்குவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- பொருளாதார அபிவிருத்தி என்பது மனித வாழ்வின் பொருளாதார நிலைமை மற்றும் தர ரீதியான தன்மை உயர்வடைதலாகும் என்பதுடன் அது மாற்றமடையும் ஒரு செயற்பாடாகும்.
- பொருளாதார அபிவிருத்தியின்போது பொருளாதார வளர்ச்சியுடன் சமூக, அரசியல், சுற்றாடல் மற்றும் கலாச்சாரத் துறைகளிலும் முன்னேற்றமொன்று ஏற்படும்.
- இவ்வாறு பல துறைகளிலும் மாற்றங்கள் ஏற்படுவதனால் பொருளாதார அபிவிருத்தி பல்பரிமாணச் (Multy dimensional) செயற்பாடாகும்.
- பொருளாதார வளர்ச்சியினால் வெளிப்படுத்தப்படுவது பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டின் தொகை ரீதியான பக்கத் தோற்றமாகும் என்பதுடன் அதற்கு மேலாக தர ரீதியான பக்கத் தோற்றமொன்றும் காணப்படுகின்றது.
- பொருளாதார அபிவிருத்திக்காக பொருளாதார வளர்ச்சியுடன் பின்வரும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.
  - பொருளாதார உற்பத்தித் துறையில் கட்டமைப்பு மாற்ற மொன்று ஏற்படல்.
  - உற்பத்தி வளங்களின் விளைதிறன் அதிகரித்தல்.
  - உற்பத்தி நுட்பமுறை மற்றும் தொழில்நுட்ப உயர்வு
  - நவீனமயமாதல்.
  - பொருளாதார வளர்ச்சியின் பிரதிபலன்கள் மேலிருந்து கீழ் நோக்கிப் பாய்ந்து சென்று வறுமை குறைதல், தொழிலின்மை குறைதல் மற்றும் வருமான ஏற்றத்தாழ்வு இல்லாமல் போதல்.

- பொருளாதார அபிவிருத்தியை அளவிடுவதற்கு இணைந்த சுட்டெண்கள் பயன்படுத்தப்படும்.

  உதாரணம்:
  - தலா நபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி
  - சார்பு வருமானப் பரம்பல்
  - ஆயுள் எதிர்பார்க்கை
  - கினிக் குணகம்
  - உழைப்பாளர் படையின் பங்குபற்றல் வீதம்
- பொருளாதார வளர்ச்சியின் முழுமையான முன்னேற்றத்தை அளவிடுவதற்கு இணைந்த சுட்டெண்கள் பயன்படுத்தப்படுவதுடன் தனியான பல சுட்டெண்களைப் பயன்படுத்தி இணைந்த சுட்டெண்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

  உதாரணம்:
  - பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண்
  - மானிட அபிவிருத்திச் சுட்டெண்
  - மானிட வறுமைச் சுட்டெண்
- தனி நபர் ஒருவருக்கு நாட்டின் உற்பத்தியில் உரித்தாகும் அளவினை தலா நபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியினால் அளவிட முடியும்.
- தலா நபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியினால் சகல துறைகளும் பிரதிநிதித்துவப்படுத்தப்படாமை காரணமாக பொருளாதார அபிவிருத்தியை அளவிடுவதற்கு அது போதுமான அளவீடொன்று அல்ல.
- அபிவிருத்தியை அளவிடும்போது பொருளாதார ரீதியான குறி காட்டிகளுக்கு மேலாக சமூகக் குறிகாட்டிகளையும் ஒன்றிணைத்து மிகப் பூரணமான அபிவிருத்திக்குறிகாட்டிகள் அண்மைக்காலத்தில் பயன்படுத்தப்படுகின்றது.
- ஒரு நாட்டின் அபிவிருத்தி தொடர்பாக புதிய வரைவிலக்கண மொன்றின் அடிப்படையில் பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண் என்பது உருவாக்கப்பட்டது.
  - இச்சுட்டெண்ணில் கீழ்த்தரப்படும் சுட்டெண்கள் உள்ளடங்கும்.
  - வயது ஒரு வருடத்தின் போது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம்
  - சிசு மரணவீதம்
  - எழுத்தறிவு
- மேலுள்ள நியதிகளின் அடிப்படையில் சுட்டெண் பெறும் பெறுமதி 100ஐக் கிட்டியுள்ள நாட்டின் வாழ்க்கைத் தரம் உயர் மட்டத்தில் காணப்படுகின்ற அதேவேளை சுட்டெண் பெறும் பெறுமதி 0 ஐ அண்மிய நாடுகளில் வாழ்க்கைத் தரம் கீழ் மட்டத்தில் காணப் படும்.

- ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் 1999 இல் மானிட அபிவிருத்திச் சுட்டெண் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இச்சுட்டெண்ணில் மூன்று சுட்டெண்கள் உள்ளடங்கியுள்ளன.
    - பிறப்பின்போது ஆயுள் எதிர்பார்ப்பு
    - வயது வந்தோர் எழுத்தறிவு விகிதம் மற்றும் பாடசாலைகளில் அனுமதிக்கப்படும் விகிதம்
    - தனிநபர் வருமானம்
- மானிட அபிவிருத்தியடிப்படையில் பின்வருமாறு நாடுகள் வேறுபடுத்தப்படுகின்றன.
    - மிகவும் உயர் மானிட அபிவிருத்தி கொண்ட நாடுகள் 0.900 - ம் அதற்கு மேலும்
    - உயர் மானிட அபிவிருத்தி கொண்ட நாடுகள் 0.800 - 0.899
    - மத்திமமான மானிட அபிவிருத்தி கொண்ட நாடுகள் 0.500 - 0.799
    - கீழ்மட்ட மானிட அபிவிருத்தி கொண்ட நாடுகள் 0.000 - 0.499
- 2009ஆம் ஆண்டின் மானிட அபிவிருத்தி அறிக்கைக்கு ஏற்ப உலகில் உயர் மானிட அபிவிருத்தியைக் காட்டிய நாடுகள் ஐந்தாகும். அவை நோர்வே, அவுஸ்திரேலியா, ஐஸ்லாந்து, கனட, அயர்லாந்து என்பன.
- குறைந்தளவான மானிட அபிவிருத்தியைக் காட்டிய நாடுகள் ஐந்தும் பின்வருவன மாலே, மத்திய ஆபிரிக்கா குடியரசு, சியாரா லியோன், ஆப்கானிஸ்தான், நைகர் என்பன.
- 2009ஆம் ஆண்டின் மானிட அபிவிருத்தி அறிக்கைக்கு ஏற்ப இலங்கையின் பெறுமதி 0.759 ஆகும்.

(அபிவிருத்தியை அளவிடும் சுட்டெண்களுக்குரிய கால அடிப்படையிலான தகவல்கள் தொடர்பாக மாணவரை அறிவுறுத்தவும்.

**தேர்ச்சி 11** : அபிவிருத்தியின் பல்வேறுபட்ட தன்மையினை சமநிலையாக விளக்கி நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கு பங்களிக்க வேண்டியதன் அவசியத்தை காட்சிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 11.3** : அபிவிருத்தியின் பலவகைப்பட்ட தன்மையினை விளக்கி நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியினை மதிப்பிடுவர்.

**பாடவேளை** : .....

**கற்றற் பேறுகள்** :
- உலக வங்கியின் வகைப்படுத்தலுக்கேற்ப பொருளாதாரங்ள் வகைப்படுத்தப்பட்டுள்ள விதத்தினை விளக்குவார்.
- ஏனைய வகைப்படுத்தல்களுக்கேற்ப பொரளாதாரங்கள் வகைப் படுத்தப்பட்டுள்ள விதத்துக்கான உதாரணங்களை முன்வைப்பார்.
- அபிவிருத்தி தொடர்பான சர்வதேச பல்வகைத்தன்மையை விளக்கி அதற்கான காரணங்களை முன்வைப்பார்.
- நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியினை வரைவிலக்கணப்படுத்தி அதன் முக்கியத்துவத்தை மதிப்பிடுவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- பொருளாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி, சூழல் பாதுகாப்பு என்பவற்றினூடாகப் பெற்றுக் கொள்ளப்படும் முன்னேற்றமே நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியாகும்.
- நிகழ்காலத்தில் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திப் பிரவேசத்துக்கு நாடுகள் ஈடுபாடு கொள்வதற்கான காரணங்கள்:
  - சூழல் பாதுகாப்பை ஏற்படுத்தல்
  - இயற்கை வளங்களைப் பாதுகாத்தல்
- சூழலில் உள்ள வளங்களைப் பயன்படுத்தல் மற்றும் இயற்கையாக ஏற்படும் அனர்த்தங்கள் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திப் பிரவேசத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் அவற்றுக்கான காரணங்கள்:
  - இயற்கையின் கொடையாகக் கிடைத்துள்ள வளங்களை நினைத்தபடி பயன்படுத்தல்.
  - வளிக்கோளத்தின் வெப்பம் அதிகரித்தல்
  - பனிமலைகள் உருகுதல்.
  - காலநிலை மாற்றங்கள்
  - ஓசோன் படயில் ஓட்டை ஏற்படல்.
  - காடழிப்பு
  - நீர்மாசடைதல்.

- நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்காக அவசியப்படும் மூலதனத்தின் தன்மை பின்வருமாறு:
    - தனியார் மூலுதனம்
    - மனித மூலதனம்
    - இயற்கை மூலதனம்
    - சமூக மூலதனம்
- இயற்கை வளங்கள் தேய்வடைவதையும் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுவதையும் குறைப்பதற்காக நாடுகள் சர்வதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்த ஆரம்பித்துள்ளதுடன் அவற்றுக்கான உதாரணங்கள் பின்வருமாறு:
    - ஓசோன் படையைப் பாதிக்கும் க்ளோரோ ப்ளோரோ காபன் வாயுவின் பாவனையைத் தடுத்தல்.
    - பொலத்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தல்.
    - கைத்தொழில் சாலைகளால் ஏற்படும் சூழல் பாதிப்பைத் தவிர்ப்பதற்காக சட்டங்கள் பிறப்பித்தல்.
    - மோட்டார் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையினைக் கட்டுப்படுத்தல்.
- பொருளாதார தொகையளவில் விருத்தியடைந்த போதிலும் அது எதிர்கால பரம்பரையின் சுபீட்சத்துக்குத் தயையாக இருக்குமாயின் அவ் அபிவிருத்தி நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியாக மாட்டாது.
- நாடொன்றின் எதிர்கால முன்னேற்றமும் மக்களின் வாழ்க்கை நிலைமையின் தரமும் தீர்மானிக்கப்படுவது சூழலின் தரரீதியான தன்மையினாலாகும்.
- நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி எண்ணக் கருவின் மூலம் முயற்சிக்கப்படுவது பொருளாதார வளர்ச்சியிலும் இயற்கை வளங்களின் விருத்தியிலும் சூழலிலும் சமநிலையான தன்மையை ஏற்படுத்துவதற்காகும்.
- நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திப் பிரவேசத்தில் மானிட அபிவிருத்தியின் அவசியமும் உணரப்பட வேண்டும் என்பது.
- நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியில் மூன்று துறைகளின் முன்னேற்றம் செல்வாக்குச் செலுத்துவதனால் அவை நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியின் தூண்கள் என அழைக்கப்படும்.
    - பொருளாதார அபிவிருத்தி
    - சமூக அபிவிருத்தி
    - சூழல் பாதுகாப்பு
- இம்மூன்று தூண்களிடையேயும் ஒன்றிலொன்று தங்கியிருத்தலைப் போலவே ஒன்றிலொன்று தொடர்புபட்ட நிலைமையும் காணப் படுகின்றது.

**தேர்ச்சி 11** : அபிவிருத்தியின் பல்வேறுபட்ட தன்மையினை சமநிலையாக விளக்கி நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கு பங்களிக்க வேண்டியதன் அவசியத்தை காட்சிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 11.4** : வருமான ஏற்றத்தாழ்வை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமையைப் பரீட்சிப்பர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- வருமானப் பரம்பல் ஏற்றத்தாழ்வுகளை வரைவிலக்கணப் படுத்துவார்.
- வருமான ஏற்றத் தாழ்வில் காணப்படும் பல்வேற வடிவங்களை முன்வைப்பார்.
- வருமானப் பரம்பலை அளவிடுவதற்காக பயன்படுத்தப்படும் அளவீடுகளை வரிப்பட அடிப்படையில் விளக்குவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- சந்தை முறைமை காணப்படும் எந்த ஒரு சமூகத்திலும் வருமானம் குறைந்த மற்றும் வருமானம் கூடிய வகுப்பு வேறுபாடுகள் காணப்படுகின்றது.
- இது வருமானப் பரம்பல் ஏற்றத்தாழ்வு என அழைக்கப்படும் என்பது.
- வருமானப் பரம்பல் ஏற்றத்தாழ்வைக் குறைப்பது நியாயத்துவம் எனக் கருதப்படுகின்றது.
- நாட்டின் முழுமொத்த வருமானம் பகிரப்படுவது வருமானப் பரம்பல் ஏற்றத்தாழ்வின் மீது நடைபெறுகின்றது.
- வருமானப் பரம்பல் ஏற்றத்தாழ்வில் இருவகையான வடிவங்கள் காணப்படுகின்றன.
  - சார்பு வருமானம் பரம்பல்
  - முழு வருமானம் பரம்பல்
- சார்பு வருமானப் பரம்பல் என்பது மொத்த வருமானம் குடும்பங் களிடையே பகிரப்பட்டுள்ள விதத்தைக் காட்டுவதாகும் என்பது.
- மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கையில் மிகக் குறைந்த வருமானம் பெறும் வீதம் மற்றும் மிகவுயர்ந்த வருமானம் பெறும் சதவீதத்துக்கேற்ப வருமானப் பரம்பல் வேறுபாடு தீர்மானிக்கப்பட முடியும்.
- சார்பு வருமானப் பரம்பலின் தன்மை லோரன்ஸ் வளையி மூலம் காட்டப்படும்.
  - லோரன்ஸ் வளையி பின்வருமாறு காட்டப்படலாம்.

வருமானப் பரம்பல்




குடும்பங்களின் சதவீதம்

- லோரன்ஸ் வளையி சமவருமானப் பரம்பல் கோட்டினை அண்மிக்கின்ற அளவுக்கு வருமானப் பரம்பல் ஏற்றத் தாழ்வு குறைவாக இருக்கும்.
- லோரன்ஸ் வளையி சம வருமானப் பரம்பல் கோட்டை விலகிச் செல்கின்ற அளவுக்கு வருமானப் பரம்பல் ஏற்றத்தாழ்வு அதிகரிக்கும்.
- லோரன்ஸ் வளையியின் நிலைமையை கினிக் குணகம் மூலமும் அளவிட முடியும்.
- கினிக் குணகம் $\frac{x}{x+y}$ இனால் அளவிடப்படும்.
- கினிக் குணகம் ஒன்றை அண்மிக்கும்போது வருமானப் பரம்பலின் ஏற்றத்தாழ்வு அதிகரிக்கும்.
- கினிக்குணகம் 0 ஐ அண்மிக்கும்போது வருமானப் பரம்பல் ஏற்றத்தாழ்வு குறைவாகும்.
- கினிக் குணகம் 0 ஐ அடைவது வருமானப் பரம்பல் ஏற்றத் தாழ்வுகள் இல்லாதிருக்கும்போது.
- நாட்டின் வருமானத்தை பிரிவுகளாக வேறுபடுத்தி ஒவ்வொரு வருமானப் பிரிவுக்குள்ளும் அடங்குகின்ற சனத்தொகையை சதவீதமாகக் கூறுவது சார்வு வருமானப் பரம்பலாகும் என்பது.
- வறுமைக் கோட்டுக்குக் கீழே காணப்படும் மக்கள் சார்பு வருமானப் பரம்பலின் அடிப்படையில் வறியவர்களாவர்.

**தேர்ச்சி 11** : அபிவிருத்தியின் பல்வேறுபட்ட தன்மையினை சமநிலையாக விளக்கி நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கு பங்களிக்க வேண்டியதன் அவசியத்தை காட்சிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 11.5** : வறுமை எண்ணக்கருவை விளக்கி அதனை அளவிடும் முறையைக் காட்டுவர்.

**பாடவேளை** : 05

**கற்றற் பேறுகள்** :
- முழு வறுமை, சார்பு வறுமை என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை இனங்கண்டு கொள்ளுவார்.
- வறுமையின் தோற்றப்பாடுகள் இரண்டையும் கூறுவார்.
- தேசிய வறுமைக்கோடு மற்றும் சர்வதேச வறுமைக்கோடு பற்றி விளக்குவார்.
- மானிட வறுமைச் சுட்டெண்ணை விளக்குவார்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

**பிரவேசம்** :
- வறுமை என்ற எண்ணக்கருவை வரைவிலக்கணப்படுத்திக் கொள்ளவும்.
- முழு வறுமை மற்றும் சார்பு வறுமையை வேறுபடுத்திக் காட்டுதல்.
- வறுமையின் தோற்றப்பாடுகளைப் பெயரிட்டு விளக்குதல்.
- பல்வேறு அளவீடுகளின் அடிப்படையில் வறுமையை அளவிட்டுக் காட்டுதல்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- வறுமை என்பது பல்வேறு எண்ணக்கருக்களின் அடிப்படயில் வரைவிலக்கணப்படுத்தப்படும்.
- மிகக் குறைந்த கலோரிப் பெறுமானத்தைப் பெற்றுத் தருகின்ற உணவுப் பொருட்கள் உள்ளடங்கிய அடிப்படைத் தேவைகளைப் பெறுவதற்குக் கூட வருமானம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளாத நிலை எனின் அது முழு வறுமையாகும்.
- வருமானப் பரம்பல் ஏற்றத்தாழ்வு காரணமாக ஏற்படுவது சார்பு வறுமையாகும் என்பது.
- வறுமையின் இரண்டு தோற்றப்பாடுகள் காணப்படுகின்றது.
  - வருமான வறுமை
  - நுகர்வு வறுமை
- அடிப்படை வாழ்க்கைத் தேவைகளை உள்ளடக்கிய மிகக்குறைந்த நுகர்வு மட்டத்தைப் பேணுவதற்கேனும் போதுமான அளவு வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கு இயலாதபோது அது அடிப்படை வறுமையாகும்.

- தனிநபர் வாழ்வில் தரரீதியான தன்மையை எடுத்துக் காட்டுகின்ற வளர்ந்தோர் எழுத்தறிவு, வாழ்க்கைத் தரம், பாடசாலைக் கல்வி பெற்ற வருடங்களின் எண்ணிக்கை ஆகிய நியதிகளினடிப்படையில் வறுமை கவனத்திற் கொள்ளப்படும்.
- ஐக்கிய நாடுகள் தாபனத்தின் வரைவிலக்கணத்துக்கேற்ப சுதந்திரம், தன்மானம், மற்றவர்களின் கவனிப்பு என்பவற்றை அனுபவித்துக் கொண்டு தேகாரோக்கியத்துடன் மற்றும் மகிழ்ச்சிகரமான வாழ்க்கைத் தரத்தைப் பேணுவதில் வெற்றிகண்ட மானிட அபிவிருத்திக்கான வாய்ப்புக்களையும் தெரிவுகளையும் இழந்த நிலைமையே மானிட வறுமையாகும்.
- உயிர்வாழ்வதற்கும் சிறந்த செயற்பாடுகளுக்கும் அவசியப்படு கின்ற உணவும் உணவு அல்லாத ஏனைய தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தாங்க வேண்டிய ஆகக்குறைந்த செலவு தேசிய வறுமைக் கோடாகும்.
  (கால மாற்றத்துக்கேற்ப வறுமைக்கோடு பெற்றுக் கொடுக்கப்பட முடியும்.)
- அதன்படி தனிநபரின் ஒரு நாளுக்குரிய வருமானம் அமெரிக்க டொலர் 1.08 கீழ்மட்ட வறுமைக் கோடாகவும் தனிநபர் வருமானம் அமெரிக்க டொலர் 2.15 மேல்மட்ட வறுமைக் கோடாகவும் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.
- நாட்டின் சனத்தொகையில் எந்தளவான தொகையினர் வறுமைக் கோட்டுக்குக் கீழான வருமானம் ஈட்டுகின்றனர் என்பது வறுமை தொடர்பான மிக எளிய அளவீட்டுக் கருவியாகும்.
- மானிட வறுமைச் சுட்டெண் (HPI) ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டம் மூலம் 1977 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றாகும்.
- மானிட வறுமைச் சுட்டெண் இரண்டு வடிவங்களைக் கொண்ட தாகும்.
  - மானிட அபிவிருத்திச் சுட்டெண் - 1 (HPI - 1)
  - மானிட அபிவிருத்திச் சுட்டெண் - 2 (HPI - 2)
- மானிட அபிவிருத்திச் சுட்டெண் 1 பயன்படுத்தப்படுவது அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளின் வறுமையை அளவிடுவதற்காகும்.
- மானிட அபிவிருத்திச் சுட்டெண் 2 பயன்படுத்தப்படுவது அபிவிருத்தி யடைந்த நாடுகளின் வறுமையை அளவிடுவதற்காகும் என்பது.
- மானிட அபிவிருத்திச் சுட்டெண் இரண்டினதும் நியதிகள் வேறுபட்டது.
- மானிட அபிவிருத்தி வறுமைச் சுட்டெண் பயன்படுத்தப்படுவது முழு வறுமையின் அளவினை அளவிடுவதற்காகும்.

(வறுமையை அளவிடுகின்ற சுட்டெண்களுக்குரிய கால அடிப் படையிலான தகவல்கள் தொடர்பாக மாணவரை அறிவுறுத்துக.)

**தேர்ச்சி 11** : அபிவிருத்தியின் பல்வேறுபட்ட தன்மையினை சமநிலையாக விளக்கி நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கு பங்களிக்க வேண்டியதன் அவசியத்தை காட்சிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 11.6** : இலங்கையின் வறுமையையும் அதனை குறைப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் விமர்சிப்பார்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :

- இலங்கையின் வறுமை மட்டத்தை அறிமுகப்படுத்துவார்.
- இலங்கையின் வறுமையின் பிரதேச வேறுபாடுகளுக்குக் காரணங்களை முன்வைப்பார்.
- இலங்கையில் வறுமை ஏற்பட காரணமாக இருந்த விடயங்களை முன்வைப்பார்.
- இலங்கையில் வறுமையை குறைப்பதற்கான நடவடிக்கைகளை முன்மொழிவு செய்வார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- இலங்கையின் வருமானம்/நுகர்விலான வறுமையை பின்வரும் அடிப்படையில் காட்டலாம்.
- தனிநபர் வறுமைக் கோட்டை மதிப்பீடு செய்வதற்கு இலங்கையில் வளர்ந்தோர் மற்றும் இளைஞர் (20 - 30 வருடத்துக்கு இடைப்பட்ட) களுக்கு, நாளொன்றுக்கு 2030 கலோரி பெறுமதியை பெற்றுத்தரும் போசணை நிறைந்த உணவை நுகர்வு செய்வதற்கு செலவாகும் மாதாந்த செலவு அடிப்படையாகக் கொள்ளப் பட்டுள்ளது.
- இதற்கு மேலதிகமாக உணவல்லாத அத்தியவசிய நுகர்வுப் பொருட்களுக்காக (கல்வி, சுகாதாரம், வீடமைப்பு) மேற்கொள்ளும் செலவு அடிப்படையாகும்.
    - இதனடிப்படையில் 2006/2007 காலத்தில் இலங்கையின் தேசிய வறுமைக் கோடானது மாதமொன்றிற்கு 2233ரூபா.
    - 2010 ஜனவரி மாதத்தில் மாதமொன்றிற்கு 3070.
    - இலங்கையின் வறுமையானது படிப்படியாக குறைகிறது.
    - நகர, கிராமிய துறைகளின் வறுமையும் படிப்படியாக குறை கின்றது.
    - நகர துறையுடன் ஒப்பிடுகையில் கிராமிய மற்றும் பெருந் தோட்டத் துறைகளில் வறுமை கூடுதலாக உள்ளது.
    - வறுமைக்கான காரணங்களை பின்வரும் அடிப்படையில் முன் வைக்கலாம்.

- பிரதேச ரீதியான வேறுபாட்டினுள் கிராமிய பிரதேசம் காரணம்.
    - பொருளாதார சமூக உட்கட்டமைப்பு வசதிகளில் குறைந்த அபிவிருத்தி
    - வளங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளில் காணப் படும் குறைபாடுகள்.
    - விவசாயத்தை மேற்கொள்ள காணப்படும் அளவு குறை வடைதல்.
    - பொருளாதார வளர்ச்சியின் நன்மைகள் குறைந்த வருமானத்தை பெறும் கிராமியத் துறையை நோக்கிச் செல்லாமை.

- இலங்கையில் வறுமையை குறைப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.
    - வறிய சமூகத்திற்கு சாதகமான பொருளாதார வளர்ச்சியின் மூலம் பொருளாதார தேவைகளை விரிவாக்குதல்.
    - வறிய சமூகத்தினரை சக்தி வாய்ந்தவராக்குவதற்கு
    - வறிய சமூகத்தினரை பாதுகாப்பதற்கான தேசிய செயற்பாடு களை உறுதிப்படுத்தல்.

**தேர்ச்சி 11** : அபிவிருத்தியின் பல்வேறுபட்ட தன்மையினை சமநிலையாக விளக்கி நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கு பங்களிக்க வேண்டியதன் அவசியத்தை காட்சிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 11.7** : பொருளாதார வளர்ச்சிக்கும் வறுமைக்குமிடையிலான தொடர்பை ஆராய்வர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :

- பொருளாதார வளர்ச்சிக்கும் வறுமைக்கிடையிலான தொடர்பை விளக்குவார்.
- வறிய சமூகத்திற்கு சாதகமான பொருளாதார வளர்ச்சி நிகழ்ச்சித் திட்டங் உதாரணத்துடன் காட்டுவார்.
- வறிய சமூகத்திற்கு சாதகமான பொருளாதார கொள்கைகளை உதாரணத்துடன் காட்டுவார்.
- வறிய மக்களுக்குச் சார்பான விருத்தியை அடைவதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை முன்மொழிவு செய்வார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- வறிய சமூகத்தினரின் வருமானத்தை உயர்த்துவதன் பொருட்டு மிகவும் வினைத்திறனான முறையில் பங்களிப்பு செய்யக்கூடிய மற்றும் வறியவர்களுக்குச் சாதகமாகும் வகையில், வருமானப் பகிர்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் அபிவிருத்தி செயற்பாட்டை வறிய சமூகத்திற்கு சார்பான அபிவிருத்தி என அறிமுகப் படுத்தலாம்.
- வறிய சமூகத்திற்கு சார்பான வளர்ச்சியானது பின்வரும் இரண்டு அடிப்படைகளில் அளவிடப்படலாம்.
    - முழுமையானது
    - சார்பு ரீதியானது
- முழுமையான அடிப்படையில் அளவிடும்போது வறியவர்களின் வருமானத்தில் முழுமையான அதிகரிப்பை ஏற்படுத்தும் அபிவிருத்தி செயற்பாடொன்று எதிர்பார்க்கப்படுகின்றது.
- சார்பு ரீதியாக அளவிடும்போது வறியவரல்லாதவர்களின் சராசரி வருமானம் அதிகரிக்கும் அளவை விட, கூடுதலான அளவால் வறிய மக்களின் சராசரி வருமானம் உயர்வதற்கு வாய்ப்பாக அமையும் அபிவிருத்திச் செயற்பாடொன்று எதிர்பார்க்கப்படுகின்றது.

- வறிய சமூகத்திற்கு சாதகமான விருத்தியை ஏற்படுத்துவதற்கு அரசு அண்மைய ஆண்டுகளில் மேற்கொண்டுள்ள செயற்பாடு களுக்கான உதாரணங்கள் பின்வருமாறு
    - கிராமிய வறுமைக்குத் தீர்வாக சமுர்திக் கொடுப்பனவுகளை 50% இனால் அதிகரித்தல்.
    - முயற்சியாண்மை அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்து வதற்காக ‘‘ஜனபுபுதுவ”, ‘‘கம்திரிய” மற்றும் ‘‘ஏக கம்மான” என்பன நடைமுறைப்படுத்தப்படல்.
    - கிராமிய பொது நடவடிக்கைகளின் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக மகநெகும, கமநெகும, கமிபுபுதுவ மற்றும் கிராமிய மின்வலுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படல்.
    - பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள் என்ற வகையில் ரஜரட்ட நவோதய, புபுதமு வெல்லஸ்ஸ, செங்கடகல உதானய, வடக்கு கிழக்கு அபிவிருத்தி போன்ற அபிவிருத்தித் திட்டங்கள்
    - விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக உரமானியம் பெற்றுக் கொடுத்தல், நெல்லுக்கான உத்தரவாதவிலை அதிகரித்தல், ‘‘கிரி கம்மான” உருவாக்கம்.
    - செறிவான, சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழில்களை முன்னேற்றுவதற்காக நாடு முழுவதிலும் 300 கைத்தொழிற் சாலைகளை நிறுவுதல், ‘லங்கா புத்ர’ நிகழ்ச்சித்திட்டம் ‘‘நெணஸ’ நிகழ்ச்சித்திட்டம், தேசிய முயற்சியாளர் வங்கி மற்றும் செயற்படுத்தல்.
    - உயர்கல்வி மற்றும் வசதிகள் தொடர்பான ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்காகக் கிராமத்துக்குத் தொழில்நுட்பத்தைக் கொண்டு வருகின்ற விஞ்ஞான தொழில்நுட்ப வள நிலையங்களை உருவாக்குதல், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், மற்றும் சமுத்திர பல்கலைக்கழகம் போன்றவற்றைத் தாபித்தல்.
- வறிய சமூகத்தினருக்கு சாதகமான விருத்தியை அடையச் செய்வதற்கு பின்பற்றக்கூடிய பொருளாதார கொள்கை ரீதியான செயற்பாடுகளை பின்வரும் அடிப்படையில் கண்டுகொள்ள முடியும்.

| கொள்கை | செயற்பாடு |
|---|---|
| • பேரினப் பொருளாதார கொள்கை துறை ரீதியான கொள்கை | • பணவீக்கத்தை கட்டுப்படுத்தல்<br>• தெரிவுசெய்த துறைகளை மட்டும் சுதந்திர வர்த்தகத்திற்கு திறந்துவிடல். |
| • துறை ரீதியான கொள்கை | • விவசாயப் புணரமைப்பு<br>• மனித மூலதன விருத்தி<br>• சுகாதார வசதிகளை விரிவுபடுத்தல்<br>• பெண்கள் வலுவூட்டல் |
| • பிரதேச அபிவிருத்திக் கொள்கை | • வறிய சனத்தொகையினர் அதிகளவில் வாழும் பிரதேசங்களில் அபிவிருத்தி செயற்பாடுகளை பன்முகப்படுத்தல். |
| • புனர்நிர்மாணக் கொள்கை | • வறிய சமூகத்தினர் வருமானத்தை உழைக்கும் வகையிலும் வறிய சமூகத்தினருக்கு தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் கொள்கை களை அமுலாக்குதல். |

(கால அடிப்படையில் செய்யப்படுகின்ற வறியவர்களுக்குச் சாதகமான பொருளாதார கொள்கை ரீதியான நடவடிக்கைகளை பற்றி மாணவரை அறிவுறுத்தவும்.)

**தேர்ச்சி 11** : அபிவிருத்தியின் பல்வேறுபட்ட தன்மையினை சமநிலையாக விளக்கி நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கு பங்களிக்க வேண்டியதன் அவசியத்தை காட்சிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 11.8** : இலங்கையின் சனத்தொகைப் பரம்பல் மற்றும் அதன் விளைவு களையும் விபரிப்பர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- சனத்தொகை என்ற எண்ணக்கருவை வரைவிலக்கணப்படுத்துவார்.
- சனத்தொகை வளர்ச்சி வீதம், கணிப்பிடும் விதம் என்பவற்றை விளக்குவார்..
- சனத்தொகைப் பரம்பலில் வேறுபாடு மற்றும் அதன் பொருளாதார விளைவுகளை விளக்குவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- இயற்கை அதிகரிப்பும் தேறிய குடிப்பெயர்வும் காரணமாக சனத் தொகை வளர்ச்சி ஏற்படும்.
- சனத்தொகை வளர்ச்சி வீதத்தைப் பயன்படுத்தி சனத்தொகை அளவிடப்படும்.
- முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது நிகழ்கால வருடத்தின் சனத்தொகை வளர்ச்சி அடைந்துள்ள விதம் சனத்தொகை வளர்ச்சி வீதத்தினால் அளவிடப்படும்.
- சனத்தொகை வளர்ச்சி வீதம் இரண்டு வழிகளில் கணிப்பிடப்படும்.

- சனத்தொகை வளர்ச்சி வீதம்

$$= \left( \begin{array}{c} \text{இயற்கை} \\ \text{அதிகரிப்பு} \\ \text{விகிதம்} \end{array} + \begin{array}{c} \text{தேறிய குடிப்} \\ \text{பெயர்வு} \\ \text{விகிதம்} \end{array} \right) \times \frac{100}{1000}$$

சனத்தொகை வளர்ச்சி வீதம்

$$= \frac{\begin{array}{c}\text{பருமட்டான} \\ \text{பிறப்பு}\end{array} - \begin{array}{c}\text{பருமட்டான} \\ \text{இறப்பு}\end{array} + \begin{array}{c}\text{தேறிய} \\ \text{குடிப்பெயர்பு}\end{array}}{100}$$

- குறிப்பிட்ட ஒரு வருடத்தினுள் ஏற்படும் பிறப்புக்களுக்கும் இறப்புக்களுக்கும் இடையிலான வேறுபாடு இயற்கை வளர்ச்சி எனக் கூறப்படும்.

இயற்கை வளர்ச்சி வீதம்

= பிறப்புக்களின் எண்ணிக்கை - இறப்புக்களின் எண்ணிக்கை

- இயற்கை வளர்ச்சி வீதம் கணிப்பிடப்படுவது குறிப்பிட்ட வருட பிறப்பு மற்றும் இறப்புகளுக்கிடையிலான வேறுபாட்டினை நடு ஆண்டு சனத்தொகையினால் பிரிப்பதன் மூலமாகும்.

இயற்கை வளர்ச்சி வீதம்

$$= \frac{\text{பிறப்புக்களின் தொகை - இறப்புக்களின் தொகை}}{\text{நட்டாண்டுச் சனத்தொகை}} \times 100$$

இயற்கை வளர்ச்சி வீதம்

$$= \frac{\text{பிறப்பு வீதம் - இறப்பு வீதம்}}{1000} \times 100$$

- இயற்கை வளர்ச்சி வீதம் நேர்ப் பெறுமதியைப் பெறும்போது சனத்தொகை அதிகரிப்பும் இயற்கை வளர்ச்சி வீதம் மறைப் பெறுமதி பெறும்போது சனத்தொகைக் குறைவும் ஏற்படும்.
- ஒரு வருடத்தினுள் நாட்டில் ஏற்படும் பிறப்புக்களின் தொகை (கருவள வீதம்) அளவிட்டுக் காட்டும் கருவி பருமட்டான பிறப்பு வீதமாகும்.

பருமட்டான பிறப்பு வீதம்

$$= \frac{\text{உயிர்ப் பிறப்புக்களின் தொகை}}{\text{நட்டாண்டுச் சனத்தொகை}} \times 1000$$

- குறிப்பிட்ட வருடமொன்றின் நடு ஆண்டுச் சனத்தொகையால் அவ்வருடத்தினுள் 1000 பேருக்கு நிகழுகின்ற இறப்புக்களின் தொகையைப் பிரித்து பருமட்டான இறப்பு வீதம் கணிப்பிடப் படும்.

பருமட்டான இறப்பு வீதம்

$$= \frac{\text{வருடாந்த இறப்புக்களின் தொகை}}{\text{நட்டாண்டுச் சனத்தொகை}} \times 1000$$

- சிசு மரண வீதம் பின்வருமாறு கணிக்கப்படும் என்பது.

சிசு மரண வீதம்

$$= \frac{\text{வருடத்தினுள் 1 வயதுக்குக் குறைந்த இறப்புக்களின் தொகை}}{\text{உயிரோடு பிறந்த குழந்தைகளின் தொகை}} \times 1000$$

- ஒரு நாட்டின் சனத்தொகையில் இருக்கின்ற பெண்களின் தொகைக்கு அமைவாக காணப்படும் ஆண்களின் தொகையைக் காட்டும் வீதம் அப் பெண்கள் தொகையின் ஆயிரத்துக்குரிய தொகை வீதம் என அழைக்கப்படும்.

$$= \frac{\text{நாட்டில் உள்ள ஆண்களின் தொகை}}{\text{நாட்டில் உள்ள பெண்களின் தொகை}} \times 1000$$

- கடந்த 25 வருட காலத்தினுள் இலங்கையின் சனத்தொகையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்:
    - சனத்தொகை வளர்ச்சி வேகம் குறிப்பிடத்தக்க அளவில் குறைவடைதல்.
    - அண்மையாண்டுகளில் தேறிய குடிப்பெயர்வு சனத்தொகை வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தும் பிரதான காரணியாக அமைதல்.
    - சனத்தொகையானது 1981 இல் 148 இலட்சத்திலிருந்து 2007 இல் 200 இலட்சமாக 52 இலட்சத்தால் அதிகரித்தது.
    - வயதமைப்பில் வேறுபாடொன்றைக் காணக்கூடியதாக இருத்தல்
    - சிறுவர்களின் வீதம் குறைதல்
    - வேலை செய்யும் வயதிலான சனத்தொகை குறைதல்.
    - முதியோர் சனத்தொகை அதிகரிப்பு
    - சிசு மரண வீதம் குறைதல்
    - இயற்கை வளர்ச்சி குறைதல்.


சனத்தொகை
சனத்தொகை வயது முதிர்தல்
வேலை செய்யும் வயதிலான சனத்தொகை
• தங்கியிருப்போர் வீதம்
• முதியோர் தங்கியிருப்போர் வீதம்
• சிறுவர் தங்கியிருப்போர் வீதம்
சனத்தொகை வளர்ச்சி
சனத்தொகை வளர்ச்சி வீதம்
சனத்தொகை வளர்ச்சி ஆயிரத்தின் விகிதமாக காட்டல்
இயற்கை வளர்ச்சி வீதம்
இயற்கை வளர்ச்சியை நடு ஆண்டுச் சனத்தொகையில் சதவீதமாகக் காட்டல்
இயற்கை வளர்ச்சி
+
தேறிய பெயர்வு
குடிவரவு
குடியகல்வு
பிறப்புக்களின் எண்ணிக்கை
-
மரணங்களின் எண்ணிக்கை
பருமட்டான பிறப்பு வீதம்
பருமட்டான இறப்பு வீதம்
சிசு மரண வீதம்
தாய்மரண வீதம்

**தேர்ச்சி 11** : அபிவிருத்தியின் பல்வேறுபட்ட தன்மையினை சமநிலையாக விளக்கி நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கு பங்களிக்க வேண்டியதன் அவசியத்தை காட்சிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 11.10:** இலங்கையின் வேலைவாய்ப்பு மற்றும் வேலையின்மையின் தொகை ரீதியான மற்றும் கட்டமைப்பு நிலைமையை விளக்குவார்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- வேலை வாய்ப்பு என்பதனை வரைவிலக்கணப்படுத்தி அதன் கட்டமைப்பினை முன்வைப்பார்.
- நிறை தொழில் மட்டம், மற்றும் குறை தொழில் மட்டம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை உதாரணங்களுடன் காட்டுவார்.
- வேலையின்மை என்பதனை வரைவிலக்கணப்படுத்தி அதன் கட்டமைப்பினை முன்வைப்பார்.
- வேலையின்மையின் விளைவுகளை உதாரணங்களுடன் விளக்குவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- வேதனமொன்று அல்லது வேறு பொருளாதார பிரதிபலனொன்றை எதிர்பார்த்து பயன்மிக்க பொருளாதார நடவடிக்கை ஒன்றில் ஈடுபடுவதல் வேலை வாய்ப்பாகும்.
- குடிசன மற்றும் புள்ளி விபரத்திணைக்கள வரைவிலக்கணத்துக் கேற்ப இலங்கையின் வேலைவாய்ப்பு என்பது கணிப்பிடும் காலத்தினுள் ஒரு மணித்தியாலம் அல்லது அதைவிடக் கூடிய காலம் வேதனம், இலாபம் அல்லது கொடுப்பனவொன்றை எதிர்பார்த்து அல்லது குடும்ப வருமான மீட்டும் நடவடிக்கை யொன்றில் ஈடுபட்டிருத்தல்.
- வேலை வாய்ப்பு வீதம் பின்வருமாறு கணிப்பிடப்படும்.

$$\text{வேலைவாய்ப்பு வீதம்} = \frac{\text{வேலை வாய்ப்பு}}{\text{உழைபாளர் படை}} \times 100$$

- ஒரு நாட்டில் 97% ஆனோர் வேலையில் இருப்பவர்களாயின் அது நிறை தொழில் மட்டமாகும்.
- பொருளாதார வளர்ச்சி காணப்படும்போது நிறைதொழில் மட்டம் காணப்படும்.
- நிறைதொழில் மட்டம் காணப்படுகையில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து செல்லும்.
- நிறைதொழில் மட்டம் காணப்படுகையில் சமூக விரோதச் செயல்கள் குறைவடையும்.

- குறை தொழில் மட்டம் பல வகைகளாகக் காணப்படலாம் என்பது.
  - முழு நேரம் வேலையில் இருந்தாலும் குறைந்த எல்லை வருமானத்தைப் பெறுதல்.
  - தகுதியை விடக் குறைந்த வேலையிலிருத்தல்.
  - முழு நேரமும் வேலை கிடைக்காமை.
  - குறை தொழில் மட்ட வீதம் பின்வருமாறு கணிக்கப்படும் என்பது.

$$\text{குறை தொழில் மட்ட வீதம்} = \frac{\text{குறை தொழில் மட்டத்தில் உள்ளோர் தொகை}}{\text{வேலை வாய்ப்பில் உள்ளோர் தொகை}} \times 100$$

- குறை தொழில் மட்டத்தின் பொருளாதார விளைவுகள் கீழ்த் தரப்படும் வகையிலாகும்.
  - பொருளாதாரத்தில் உற்பத்தி குறைவடைதல்.
  - உழைப்பு வீணாகுதல்.
  - வருமானப் பரம்பலில் ஏற்றத்தாழ்வு ஏற்படல்.
  - உழைப்பின் விளைதிறன் குறைவடைதல்
  - உழைப்பாளனின் வருமானம் குறைவதால் வறுமை ஏற்படல்
  - சமூக விரோதச் செயற்பாடுகள் அதிகரித்தல்.
- வேலையின்மையில் பல வகைகள் காணப்படும்.
- வேலையின்மையைப் பின்வருமாறு கணிப்பிடலாம்.

$$\text{குறைதொழில் மட்ட வீதம்} \quad \frac{\text{வேலையின்மையில் உள்ள சனத்தொகை}}{\text{உழைப்பாளர் படை}}$$

- இலங்கையின் வேலையின்மையின் தன்மை பற்றி உதாரணங்கள்:
  - அண்மைக்காலத்தில் வேலையின்மை குறைந்து செல்லும் நிலை காணப்படல்.
  - கல்வி கற்ற இளைஞர்களிடையே வேயின்மை வீதம் உயர்வாக இருத்தல்.
  - பெண்களுக்கான வேலையின்மை சார்பு ரீதியில் உயர்வாக இருத்தல்.
  - கிராமியத் துறையில் வேலையின்மை சார்பு ரீதியில் அதிகமாகும்.
- வேலையின்மையின் விளைவுகளுக்கான உதாரணங்கள்:
  - சமூகத்துக்குக் கிடைக்க வேண்டிய உச்ச மட்ட உற்பத்தி இழக்கப்படல்.
  - வேலை இன்மையால் வருமானமிழக்கப்பட்டு வறுமை அதிகரித்தல்.
  - சமூக விரோத செயல்கள் அதிகரித்தல்.

- அரசின் சமூக நல செலவுகள் அதிகரிப்பு
- அரசியல் மற்றும் சமூக அமைதியின்மைகள் ஏற்படல்.

- இலங்கையின் வேலையின்மையைக் குறைப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கான உதாரணங்கள்:
  - உயர் பொருளாதார வளர்ச்சியொன்றை அடைந்து கொள்ளல்.
  - கீழ்க்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தல்.
  - கைத்தொழிலுக்கான அடிப்படையை விரிவாக்குதல்.
  - கிராமிய சிறு கைத்தொழில்களை ஆரம்பித்தல்.
  - தொழிற் பயிற்சிகளை வழங்கல்
  - வெளிநாட்டு வேலைவாய்ப்பை அதிகரித்தல்.
  - சுயதொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை விரிவடையச் செய்தல்.

**தேர்ச்சி 11** : அபிவிருத்தியின் பல்வேறுபட்ட தன்மையினை சமநிலையாக விளக்கி நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கு பங்களிக்க வேண்டியதன் அவசியத்தை காட்சிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 11.11:** இலங்கையின் ஊழியச் சந்தை தொடர்பான தர்க்கரீதியான விடயங்களை விளக்குவர்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :
- உழைப்பின் வெளிநோக்கிய நகர்வினை விளக்கி அதற்கான காரணங்களை உதாரணத்துடன் முன்வைப்பார்.
- உழைப்பின் வெளியேற்றத்தின் பொருளாதார விளைவுகளை விளக்குவார்.
- ஊழியச் சந்தையின் விளக்கி அதற்கான காரணங்களை உதாரணங்களுடன் விளக்குவார்.
- ஊதியச் சந்தையின் பொருளாதார விளைவுகளை விளக்குவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- உழைப்பாளர்கள் ஒரு பிரதேசத்திலிருந்து இன்னொரு பிரதேசத்துக் குச் செல்லுவது உழைப்பின் நகர்வாகும் என்பது.
- உற்பத்திக் காரணிகளின் வேறுபட்ட தன்மை, வேதன மட்டம், உழைப்பு நிரம்பலின் வேறுபாடு என்பவற்றுக்கேற்ப உழைப்பு நகர்வு நடைபெறும்.
- ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு நிகழும் உழைப்பு நகர்வின் காரணமாக வேலையின்மை குறைவடைகின்றது என்பது.
- கல்விகற்ற மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறுவது மூளைசாலிகள் வெளியேற்றம் எனக் கருதப்படுவதுடன் அது பொருளாதாரத்தில் ஒரு பிரச்சினையாகும்.
- மத்திய கிழக்கு வேலைவாய்ப்புக்காக பெருமளவானவர்கள் வெளிநாடு செல்வதுடன் அதில் பெண்களே அதிகமானவர்கள்.
- ஊழியம் வெளிநாடுகளுக்குக் கவரப்பட்டுச் செல்வதனால் வெளிநாட்டுச் செலாவணியானது மாற்றல்கள் என்ற வடிவில் இலங்கைக்குக் கிடைக்கிறது.
- உள்நாட்டு ஊழியச் சந்தையில் காணப்படுகிறது.
- அதாவது உழைப்பின் கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமைகளை விரைவாக மாற்றமடையாமை என்பதாகும்.
- ஊழியச் சந்தையில் உழைப்பின் கேள்விக்குப் போதுமான நிரம்பல் காணப்படவில்லை.

- ஊழியச் சந்தையினைப் பின்வருமாறு வரிப்படமாகக் காட்டலாம்




- உயர்ந்த வேதன மட்டத்தில் உழைப்பின் கேள்வியை விட நிரம்பல் அதிகமாகும்.
- காலமாற்றத்துடன் ஊழியச் சந்தையில ஏற்படுகின்ற கேள்வி, நிரம்பல், நிலைமைகள் அரச தலையீட்டுக்கேற்ப ஊழியச் சந்தையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.
- உழைப்பின் கேள்விக்கேற்ப உழைப்பின் நிரம்பலில் நெகிழ்ச்சித் தன்மையொன்று காணப்படாமை ஒரு பிரச்சினையாகும்.

**தேர்ச்சி 12** : சுதந்திரத்தின் பின்னரான இலங்கைப் பொருளாதாரத்தின் செயற்பாட்டினைச் சமநிலையாக மதிப்பிடுவார்.

**தேர்ச்சி மட்டம் 12.1** : இலங்கைப் பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பின் துறைசார் கட்டமைப்பை விபரிப்பர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :

- இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரச மற்றும் தனியார் துறையின் பங்களிப்பினை ஒப்பிடுவார்.
- இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அண்மைக்கால மாற்றங்களையும் அதற்கான காரணங்களையும் விளக்குவார்.
- இலங்கையின் வேலைவாய்ப்பின் துறைசார் கட்டமைப்பை விளக்குவார்.
- இலங்கையின் வேலைவாய்ப்புக்கு அரச மற்றும் தனியார் துறையின் பங்களிப்பை ஒப்பிடுவார்.
- இலங்கை வேலைவாய்ப்பு அமைப்பின் அண்மைக்கால மாற்றங்களையும் அதற்கான காரணங்களையும் விளக்குவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை குடிசனமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் 13 துறைகளாக வகைப்படுத்தியுள்ளது.
- அவைகள் பிரதானமாக விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவை என மூன்று பிரதான துறைகளின் கீழ் தயாரிக்கப் பட்டுள்ளன.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைசார் கட்டமைப்பு விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் ஆகிய துறைகளைக் கொண்டிருக்கின்றது.
- சுதந்திரத்தின் பின் இலங்கையில் ஒவ்வொரு காலப்பகுதியிலும் துறைரீதியான பங்களிப்பு மாற்றமடைந்திருப்பதுடன் அதற்கான உதாரணங்கள் கீழே தரப்பட்டள்ளன.

| | **1950** | **1970** | **1980** | **2000** | **2009** |
|---|---|---|---|---|---|
| விவசாயத்துறை | 46.3% | 28.3% | 27.6% | 19.9% | 12.6% |
| கைத்தொழிற்துறை | 16.9% | 23.8% | 29.6% | 27.3% | 29.7% |
| சேவைத்துறை | 36.9% | 47.9% | 42.8% | 52.8% | 57.7% |

- ஒரு நாட்டின் உழைப்பாளர் படையில் எந்தளவானோர் விவசாய, கைத்தொழில் மற்றும் சேவைத் துறையில் ஈடுபட்டுள்ளனர் என்பது வேலைவாய்ப்பின் துறைகள் கட்டமைப்பின் மூலம் காட்டப்படும்.

- சுதந்திரத்தின் பின் இலங்கையின் வேலை வாய்ப்பின் துறைகள் பங்களிப்புக்கள்:

| | **1953** | **1977** | **1996** | **2008** |
|---|---|---|---|---|
| விவசாயத்துறையில் வேலை வாய்ப்பு | 53% | 46% | 38% | 32.7% |
| கைத்தொழில்துறையில் வேலை வாய்ப்பு | 13% | 14% | 22% | 26.3% |
| சேவைத்துறையில் வேலை வாய்ப்பு | 34% | 40% | 40% | 41% |

- கைத்தொழில் மற்றும் சேவைத்துறை படிப்படியாக வரிவடையும் போது உழைப்பாளர் படையினால் அதற்காக வழங்கப்படுகின்ற பங்களிப்பும் மாற்றமடைகிறது.
- ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியுடன் அந்நாட்டு மக்களின் வருமான நிலைமையும் அதிகரித்து விவசாயத்துறையின் முக்கியத்துவமானது கைத்தொழில் மற்றும் சேவைத்துறை நோக்கிச் செல்லும்.
- நாடான்றிலன் அபிவிருத்தி அதிகரிக்கின்றபோது விவசாயத் துறையை விட கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகளில் கட்டமைப்பு மாற்றம் ஏற்படும்.
- அதற்காக அரசதுறையும் தனியார் துறையும் பங்களிக்கும் விதத்துக்கு ஏற்ப அதன் பங்குபற்றல் தீர்மானிக்கப்படுகின்றது.

**தேர்ச்சி 12** : சுதந்திரத்தின் பின்னரான இலங்கைப் பொருளாதாரத்தின் செயற்பாட்டினைச் சமநிலையாக மதிப்பிடுவார்.

**தேர்ச்சி மட்டம் 12.2** : சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் மொத்த வளங்கள், மற்றும் அதன் பயன்பாடு என்பவற்றை விளக்கி பொருளாதார வளர்ச்சி ஒழுங்கினைப் பகுப்பாய்வு செய்வர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- இலங்கையின் மொத்த வளங்கள் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை விளக்குவார்.
- வளப்பயன்பாட்டுத் துறைகளை விளக்குவார்.
- இலங்கையின் சேமிப்பு மூலாதாரங்களை விளக்குவார்.
- சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி ஒழுங்கின் விசேடமான கால கட்டங்களை உதாரணங்களின் அடிப்படையில் விளக்குவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- இலங்கையின் மொத்த வளங்களின் கட்டமைப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியையும் பொருட்கள், சேவைகளின் இறக்குமதி களையும் கொண்டிரக்கும.
- சுதந்திரத்தின்பின் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கட்டமைப்பில் மாற்றம் மூலமாக மொத்த வளங்கள் ஒவ்வொரு காலப்பகுதியிலும் மாற்றமடைந்துள்ளன

| | **2005** | **2006** | **2009** |
|---|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 64.3% | 70.9% | 78.2% |
| பொருட்கள், சேவைகளின் இறக்குமதி | 35.7% | 29.1% | 21.8% |

- நாடொன்றின் மொத்த வளங்களின் அளவை அதிகரித்துக் கொள்வதற்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கு பொருளாதாரக் கொள்கைகளும் புதிய உத்திகளும் கையாளப் பட்டுள்ளன.
- இலங்கையில் வளப்பயன்பாடானது நுகர்வு, முதலீடு மற்றும் பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதி என்பவற்றை உள்ளடக்கிய தாகும்.

- சுதந்திரத்தின் பின் இலங்கையின் மொத்த வளப் பயன்பாடு ஒவ்வொரு காலப்பகுதியிலும் மாற்றமடைந்துள்ளது.

| | **2005** | **2006** | **2009** |
|---|---|---|---|
| நுகர்வு | 58% | 58.8% | 64.1 % |
| முதலீடு | 20% | 37.5% | 19.2% |
| பொருட்கள் மற்றும் கோவைகளின் | | | |
| ஏற்றுமதி | 22% | 21.3% | 16.7% |

- இலங்கையின் தேசிய சேமிப்பு உள்நாட்டு சேமிப்பு மற்றும் வெளிநாட்டு சேமிப்புக்களை உள்ளடக்கியது.
- தனியாளர் மற்றும் அரச சேமிப்புக்களை உள்ளடக்கியதே உள்நாட்டுச் சேமிப்பாகும்.
- வெளிநாட்டுத் தேறிய காரணி வருமானம் மற்றும் வெளிநாட்டுத் தேறிய தனியார் மாற்றல்கள் என்பவற்றை உள்ளடக்கியதே வெளிநாட்டுச் சேமிப்பாகும்.
- இலங்கையின் சேமிப்பு தொடர்பான தகவல்கள்:

| | **2001** | **2006** | **2009** |
|---|---|---|---|
| உள்நாட்டுச் சேமிப்பு | 15.8% | 17.3% | 18 % |
| வெளிநாட்டுச் சேமிப்பு | 4.5% | 6.1% | 5.9% |
| தேசிய சேமிப்பு | 20.3% | 23.4% | 23.9% |

- ஒரு நாட்டின் தேசிய சேமிப்பை அதிகரித்துக் கொள்வதற்காக வெளிநாட்டுத் தேறிய தனியார் மாற்றல்களை அதிகரித்துக் கொள்ள வேண்டும்.
- ஒரு நாட்டின் உள்நாட்டுச் சேமிப்பு மற்றும் தேசிய சேமிப்பு அதிகரித்துக் கொள்வதனால் முதலீட்டு நிலைமைகள் உயர்வடை வதுடன் பொருளாதார வளர்ச்சிக்கு அதனால் சிறப்பான பங்களிப் பொன்று கிடைக்கும்.
- மக்களது வருமான மட்டம் அதிகரித்துச் செல்கின்றபோது அடிப்படை உணவு உற்பத்திக்கு மேலாக கைத்தொழில் பொருட்கள் மற்றும் சேவைகளின் கேள்வி அதிகரித்து அதன் உற்பத்தியானது உயர்வடையும்.
- சுதந்திரத்தின் பின் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி ஒழுங்கினை சிறப்பான கால கட்டங்கள் இரண்டின் அடிப்படையில் காட்டலாம்.
  - 1948 - 1977 வரையான காலம்
  - 1977 இன் பின்னான காலம்

- 1948 - 1977 வரையான காலத்தில் பொருளாதார வளர்ச்சிக்காக அரசாங்கம் பெரும்பங்களிப்பைப் பெற்றுக் கொடுத்ததுடன் அரசை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் ஒன்று காணப்பட்டது.
- 1948 - 1977 வரையான காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்காகப் பின்பற்றப்பட்ட கொள்கைகள் பின்வருமாறு:
  - 1948 - 1959 குடியேற்றவாத - சுதந்திர பொருளாதாரக் கொள்கை
  - 1960 - 1977 உள்நோக்கிய - பொருளாதாரக் கொள்கை (இறக்குமதிப் பதிலீட்டு மற்றும் சமூக நலப் பொருளாதாரம்)
- 1977ஆம் ஆண்டில் இலங்கையில் அதுவரை காலப்பட்ட உள்நோக்கிய பொருளாதாரக் கொள்கைக்குப் பதிலாக வெளிநோக்கிய பொருளாதாரக் கொள்கை அல்லது திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது.
- வெளிநோக்கிய பொருளாதாரக் கொள்கைகளின் கீழ் அரசின் செயற்பாடு வரையறுக்கப்பட்டதுடன் சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்பாகக் காணப்பட்ட கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன.

**தேர்ச்சி 12** : சுதந்திரத்தின் பின்னரான இலங்கைப் பொருளாதாரத்தின் செயற்பாட்டினைச் சமநிலையாக மதிப்பிடுவார்.

**தேர்ச்சி மட்டம் 12.3** : இலங்கையின் விவசாயத்துறையுடன் தொடர்புடைய தர்க்க ரீதியான கருத்துக்களை விளக்குவர்.

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்** :
- பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டுக்கு விவசாயத்துறையின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- உள்நாட்டு விவசாயம் மற்றும் பெருந்தோட்ட விவசாயத்துறைக் கிடையிலான வேறுபாட்டை உதாரணங்களுடன் விளக்குவார்.
- விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களைப் பட்டியற்படுத்துவார்.
- உள்நாட்டு மற்றும் பெருந்தோட்ட விவசாயத்துறையில் காணப் படுகின்ற எற்றத்தாழ்வுகள் மற்றும் பிரச்சினைகளையும் விளக்குதவார்.
- விவசாயத்துறையின் மொத்த செயலாற்றத்தையும் போக்கையும் விளக்குவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- 1977 இற்கு முன் இலங்கையில் விவசாயத்துக்கு முக்கியமான இடமொன்று கிடைத்தது.
- மொத்த உற்பத்தியில் சுமார் அரைவாசிப் பங்களிப்பு விவசாயத்தி னால் கிடைத்தது.
- 1977 இற்க முன் காணப்பட்ட அரசை மையமாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கையினுள் பொதுவாக கிராமியத்துறையில் உணவுப் பயிர்ச்செய்கையும் நெல் உற்பத்தியும் அடங்கியிருந்தன.
- மொத்த உள்நாட்ட உற்பத்திக்கு விவசாயத்துறையின் பங்களிப்பு படிப்படியாகக் குறைவடைந்தது.

  உதாரணம்:

  1950ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு விவசாயத் துறையின் பங்களிப்பு 46.3% ஆக இருக்க 2009இல் அது 12.6% ஆகக் குறைந்துள்ளது.
- நிகழ்காலத்தில் விவசாயத்துறையின் கூடுதலான பங்களிப்பு மரக்கறி, பழவகை என்பவற்றைக் கொண்ட வேறு பயிர்களால் ஆகும்.
- இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம் கிடைப்பது முறையே நெல் மற்றும் பெருந்தோட்டப் பயிர்களுக்காகும்.

- முன்னர் உள்நாட்டு விவசாயத்தில் காணப்பட்ட பிரச்சினைகளுக்கு உதாரணம் கீழ்த்தரப்பட்டுள்ளவாறாகும்.
- விவசாயப் பொருட்களின் இறக்குமதியினால் உள்நாட்டு விவசாயத் துக்குப் பிரச்சினை ஏற்பட்டது விவசாய மூலப் பொருட்களின் விலைகள் உயர்வடைந்தன.
- பலவீனமான நீர் முகாமைத்துவம், உயர் ரக விதைகள் கிடைக்காமை, கிருமித்தாக்கம் போன்ற பிரச்சினைகள் என்பது.
- நிலந்துண்டாடப்படல், குத்தகை விவசாயிகளின் உரிமைப் பிரச்சினை, சந்தைப்படுத்தல் பிரச்சினை, அறுவடைக்குப் பிந்திய சேதம்.
- பெருந்தோட்டப் பயிர்களுக்காக பொருளாதார நிலம் பயன்படுத்தப் படல்.
- விவசாயத் துறையை முன்னேற்றுவதற்காக அண்மைக்காலத்தில் கொண்டு வரப்பட்டுள்ள கொள்கை ரீதியான உபாயங்கள்:
    - விவசாயத்தில் கையாளப்படும் தொழில்நுட்பத்தை முன்னேற்று வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல்.
    - வர்த்தகச் சேவைகளுக்கு வலுவூட்டல்
    - தனியார் முயற்சியாளரைப் பலப்படுத்தல்
    - உணவு பதப்படுத்தல் தொழில்நுட்பத்தை முன்னேற்றல்.
    - பழ உற்பத்தியையும் மலர்ச்செய்கையையும் முன்னேற்றல்.
    - உள்நாட்டுப் பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல்.
    - விவசாயத்துக்குரிய தகவல் தொழில்நுட்பத்தை கிராமிய மட்டம் வரை விரிவடையச் செய்தல்.
    - வளங்களைப் பாதுகாத்தல்.
- விவசாயத்துறையை முன்னேற்றுவதற்கு அண்மைக்காலத்தில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்:
    - பால் கிராமங்கள் 50 உருவாக்கம்.
    - பெருந்தோட்ட விவசாய அபிவிருத்திக்கு தேசிய ரீதியான திட்டம் ஒன்றை அமைத்தல்.
    - தேயிலை, தெங்கு, இறப்பர் பெருந்தோட்டப் பயிர்களின் அபிவிருத்திக்கு நிதியம் ஒன்றை ஏற்படுத்தல்.
    - உர மானியம்

- விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் நடவடிக்கைகள் பின்வருமாறு:
  - பால்கிராமங்கள் உருவாக்கல்
  - தேங்காயை அடிப்படையாகக் கொண்டவை
    - தேங்காயெண்ணெய்
    - கொப்பரா
    - தும்பு அடிப்படையிலான கைத்தொழில்கள்
  - பாலை அடிப்படையாகக் கொண்டவை
    - ஐஸ்கிரீம்
    - யோகட்
    - தயிர்
  - றப்பரை அடிப்படையாகக் கொண்டவை
    - ரயர் உற்பத்தி
    - மெத்தைகள்

**தேர்ச்சி 12** : சுதந்திரத்தின் பின்னரான இலங்கைப் பொருளாதாரத்தின் செயற்பாட்டினைச் சமநிலையாக மதிப்பிடுவார்.

**தேர்ச்சி மட்டம் 12.4** : இலங்கையின் கைத்தொழில் துறையுடன் தொடர்புடைய தர்க்கரீதியான விடயங்களை விபரிப்பர்.

**பாடவேளை** : 08

**கற்றற் பேறுகள்** :

- கைத்தொழில் துறையின் மொத்த செயற்றிறன் மற்றும் போக்குகளை விபரிப்பார்.
- இலங்கையின் கைத்தொழில் துறையில் முன்னேற்றத்துக்கு சிறிய - மிகச்சிறிய முயற்சியாளர்களின் செயலாற்றம் முக்கியம் பெறும் விதத்தை உதாரணங்களுடன் விளக்குவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான பங்களிப்புக்கேற்ப கைத்தொழில் துறை உற்பத்தி மாற்றமடைந் துள்ள விதத்தை மூன்று காலகட்டங்களாகப் பிரித்துக் காட்ட முடியும்.

**மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்களிப்புக்கேற்ப**

| வருடம் | கைத்தொழில்துறை |
|---|---|
| 1950 - 1970 | 20 - 24 |
| 1980 - 2000 | 30 - 27 |
| 2000 - 2008 | 30 - 29 |

இதன்படி பருமட்டாக 30% ஆன அளவு கைத்தொழில் துறையின் பங்களிப்புக் காணப்படுகின்றது.

- இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைசார் கட்டமைப்புக்கு ஏற்ப கைத்தொழில் துறையினை 4 உபதுறைக ளாகப் பிரிக்கலாம்.
  - சுரங்கமறுத்தலும் கல்லுடைத்தலும்
  - உற்பத்திக் கைத்தொழில்கள்
  - மின்சாரம், வாயு, நீர்
  - நிர்மாணத்துறை
- இலங்கையின் கைத்தொழில் துறையில் 50% இற்கும் அதிகமான அளவு உற்பத்திக் கைத்தொழில்களில் அடங்குவதுடன் உற்பத்திக் கைத்தொழில்களை வகைப்படுத்தும் சர்வதேச தரப்படுத்தலுக்கு ஏற்ப முன்னணியில் இருக்கும் உற்பத்திக் கைத்தொழில்களை இவ்வாறு வரிசைப்படுத்த முடியும்.
  - புடவை ஆடைகள் மற்றும் தோலுற்பத்திகள்
  - உணவு, குடிபானம், மற்றும் புகையிலை
  - பிளாஸ்டிக், இரசாயனப் பொருட்கள் கனிய எண்ணெய் மற்றும் இறப்பர் உற்பத்திகள்.

- உலோகமல்லாத மற்றும் தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள்.

- இலங்கையின் கைத்தொழில் துறையின் மொத்த செயலாற்றத்தினுள் அடிக்கடி கைத்தொழில் அபிவிருத்திக்கான கைத்தொழில் கொள்கைகள் செயற்படுத்தப்பட்டன செயற்படுத்தப்படுகின்றன.
  - இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் ஊக்குவிப்பு(ISI)
  - ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில்கள் - EOI (வெளிநாட்டுச் சந்தையை இலக்காகக் கொண்ட கைத்தொழில்கள்)
  - சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில் விருத்தியை ஏற்படுத்தல்.
- கைத்தொழில் துறையின் வளர்ச்சிக்காக அரசின் மூலம் செய்யப் பட்டுள்ள நடவடிக்கைகள்:
  - உகல கந்தையில் பிரவேசிப்பதற்கான வழிகளை விரிவு படுத்தல்.
  - அரசின் மூலம் தனியார் துறைக்கு உயர் தொழில்நுட்பப் பாவனைக்காக நிதி ஊக்குவிப்புக்கள் பெற்றுக்கொடுத்தல்.
  - தனியார் மற்றும் அரச துறையின் இலக்கு நோக்கிய ஊக்கு விப்புகள் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள பிராந்தியக் கைத் தொழிலாக்க நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல்.
- 2006 - 2016 இலங்கையின் பத்தாண்டுக் கைத்தொழல் அபிவிருத் தித்திட்டத்தின் நோக்கங்கள்:
  - இலங்கையில் உயர் விளைதிறன் கொண்ட போட்டிக் கைத் தொழில்களை உருவாக்கல்.
  - தேசிய புதிய கண்டுபிடிப்புக்கள் மூலம் பிரதேச ரீதியான கைத்தொழில்களை ஆரம்பித்தல்.
  - மிகவும் சிறியதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சிறு தொழில்களை முன்னேற்றுதல்.
  - நிறுவனங்களின் போட்டித்தன்மையை முன்னேற்றுவதற்காக அரசின் மூலம் கீழ்க்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
  - பூகோள அடிப்படையில் கைத்தொழில் சொத்தணிகள் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்புக்களை ஏற்படுத்தல்.
  - வெளிநாட்டுக் கொள்கையின் கீழ் எல்லா நாடுகளுடனும் ஏற்படும் தொடர்பின் அடிப்படையில் நேரடி முதலீடுகளை அதிகரித்துக் கொள்ளல்.
- பிரதேச ரீதியாக காணப்படும் சிறு முயற்சியாளர்களை அறிவுறுத்தி அவர்களுக்கு அவசியமான அரச நிதி ஒதுக்கீடு மற்றும் வங்கிக்கடன் பெற்றுக் கொடுத்தலுக்கு நடவடிக்கை எடுத்தல்.
- சிறிய முயற்சியாளர் என்போர் சிறியளவான மூலதனப் பயன்பாடு கொண்ட குடும்ப உழைப்பைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்திச் செல்லப்படுகின்ற மிகவும் சிறிய வியபார முயற்சிகளாகும்.
- இலங்கையில் கைத்தொழில்துறையின் வளர்ச்சிக்கு சிறு முயற்சியானது பங்களிப்பு முக்கியம் பெறுகிறது.

**தேர்ச்சி 12** : சுதந்திரத்தின் பின்னரான இலங்கைப் பொருளாதாரத்தின் செயற்பாட்டினைச் சமநிலையாக மதிப்பிடுவார்.

**தேர்ச்சி மட்டம் 12.5** : இலங்கையின் சேவைத்துறையுடன் தொடர்புடைய அம்சங்களை விபரிப்பர்.

**பாடவேளை** : 08

**கற்றற் பேறுகள்** :
- பொருளாதார வளர்ச்சிச் செயற்பாட்டில் சேவைத்துறையின் பங்களிப்பு முக்கியம் பெறும் விதத்தை எடுத்துக் காட்டுவார்.
- சேவைத்துறையின் கட்டமைப்பு மற்றும் பிரதான போக்குகளை விபரிப்பார்.
- கீழே கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் சேவைத்துறையின் வளர்ச்சி மற்றும் கட்டமைப்பு மாற்றம் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தை உதாரணம் மூலம் விளக்குவார்.
- கீழ்க்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்கையில்தனியார் துறையின் பாங்களிப்பு முக்கியம் பெறும் விதத்தை விளக்குவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டிற்கு ஏனைய துறைகளுக் குச் சார்பாக சேவைத்துறையின் பங்களிப்பு அதிகரித்துள்ளது.
- சுதந்திரம் பெற்ற காலத்தில் 34% பங்களிப்புச் செய்த சேவைத் துறை 1977 இல் 46% வரை அதிகரித்து 1991 - 2000 ஆம் தசாப்தத்தில் 50% வரையும் 2009ஆம் ஆண்டாகும்போது 57.7% வரையும் அதிகரித்துள்ளது.
- சேவைத்துறை பொருளாதாரத்தில் விரிவடைந்து கொண்டு வருகின்றது.
- சேவைத்துறை விரிவடைவதன் முக்கியத்துவத்தைப் பின்வரும் அடிப்படையில் காட்டலாம்.
  - ஒரு நாடு பொருளாதார ரீதியில் வேகமாக வளர்ச்சியடையும் போது சேவைகளுக்கான கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்குக்கூடிய பெறுமதியில் அமைவதால் சேவைத்துறையில் முன்னேற்றம் ஏற்படல்.
  - சேவைத்துறைக்கு அவசியப்படுகின்ற இயற்கை வளங்களின் அளவானது ஏனைய துறைகளுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவாக இருப்பதனால் இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டு சேவைத்துறை விரிவாக்கம் முக்கியம் பெறுவது.

- நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி எண்ணக்கருவுக்குரிய இயற்கை மூலதனம் பாதுகாக்கப்படுவதனால் உலக மயமாதல் செயற்பாட்டினுள் சேவைத்துறை விரிவடைவதற்கு காரண மாதல். அதன் மூலம் உயர்ந்த நலன்களைப பெறக்கூடியதாக இருத்தல்.
- விவசாய மற்றும் கைத்தொழில் துறைகளுக்குச் சார்பாக சேவைத்துறை உயர் விளைதிறனைக் கொண்டிருத்தல்.
- அதிகரித்துச் செல்லும் சனத்தொகைக்கு அவசியமான வருமானம் உழைக்கும் சந்தர்ப்பங்களை உருவாக்கக் கூடியதாக இருத்தல்.
- விவசாய மற்றும் கைத்தொழில்துறை மீது சொத்துக்களை உருவாக்குவற்கு வினைத்திறனுள்ள துறையாக சேவைத் துறையினால் முக்கிய பங்களிப்புக் கிடைத்தல்.
- உற்பத்தி, விநியோகம் மற்றும் நுகர்வு ஆகிய துறைகளைத் தொடர்புபடுத்தி மக்களின் தெரிவினை விரிவுபடுத்த உதவுதல்.
- கொடுக்கல் வாங்கல் செலவுகளைக் குறைப்பதற்கு சேவைத் துறையின் பங்களிப்புக் கிடைத்தல்.
- உயர்வான பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் அடைந்து கொள்வதற்காக வினைத்திறனுள்ள கீழ்க்கட்டமைப்பு வசதி முறைமையொன்றும் சக்தி வாய்ந்த கண்காணிப்புச் சட்டக மொன்றும் காணப்படுவது முன்தேவையாகும்.

- கீழ்க்கட்டமைப்பு வசதிகளை இலக்காகக்கொண்ட சேவைகளாக போக்குவரத்துச் சேவை, தொலைத்தொடர்புச்சேவை, நீர் விநியோகம் வலுச்சக்தி போன்ற சேவைகளைக் குறிப்பிடலாம்.
- இச்சேவைகளை முன்னேற்றுவதற்காக வெளிநாட்டு உதவிகள் மற்றும் முதலீடுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது.
- கீழ்க்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக அரசு மற்றும் தனியார் துறைகள் ஆகிய இரண்டினதும் முதலீடுகளை மேலுயர்த்துவதற்காக அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.
- கொழும்பு - மாத்தறை அதிவேக பயணப் பாதையை இதற்கு உதாரணமாகக் காட்டலாம்.
- அரசின் பத்தாண்டு நோக்கிய அபிவிருத்திக் கொள்கைச் சட்டகம் (2006 - 2016) பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதன் கீழ்க்கட்டமைப்பு வசதிகளின் முக்கியம் பற்றி முக்கிய கவனம் செலுத்துகிறது.

- கீழ்க்கட்டமைப்பு வசதிச் செயற்றிட்டங்கள் பலவற்றை உள்ளடக்க பல்வேறு செயற்றிட்டங்கள் நாடு பூராகவும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமை.
  அதில் ஒரு செயற்றிட்டமாக ''ரன்தொர'' தேசிய கீழ்க்கட்டமைப்பு வசதிகள் எண்ணக்கருவைக் காட்டலாம்.
- ''ரன்தொர'' தேசிய கீழ்க்கட்டமைப்பு வசதிகள் என்ற அபிவிருத்திப் பிரவேசத்தின் கீழ் கிடைக்கின்ற வசதிகளுக்கு உதாரணங்களைப் பின்வருமாறு காட்டலாம்.
  - வீரவில விமான நிலையம்
  - ஹம்பந்தோட்டை துறைமுகத் தொகுதி
  - ஹம்பந்தோட்டை நிர்வாகத் தொகுதி
  - தெற்குப் போக்குவரத்து அபிவிருத்திச் செயற்றிட்டம்
  - நுரைச்சோலை அனல் மின்னுற்பத்தி நிலையம்
  - கெரவலபிட்டிய நிலக்கரி நிலையம்
  - மகாதம்புள்ளை அபிவிருத்தி
  - வடக்குப் பெருந்தெருக்கள்
  - யாழ்ப்பாண நீர்விநியோகத் திட்டம்
  - பாரிய கொழும்பு நீர் விநியோக அமைப்பினை மறுசீரமைப்புச் செய்தல்.
- இவ்வாறு கீழ்க்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக அரசு தனியார் துறையினைப் பல்வேறு முறைகளின் தொடர்புபடுத்திக் கொள்கிறது.
  உதாரணம்:
  BOT - நிர்மாணித்தல், இயக்குதல், மாற்றுதல்.
  BOO - நிர்மாணித்தல், உரிமைகொள்ளல், இயக்குதல்.
  BOOT- நிர்மாணித்தல், உரிமை கொள்ளல், இயக்குதல், மாற்றுதல்.

**தேர்ச்சி 12** : சுதந்திரத்தின் பின்னரான இலங்கைப் பொருளாதாரத்தின் செயற்பாட்டினைச் சமநிலையாக மதிப்பிடுவார்.

**தேர்ச்சி மட்டம் 12.6** : சமகாலப் பொருளாதார நிகழ்வுகளை விபரிப்பர்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்** :
- சமகாலத்தில் நிகழ்ந்துள்ள உள்நாட்டுப் பொருளாதார நிகழ்வு களின் பொருளாதார விளைவுகளை உதாரணங்களுடன் விளக்குவார்.
- சமகாலத்தில் நிகழ்ந்துள்ள சர்வதேச பொருளாதார நிகழ்வுகளின் பொருளாதார விளைவுகளை உதாரணங்களுடன் முன்வைப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**
- சமகாலத்தில் உள்நாட்டு வெளிநாட்டு ரீதியாக நடைபெறும் சமூக, அரசியல், பொருளாதார, கலாசார மாற்றங்கள் இந்த நாட்டுப் பொருளாதாரத்தைப் பாதிக்கும்.
- இச்சமகால பொருளாதார நிகழ்வுகள் பிரரதானமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிகழ்வுகள் என இரண்டாக வகைப்படுத்தப் படும.
- உள்நாட்டுச் சமகால பொருளாதார நிகழ்வுகளுக்கான உதாரணங் களைப் பின்வருமாறு முன்வைக்கலாம்.
  - சுனாமிப் பேரலைகள்
- சர்வதேச ரீதியான சமகால பொருளாதார நிகழ்வுகளுக்கான உதாரணங்களைப் பின்வருமாடறு காட்டலாம்.
  - சர்வதேச நிதி நெருக்கடி
  - உலகுக்கு அறிமுகம் செய்யப்படல்.
- உள்நாட்டு சமகாலப் பொருளாதார நிகழ்வுகள் இலங்கைப் பொருளாதாரத்துக்கு சாதகமான, பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதுடன் அவற்றைப் பின்வருமாறு உதாரணம் மூலம் விளக்கலாம.
- சுனாமி அனர்த்தம் காரணமாக கரையோரத்தை அண்மிய பிரதேசங்களில் கீழ்க்கட்டமைப்பு வசதி, கைத்தொழில்கள், மனித உயிர்கள், சொத்துக்களின் அழிவு இந்நாட்டின் அபிவிருத்திக்குப் பாதக விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

- சர்வதேச ரீதியான சமகாலப் பொருளாதார நிகழ்வுகள் இலங்கைப் பொருளாதாரத்துக்கு சாதகமான மற்றும் பாதகமான வகையில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்பது. அவற்றைக் கீழ்த்தரப்படும் வகையில் உதாரணம் மூலம் முன்வைக்கலாம்.
  - சர்வதேச நிதி நெருக்கடி காரணமாக சர்வதேச சந்தையில் கனிய எண்ணெய் விலைகள் அதிகரித்தல் எமது நாட்டில் கனிய எண்ணெய் விலை அதிகரிப்புக்குக் காரணமாகி இலங்கைப் பொருளாதாரத்தில் பாதக விளைவை ஏற்படுத்தி யுள்ளது.

    (காலரீதியாக இடம்பெற்றுள்ள பொருளாதார நிகழ்வுகளை உதாரணங்களைக் கொண்டு இலங்கைப் பொருளாதாரத்தைப் பாதித்துள்ள விதத்தை மாணவருக்கு முன்வைக்கவும்.)

# பாடசாலை மட்டக் கணிப்பீடு

## அறிமுகம்

கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு ஆகியன கல்விச் செயன்முறைகளின் முக்கிய மூன்று கூறுகளாகும் என்பதும், கற்றல் கற்பித்தலின் முன்னேற்றத்தை அறிய கணிப்பீடு மதிப்பீட்டை பயன்படுத்த வேண்டும் என்பதும் எல்லா ஆசிரியர்களும் தெளிவாக அறிந்திருக்க வேண்டிய ஒரு விடயமாகும். அவை ஒன்றன் மீது ஒன்று செல்வாக்குச் செலுத்தும் அதேவேளை ஒவ்வொன்றும் மற்றையவற்றின் முன்னேற்றத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது ஆசிரியர்கள் யாவரும் அறிந்த உண்மையாகும். தொடர் (நிதமும் நிகழும்) மதிப்பீட்டு கோட்பாடுகளுக்கிணங்க கற்றல் நடைபெறும் போதே மதிப்பீடும் இடம்பெற வேண்டும். இது கற்றல் கற்பித்தல் செயன்முறையின் ஆரம்பப்பகுதி, இடைப்பகுதி, இறுதிப்பகுதி ஆகிய எந்த ஒரு சமயத்திலும் இடம் பெறலாம் என்பதை ஆசிரியர்கள் விளங்கிக் கொள்வது அவசியமாகும். தமது மாணவரை மதிப்பிட எதிர்பார்க்கும் ஓர் ஆசிரியர் கற்றல் கற்பித்தல் மதிப்பீடு ஆகியன தொடர்பான ஒழுங்கான திட்டமொன்றைப் பயன்படுத்தல் அவசியம்.

பாடசாலையை அடிப்படையாக கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டமானது ஒரு பரீட்சை முறையோ சோதனை நடாத்துவதோ அல்ல. அது மாணவர்களது கற்றலையும், ஆசிரியர்களது கற்பித்தலையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு தலையீடாகும். ஆதலால் மாணவர்களுக்கு அருகில் இருந்து அவர்களுடைய பலங்களையும் பலவீனங்களையும் இனங்கண்டு அவற்றிற்கு பரிகாரம் கண்டவாறு மாணவர்களை அவர்களது உச்ச வளர்ச்சி மட்டத்தை அடையச் செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு வேலைத் திட்டமாகும்.

கற்றல்- கற்பித்தல் செயன்மூலம் தேடல் செயன்முறையின் பால் மாணவர்கள் வழிப்படுத்தப் படுகின்றனர். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தை செயற்படுத்தும்போது மாணவர்களிடையே ஆசிரியர் சஞ்சரித்து அவர்கள் செய்யும் வேலைகளை அவதானித்து வழிகாட்டலை வழங்கிச் செயற்படல் வேண்டும் என எதிர் பார்க்கப்படுகின்றது. இங்கு மாணவர்கள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுவ தோடு மாணவர் ஆற்றல் அபிவிருத்தி எதிர்பார்த்தவாறு நடைபெறுகின்றதா என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாணவருக்கு தக்க அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்து அவற்றை மாணவர்கள் சரியாகப் பெற்றுக்கொண்டார்களா என உறுதிப்படுத்தல் கற்றல்-கற்பித்தல் ஊடாகத் நிகழ வேண்டும். அத்தோடு அதற்கு தக்க வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். மதிப்பீட்டில் (கணிப்பீட்டில்) ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு இரண்டு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அவை பொதுவாக பின்னூட்டல் / முன்னூட்டல் எனப்படும்.

மாணவர்களின் பலவீனங்களையும் இயலாமைகளையும் கண்டறிந்தபோது அவர்களது கற்றல் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்காகப் பின்னூட்டலையும் மாணவர்களின் திறமைகளையும் ஆற்றல்களையும் இனம்காணும்போது அவற்றை மேன்படுத்த, முன்னூட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையாகும்.

கற்றல்- கற்பித்தல் செயன்முறையின் வெற்றிக்காக பாடநெறியின் நோக்கங்களுள் எந்த நோக்கத்தை எந்த மட்டத்தில் நிறைவேற்ற முடிந்தது என்பதை இனங்காணல், மாணவர்களுக்கு அவசியமாகின்றது. மதிப்பீடுகள் மூலம் மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சி மட்டங்களைத் தீர்மானித்தல் சம்பந்தப்பட்ட ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படு கின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், வேறு பிரிவினர்களுக்கு மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய தகவல்களை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைய வேண்டும். இதற்குப் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை, தொடர்ச்சியாக மாணவரை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வாய்ப்பளிக்கும் பாடசாலை மட்ட மதிப்பீட்டு முறையாகும்.

மேற்படி நோக்கத்துடன் செயற்படும் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயன்முறையையும் மாணவர்களின் கற்றல் செயன்முறையையும் மேலும் வினைத்திறன் மிக்கதாக்குவதற்கு வினைத்திறன் மிக்க கற்றல் -கற்பித்தல் மதிப்பிடல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படுத்தத் தக்க அணுகுமுறைப் பேதங்கள் (வகைகள்) சில கீழே தரப்பட்டுள்ளன. இவை நீண்டகாலமாக ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவனத்தினாலும், பரீட்சை திணைக்களத்தினாலும் விளக்கமளிக்கப்பட்ட முறைகளாகும். எனவே அவை தொடர்பாக பாடசாலைத் தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் போதிய அறிவூட்டம் பெற்றிருப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது. இம்முறைகள் வருமாறு.

| | |
|---|---|
| 1. ஒப்படைகள் | 2. செயற்றிட்டங்கள் |
| 3. ஆய்வு | 4. நுணுகி ஆராய்தல் |
| 5. அவதானிப்புக்கள் | 6. கண்காட்சி / முன்வைத்தல்கள் |
| 7. களச் சுற்றுலாக்கள் | 8. குறுகிய எழுத்துப் பரீட்சைகள் |
| 9. அமைப்புக் கட்டுரைகள் | 10. திறந்த நூல் சோதனைகள் |
| 11. ஆக்கச் செயற்பாடுகள் | 12. செவிமடுத்தல் சோதனைகள் |
| 13. செய்முறைச் செயற்பாடுகள் | 14. பேச்சுக்கள் |
| 15. சுய ஆக்கங்கள் | 16. குழுச் செயற்பாடுகள் |
| 17. எண்ணக்கரு படங்கள் | 18. இரட்டைக் குறிப்பு - நாளேடு |
| 19. சுவர்ப் பத்திரிகைகள் | 20. வினா-விடை நிகழ்ச்சிகள் |
| 21. வினா-விடைப் புத்தகங்கள் | 22. விவாதங்கள் |
| 23. குழுக் கலந்துரையாடல்கள் | 24. கருத்தரங்குகள். |
| 25. உடனடிச் சொற்பொழிவு | 26. பாத்திரமேற்று நடித்தல் |

அறிமுகம் செய்யப்பட்டுள்ள மேற்படி கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டு முறைகள் அனைத்தையும், எல்லாப் பாடங்களினது எல்லா அலகுகளுக்காகவும் பயன்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படவில்லை. தமது பாடத்திற்கும் குறித்த பாட அலகிற்கும் பொருத்தமான முறைகளைத் தெரிவு செய்துகொள்வதற்கு அறிவூட்டம் பெற வேண்டும்.

மேற்படி ஆசிரியர் அறிவுரைப்படி வழிகாட்டியில் தமது மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தை கணிப்பிடப் பயன்படுத்தக்கூடிய கற்றல் கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு பேதங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் தமது மாணவர்களின் முன்னேற்றத்திற்காக அவற்றை தக்கவாறு பயன்படுத்தல் வேண்டும். இவற்றைப் பயன்படுத்தாது தவிர்த்தல் மாணவர் தமது அறிவாற்றல் மற்றும் உள எழுச்சி, உள இயக்க திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும் அவற்றை வெளிப்படுத்துவதற்கும் தடையாக அமையும்.

# கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுத் திட்டம்

**01. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம்** : முதலாந் தவணை (கருவி - 01)

**02. உள்ளடக்கப்படும் தேர்ச்சி மட்டங்கள்** : 7.1, 7.2, 7.3, 7.4

**03. உள்ளடக்கப்படும் விடயப்பரப்பு**

:
- பொது விலைமட்டம்
- விலைச்சுட்டெண்
- பணவீக்கம்
- பணவீக்கமின்மை
- பணச்சுருக்கம்
- பணவீக்கத்திற்கான காரணங்கள்
- பணவீக்கத்தின் விளைவுகள்

**04. கருவியின் தன்மை :**
- குழுச்செயற்பாடு

**05. கருவியின் நோக்கம்:**
- தேடியறிதல் மூலம் தகவல் திரட்டுதல்.
- வரைபடங்கள், அட்டவணைகள் மூலம் தகவல்களைச் சமர்ப்பித்தல்.
- இலங்கையின் பொது விலைமட்டம் பற்றி அறிந்து கொள்ளல்.
- பணவீக்கம், பணவீக்கமின்மை, பணச்சுருக்கம் தொடர்பான வேறுபாடுகளைச் சமர்ப்பித்தல்.
- பணவீக்கத்திற்கான காரணங்களை விசாரித்தல்.
- இலங்கையின் நடப்பு பணக்கத்தின் தன்மை பற்றிப் பரீட்சித்தல்.
- பொருளாதாரத்தின் பணவீக்கத்தினால் ஏற்படும் சாதக, பாதக விளைவுகளை தேடியறிதல்.

**06. கருவியைப் பயன்படுத்தும் முறை பற்றிய ஆலோசனைகள்:**

**ஆசிரியருக்கு** :
- தேர்ச்சி மட்டம் 7.4 இறுதியில் குழுச் செயற்பாட்டில் பங்குபற்ற வேண்டும் என்பதை தேர்ச்சி மட்டம் 7.1 இன் ஆரம்பத்தி லேயே மாணவருக்கு அறிவிக்கவும்.
- மதிப்பீட்டு நியதிகளை மாணவருக்குத் தெரியப்படுத்துதல்.
- பாட உள்ளடக்க விடயத்திற்கமைவாக தலைப்புக்களைத் தயாரித்தல்.

  உதாரணம்:
  - அண்மைக்கால இலங்கையின் பொது விலைமட்ட நடத்தைகள்
  - பணவீக்கத்திற்கான காரணங்களும் விளைவுகளும்

- தேர்ச்சி மட்டம் 7.4 முடிவில் தேவைக்கேற்ப மாணவர்களைக் குழுவாகப் பிரித்தல்.
- மாணவர் குழுக்களுக்குத் தலைப்புக்களை வழங்கி ஒப்படையைத் தயாரிப்பதற்கு அறிமுகம் வழங்குதல்.
- ஒப்படைகளைக் கையளிக்கவேண்டிய திகதியை மாணவர்களுக்கு அறிவித்தல்.
- ஒப்படைகளைச் சமர்ப்பிக்கும்போது ஆக்கபூர்வமான முறையில் வரைபுகள் அட்டவணைகளைப் பயன்படுத்துமாறு எடுத்துரைத்தல்.

**மாணவருக்கு** :
- ஆசிரியர் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டலின் படி செயற்பாடுகளில் ஈடுபடவும்.
- ஒப்படைகளைத் தயாரிப்பதற்கு குழு அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் பங்களிப்புச் செய்தல்.
- ஒப்படையில் தகவல்களை முழுமையாக உள்ளடக்கு வதற்கு ஊக்குவித்தல்.
- வரைபுகள், பட்டியல்களை ஆக்கபூவர்மான முறையில் முன்வைத்தல்.
- மதிப்பீட்டு நியதிகளைக் கவனமாக விளங்கிக் கொள்ளல்.
- ஆசிரியர் குறிப்பிட்ட கால எல்லைக்கேற்ப ஒப்படையைப் பூரணப்படுத்துதல்.

**07. புள்ளி வழங்கும் நியதிகள்:**
- தலைப்புக்குரிய விடயங்கள் முன்வைக்கப்படலும் ஒழுங்கமைப்பாக முன்வைத்தலும்.
- வரைபுகள், பட்டியல்கள் ஆக்கபூர்வமான முறையில் முன்வைத்தல்.
- பாட உள்ளடக்கத்தின் அளவு
- நேர முகாமைத்துவத்தைப் பேணுதல்.
- குழு அங்கத்தவர்களின் பங்களிப்பு அளவும் குழுவாக இயங்குமாற்றலும்

**08. புள்ளித்திட்டம்** :
- மிக நன்று - 04 புள்ளிகள்
- நன்று - 03 புள்ளிகள்
- சாதாரணம் - 02 புள்ளிகள்
- விருத்தியடைய வேண்டும் - 01 புள்ளி

## கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுத் திட்டம்

**01. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம்** : முதலாம் தவணை (கருவி - 02)

**02. உள்ளடக்கப்படும் தேர்ச்சி மட்டங்கள்** : 9.1, 9.2, 9.3, 9.4, 9.5

**03. உள்ளடக்கப்படும் விடயப்பரப்பு** :

- சந்தை முறைமையின் தோல்வி
- வெளிவாரி விளைவுகள்
- சந்தைப் பொருளாதாரமொன்றில் அரசாங்கத்தின் தொழிற்பாடு
- அரசாங்க நிதிக்கொள்கை

**04. கருவியின் தன்மை** :

- களப் பயணம்

**05. கருவியின் நோக்கம்:**

- ஆக்கபூர்வமாகவும் தர்க்கரீதியாகவும் அவதானிப்புச் செயற்பாட்டில் ஈடுபடுவர்.
- கூட்டாகச் செயற்படுவர்.
- சந்தை முறைமையின் தோல்விக்குரிய காரணங்களைத் தர்க்க ரீதியாக முன்வைப்பர்.
- நடைமுறை ரீதியாக வெளிவாரி விளைவுகளை அவதானித்து சந்தை முறைமை தோல்வியடைவதில் அதன் பாதிப்பினைப் பரீட்சிப்பர்.
- சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் அரசின் கடமைப் பாங்காக அமைய வேண்டியவை யாவை என்பதை விளக்குவர்.
- அதன்படி அரச நிதிக் கொள்கையை எவ்வாறு பயன் படுத்தலாம் என்பதை ஆய்வு செய்வர்.

**06. கருவியைப் பயன்படுத்தும் முறை பற்றிய ஆலோசனைகள்:**

**ஆசிரியருக்கு** :

- தேர்ச்சி மட்டம் 9.5 இறுதியில் களப் பயணத்தில் பங்குபற்றி அவதானிப்பு அறிக்கையொன்றைத் தயாரித்து முன்வைக்க வேண்டும் என்பதை 9.1இன் ஆரம்பத்திலேயே மாணவருக்கு அறிவிக்கவும்.
- வகுப்பு மாணவர்களுடன் பாடசாலைக்கு அருகில் அமைந் துள்ள வெளிவாரி விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய இடங் களை அவதானிப்பதற்காக சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

  (உதாரணம்: கல்லுடைக்கும் இடமொன்று, மிருக வளர்ப்புப் பண்ணை)
- நேர்கணிய வெளிவாரி விளைவுகள் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள் தொடர்பான விளக்கத்தை அதன் மூலம் பெற்றுக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.

- இதற்காக அரசாங்கம் தலையிடும் விதத்தை விளங்கிக் கொள்ள அவகாசம் அளிக்கவும்.
- அதன் மூலம் அரச நிதிக் கொள்கை ஒன்றின் முக்கியத் துவத்தை நடைமுறையில் மாணவர் விளங்கிக் கொள்வதற்கு அவகாசம் அளிக்கவும்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி அவர்களுக்கு அவதானிப்பு அறிக்கையைத் தயாரிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கவும்.

**மாணவருக்கு** :
- ஆசிரியர் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டலின் படி செயற்பாடுகளில் ஈடுபடவும்.
- அவதானிப்புச் செயற்பாட்டினூடாக தமது குழுவுக்குரிய தகவல்களைக் கலந்துரையாடித் திரட்டி அவதானிப்பு அறிக்கை ஒன்றைத் தயாரிக்கவும்.
- குழுத் தலைவரின் வழிகாட்டல் மற்றும் கலந்துரையாடல் என்பவற்றின் அடிப்படையில் ஒழுங்காக விடயங்களைப் பட்டியற்படுத்தவும்.
- குழுச் செயற்பாடாகையால் கூட்டுப் பொறுப்புடன் இயங்கவும்.
- புள்ளி வழங்குதல் தொடர்பாகக் கவனம் செலுத்தவும்.

**07. புள்ளி வழங்கும் நியதிகள்:**
- தலைப்புக்கேற்ப அவதானிப்பில் ஈடுபடல் மற்றும் ஒழுங்கு முறையில் தகவல்களைத் திரட்டல்.
- அத்தகவல்களை ஆக்கபூர்வமாகவும் தர்க்க ரீதியாகவும் முன்வைத்தல்.
- பொருத்தமான முறையில் விடயங்களைக் கோவைப்படுத்தல்.
- நேர முகாமைத்துவத்துடன் செயற்படுதல்.
- குழுவில் கூட்டாகவும் உற்சாகத்துடனும் செயற்படல்.

**08. புள்ளித்திட்டம்** :
- மிக நன்று - 04 புள்ளிகள்
- நன்று - 03 புள்ளிகள்
- சாதாரணம் - 02 புள்ளிகள்
- விருத்தியடைய வேண்டும் - 01 புள்ளி

## கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுத் திட்டம்

**01. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம்** : இரண்டாந் தவணை (கருவி - 03)

**02. உள்ளடக்கப்படும் தேர்ச்சி மட்டங்கள்** : 10.1, 10.2, 10.3, 10.4, 10.5, 10.6

**03. உள்ளடக்கப்படும் விடயப்பரப்பு** :

- சர்வதேச வர்த்தகத்துக்கு அடிப்படையான காரணிகள்.
- சர்வதேச வர்த்தகத்தின் நன்மை, தீமைகள்
- சென்மதி நிலுவையில் ஏற்படும் தாக்கம்

**04. கருவியின் தன்மை :**

- விவாதம்

**05. கருவியின் நோக்கம்:**

- ஆக்கபூர்வமாகவும் தர்க்கரீதியாகவும் அவதானிப்புச் செயற்பாட்டில் ஈடுபடுவர்.
- பேச்சுத் திறனை வளர்த்துக் கொள்வர்.
- சர்வதேச வர்த்தகத்துக்கு அடிப்படையாகவுள்ள காரணிகளை முன்வைப்பர்.
- சர்வதேச வர்த்தகத்தின் நன்மைகளையும் தீமைகளையும் முன்வைப்பர்.
- பொருளாதாரத்தில் சென்மதி நிலுவையின் பாதிப்பை விளக்குவர்.

**06. கருவியைப் பயன்படுத்தும் முறை பற்றிய ஆலோசனைகள்:**

**ஆசிரியருக்கு** :

- தேர்ச்சி மட்டம் 10.6 இறுதியில் விவாதத்தில் பங்குபற்ற வேண்டும் என்பதை தேர்ச்சி மட்டம் 10.1 இன் ஆரம்பத்தி லேயே மாணவருக்கு அறிவிக்கவும்.
- வகுப்பு மாணவர்களை இரு குழுக்களாக்கவும்.
- தேர்ச்சி மட்டம் 10.1 ஆரம்பத்திலேயே கீழ்த்தரப்படும் தலைப்புக்கள் இரண்டை திருவுளச் சீட்டு மூலம் இரு குழுக் களுக்கும் கொடுத்து விவாதத்துக்குத் தயாராகும்படி அறிவிக்கவும்.
    - சர்வதேச வர்த்தகத் தொடர்பு காரணமாக பொருளாதாரத்துக்கு நன்மை பயக்கும்.
    - சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்பு கொள்ளாமை யினால் பொருளாதாரத்துக்கு நன்மை பயக்கும்.
- ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்தின் இறுதியிலும் அதற்குரிய பாட விடயங்களை விவாதத்துக்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென அறிவிக்கவும்.

- நியமிக்கப்படும் இரண்டு பாடவேளைகளிலும் விவாதம் நடைபெற வேண்டுமென்பதையும் மதிப்பீட்டு நியதி தொடர்பாகவும் மாணவருக்கு அறிவுறுத்தவும்.
- விவாதத்தின் போது உரிய நியதிகளை அடிப்படையாகக் கொண்டு மாணவருக்குப் புள்ளி வழங்கவும்.

**மாணவருக்கு** :

- ஆசிரியர் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டலின் படி செயற்பாடுகளில் ஈடுபடவும்.
- உமது குழுவுக்குக் கிடைத்த தலைப்புக்கு ஏற்பத் தகவல் களைத் திரட்டிக் கொள்ளவும். (மத்திய வங்கி அறிக்கை, நூல்கள் என்பவற்றைப் பயன்படுத்தவும்)
- குழுத்தலைவரை நியமித்தல், ஒவ்வொரு அங்கத்தவருக்கும் கிடைக்கின்ற காலம், சந்தர்ப்பங்கள் என்பவற்றை ஆசிரியருடன் கலந்துரையாடி தீர்மானித்துக் கொள்ளவும்.

**07. புள்ளி வழங்கும் நியதிகள்:**

- தலைப்புக்குரிய விடயங்கள் முன்வைக்கப்படலும் ஒழுங்கமைப்பாக முன்வைத்தலும்.
- கருத்துக்களை ஆக்கபூர்வமாகவும் தர்க்கரீதியாகவும் முன்வைத்தல்.
- பொருத்தமான அங்க அசைவுகளும் நேர முகாமைத்துவமும்.
- எதிர்க் குழுக்களின் தர்க்கங்களை வீழ்த்துதல்.
- குழுவில் கூட்டாகவும் உற்சாகத்துடனும் செயற்படல்.

**08. புள்ளித்திட்டம்** :

- மிக நன்று - 04 புள்ளிகள்
- நன்று - 03 புள்ளிகள்
- சாதாரணம் - 02 புள்ளிகள்
- விருத்தியடைய வேண்டும் - 01 புள்ளி

## கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுத் திட்டம்

**01. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம்** : இரண்டாந் தவணை (கருவி - 04)

**02. உள்ளடக்கப்படும் தேர்ச்சி மட்டங்கள்** : 10.7, 10.8, 10.9, 10.10, 10.11, 11.1

**03. உள்ளடக்கப்படும் விடயப்பரப்பு** :

- வெளிநாட்டு நாணயச் சந்தை
- வெளிநாட்டு நாணய மாற்று விகிதம்
- நாணயப் பெறுமதியிறக்கமும், பெறுமதியேற்றமும்
- நாணய மாற்று வீதத் தேய்வும், வளர்ச்சியும்
- வெளிநாட்டு முதலீடு
- வெளிநாட்டுச் சொத்துக்கள்
- பொருளாதாரங்கள் ஒன்றிணைதல்
- வர்த்தக ஒப்பந்தங்கள்
- உலகமயமாதல்
- பொருளாதார வளர்ச்சி

**04. கருவியின் தன்மை :**

- புதிர்ப்போட்டி ஆக்கம் (ஆக்கத் தொழிற்பாடு)

**05. கருவியின் நோக்கம்:**

- குறித்த விடையொன்றைப் பெறக்கூடிய வினாக்களை அமைப்பர்.
- குழு உணர்வுடன் செயற்படுவர்.
- பல்வேறு நாணயமாற்று விகிதங்களைக் குறிப்பிடுவர்.
- நாணய மதிப்பிறக்கம், நாணய மதிப்பேற்றம், தேய்வு என்பவற்றை விளக்குவர்.
- வெளிநாட்டு முதலீடுகளின் வகைகள் பற்றி விளக்குவர்.
- பொருளாதாரங்கள் ஒன்றிணைந்துள்ள விதம் மற்றும் வியாபார ஒப்பந்தங்கள் பற்றி அறிந்து கொள்வர்.
- சர்வதேச நிதி நிறுவனங்கள் பற்றி முன்வைப்பர்.
- உலகமயமாதல் பற்றி விளக்குவர்.
- பொருளாதார வளர்ச்சி என்பதனை விளக்குவர்.

**06. கருவியைப் பயன்படுத்தும் முறை பற்றிய ஆலோசனைகள்:**

**ஆசிரியருக்கு** :

- தேர்ச்சி மட்டம் 11.1 இறுதியில் புதிர் ஒன்றை ஆக்க வேண்டும் என்பது பற்றி தேர்ச்சி மட்டம் 10.6 இன் ஆரம்பத்தி லேயே மாணவருக்கு அறிவிக்கவும்.
- மாணவர்களை நான்கு குழுக்களாக்கவும்.
- தேர்ச்சி மட்டம் 10.6 தொடக்கம் 11.1 வரையான உரிய பாட விடயங்களுக்கு அமைவாக புதிர் ஒன்றை ஆக்க வேண்டுமென்பதை அறிவிக்கவும்.

- புதிர்களை முன்வைக்க வேண்டிய திகதிக்கு ஒருவார காலத்துக்கு முன்பு ஒவ்வொரு குழுவுக்கும் புதிருக்குரிய சொற்கள் மற்றும் புதிரைப் பரீட்சித்து திருத்த வேண்டியிருப்பின் அதற்கான அறிவுறுத்தல் வழங்கவும்.
- முன்னர் தீர்மானிக்கப்பட்ட தினம் ஒன்றில் (இருபாட வேளைகளில்) புதிரை அமைத்து ஒவ்வொரு குழு மூலமாகவும் அவற்றை முன்வைக்கச் செய்யவும்.
- போட்டியொன்றின் வடிவத்தில் மற்றைய குழுவின் மூலம் புதிரைப் பூர்த்தி செய்யவும்.
- மதிப்பீட்டு நியதிகளின் படி புதிரினை முன்வைத்த ஒவ்வொரு குழுவுக்கும் புள்ளி வழங்கவும்.

**மாணவருக்கு** :

- ஆசிரியர் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டலின் படி செயற்பாடுகளில் ஈடுபடவும்.
- குழுவிலுள்ள சகலரையும் புதிர்ப் பதங்களை உருவாக்குவதில் பங்குபற்றச் செய்யவும்.
- ஆசிரியர் அறிவிக்கும் தினத்தில் அவற்றை ஆசிரியருக்குக் காண்பித்து தேவையான மாற்றங்களைச் செய்யவும்.
- ஆக்கபூர்வமான முறையில் புதிரைக் கட்டியெழுப்பவும்.

**07. புள்ளி வழங்கும் நியதிகள்:**

- புதிரின் விடைகள் தலைப்புக்குப் பொருத்தமாதல்.
- நோக்கம் நிறைவேறும் விதமாக புதிரைக் கட்டியெழுப்பவும்.
- ஆசிரியர் அறிவுறுத்தலைப் பின்பற்றல்மற்றும் குறித்த காலத்தினுள் செய்து முடித்தல்.
- குறிப்பிட்ட தொகையான சொற்கள் உள்ளடக்கப்படலும் ஆக்கபூர்வமானதாக இருத்தலும்.

**08. புள்ளித்திட்டம்** :

- மிக நன்று - 04 புள்ளிகள்
- நன்று - 03 புள்ளிகள்
- சாதாரணம் - 02 புள்ளிகள்
- விருத்தியடைய வேண்டும் - 01 புள்ளி

# உசாத்துணைகள்


(01) அதபத்து டெனி, பொருளியல் பிரவேசம் I 2009

(02) தயாரத்ன ஈ, சருவதேச வர்த்தகம், 2006

(03) தயாரத்ன ஈ, பொருளியல் வளர்ச்சியும் அபிவிருத்தியும் 2009

(04) Central Bank of Sri Lanka, Economic Prosress of Independent Sri Lanka, 1998

(05) இலங்கை மத்திய வங்கி அறிக்கை 2006, 2007, 2008, 2009

(06) இலங்கை மத்திய வங்கி, இலங்கை மத்திய வங்கியின் சமூக, பொருளாதார மாதாந்த வெளியீடு